# சகோதரி வி. பாலம்மாளின் தமிழ் பிரசுரங்கள்.

## உண்மைக்காதல் அல்லது ஒற்றுமையின் வெற்றி.

ஆசார சீர்திருத்தத்தில் உண்மையான தேவைகளை எடுத்துரைக்கும் நாவல். Cr. 8vo. 64 பக்கம். விலை அணா 5

Brings out the value of harmony in domestic affairs, and indicates the right sort of relation that ought to subsist among the members of a family—the sort of relation that would conduce most to domestic happiness. Being written in simple style, it can be read with advantage by youngsters of both sexes —*Madras Mail.* (25-3-19).

## இந்தியக் கைத்தொழில் சிறப்பு.

இது இந்தியக் கைத்தொழில் விசாரணைச் சங்கத்தின் அறிக்கையில் **கனம் பண்டித மதன்மோஹன மாளவியா** அவர்களின் தனிக் குறிப்பின் தமிழ் மொழிபெயர்ப்பாகும். திவான் பகதூர் T. ரங்காசாரியார், C. I. E. BA., B.L. அவர்கள் எழுதிய முன்னுரையுடன் கூடியது. Cr. 8vo. 216 பக்கம். விலை ரூ. 1.

The aim of the authoress is to bring home to the masses of the people the gravity of the questions discussed in the report of thendustries Commission, and in particular of the points raised in the note of dissent by the hon'ble Pundit. The work of translating official documents into the vernaculars is obviously a very difficult and troublesome one, but Sister Balammal's scholarship in Tamil has enabled her to get over the difficulties and give in chaste and intelligible Tamil an excellent translation of the original. Those interested in the industrial regeneration of the country will read the booklet with profit.—*Madras Mail.* (25-3-19).

## ராஜசேவையும் இந்தியரும்.

இது இந்திய பப்ளிக் ஸர்வீஸ் கமிஷனில் மெம்பராயிருந்த கனம் ஜஸ்டிஸ் அப்துர் ரஹீமின் மறுப்புரையின் தமிழ் மொழிபெயர்ப்பாகும். "ஹிந்து" பத்திரிகாசிரியர் ஸ்ரீமான் S. கஸ்தூரிரங்க அய்யங்கார், B A., B.L. அவர்கள் முன்னுரையுடன் கூடியது. Demy 8vo. 210 பக்கம். ரூ. 2.

**திராவிடப் பத்திரிகை.—7-11-1917.**

இந்தியாவின் ராஜரீக விஷயங்களில் ஸ்திரீகள் மிகுதியும் அக்கறை யெடுத்துக் கொள்வதில்லை என்பது சில வருஷங்கள் வரையில் வாஸ்தவமே. சில வருஷங்களாக அம்முறை மாறிவிட்டது. இப்பொழுது இந்திய ஸ்திரீகள் புருஷர்கள்போல இந்திய ராஜரீக விஷயங்களில் மிகுதியும் உழைத்து வருகின்றார்களென்பது மிஸிஸ் சரோஜினி நாயுடு, ஸகோதரி வி. பாலம்மாள் முதலியவர்களின் ஊக்கத்திலிருந்தே வெளிவரும். இந்தியாவிச் சீர்திருத்தங்கள் ஏற்படவேண்டிய சமயத்தில் ஆங்கில மறியாதவர் உதவியற்றவர்களாயிருந்திருப்பார்கள். சமயத்திற்கேற்க நமது முன்னேற்றத்தை முழுதும் கோரி, பப்ளிக் ஸர்விஸ் கமிஷனில் மெஜாரிடியாரின் தீர்மானங்களுக்கு மாறாகத் தமதுசொந்த அபிப்பிராயங்களை வரைந்துள்ள கனம் அப்துர் ரஹீமின் மறுப்புரையைத் தமிழில் மொழி பெயர்த்தது இந்திய சேவகத்தில் மிகவும் கண்ணியம் பொருந்திய ஒரு செய்கையாகும். இப்புத்தகம் உலவ ஆரம்பித்தவுடன் இந்திய ஸ்வராஜ்ய விரோதிகள் ஆங்கிலம் படியாத கிராமத்தார்களை வீண் மிரட்டல்களுக்கு உள்ளாக்கமுடியாது. இந்தியக் குடிகளின் ஒத்துழைக்கும் தன்மையை மிகுதியும் விருத்திசெய்யக் கூடிய இவ்வருமைப் புத்தகத்தை இக்காலத்தக் கிராக்கியில் துணிந்து வெளியிடவந்த சகோதரி பாலம்மாளின் முயற்சி இந்தியாவிற்கு மிகுந்த பலனைக் கொடுக்கும் என்று நாம் நம்புகிறோம். ஒரு முறை இதைப் படித்தவர்களுக்கு இந்திய ராஜாங்கத்தில் உள்ள குறை முறைகளெல்லாம் வெளிப்படையாய் தெரியவரும்.

## சுபோத ராமசரிதம்.

ராமாயணக் கதையை எளிய ஸமஸ்கிருத ஸ்லோக ரூபமாய் எழுதப்பட்டது. துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பட்டது. அணா 6.

---

சகோதரி வி. பாலம்மாள், சிந்தாமணி பத்திராதிபர் மயிலாப்பூர், சென்னை.

# SOME OPINIONS ON CHINTHAMANI.

M. K. ACHARYA AVL., M.L.A., writes under date 31-7-25 :—

Among the very small class of highly cultured Indian ladies who combine ancient scholarship with modern outlook and method Sister V. Balambal ranks very high. The best proof of this is found in the high class Tamil Magazine edited by her under the name of '*Chintamani*,' whose literary excellence combined with simpilicity, variety and usefulness must strike even a casual reader. The Magazine deserves to be read in every Tamil home,as it combines most harmoneously the spirit both of ancient and of modern India. I commend it to every true lover of the Motherland, to every literary, social and political worker in Tamil Nadu.

***

RAO BAHADUR A. C. PRANATARTHIHARA AYYAR AVL., I. S. O., Kilpauk writes under date 4-8-25:—

I have gone through several numbers of Sister Balambal's Tamil Journal the *Chintamani* and find them to be quite suitable for reading in Hindu homes and Hindu Girls' Schools. The matter is judiciously chosen, varied and interesting and such in the main as to promote the approach to Hindu ideals.

***

M. R. Ry. B. V. SANKARAKAMESWARA AYYAR Avl., B.A., *Superintendent of Schools, Pudukkottai* writes under date 12-8-25:—

*Chinthamani* contains interesting articles suited to pupils of Secondary Schools. The subjects dealt with bear on educational topics.

***

The Editor has taken much pains to present to the public a high class monthly journal, which is bound to attain a large measure of popularity among the Tamil speaking peoples of this Presidency.—*West Coast Reformer*, 22-8-24

***

Though the Editor appears to be well versed in Sanskrit, it is a pleasure to note that the language is fairly free from Sanskrit imports and is not pedantic. We wish every success to the new monthly.—*Justice*, 22-8-24.

***

It is with much pleasure that I heard of a new venture in Tamil journalism, *Chinthamani*, undertaken by that fine worker in the cause of literature and nationalism, Sister Balammal Garu. Her splendid scholarship in Sanskrit and Tamil is a guarantee that the "Chinthamani" will maintain a high standard of excellence. I trust that the Tamil public will liberally subscribe to the Magazine and thus show in a practical way their appreciation of the author's noble efforts and the duty they owe to their mother-tongue.—Mr. C. RAMALINGA REDDY, M. A. (CNTAB.), M. L. C., *Kilpauk, Madras.*

***

The mere fact that "Chinthamani" is being edited by Sister V. Balammal is in itself a guarantee that it will prove to be of immense practical utility in dispelling the cloud of ignorance now enveloping our ladies, and leading them towards emancipation consistent with Sastraic propriety.—*Arya Matha Samvardhini.*



# Some Select Opinions on "Chinthamani."

*The Hindu under date 11-4-'25 writes:—*

Sister V. Balammal has done a service to the cause of the women of this Presidency by her starting "CHINTHAMANI" a Tamil Monthly intended to raise the present status of women both politically and socially. "CHINTHAMANI" promises to fulfil that function under the able editorship of the scholarly lady. The current number of the Journal which is before us, opens with an editorial which emphasises the need for convincing the opponents of women-emancipation by explaining to them what the new movement really means, and by clearing certain very common misconceptions regarding it. A special feature of the Journal is that moral, national and domestic ideals are brought before the readers in a quiet unobstrusive way, through the medium of stories and dialogues. This number contains contributions on a variety of subjects, including one on the Baby-Welfare Movement in the Western countries.

Mr. G. SRINIVASA AYYAR, B.A., L.T., *Headmaster, Ramaswamy Chettiar s Town High School, Chidambaram*, writes under date 2-3-'25, as follows:—

**I find "Chinthamani" very suitable for school pupils. Its Contents are educative as well as instructive; and its language may be taken as a model of expression in Tamil.**

I have read through some of the numbers of the *Chintamani* edited by Sister Balammal and I am of opinion that in respect to the subjects treated they are of vital interest to the Tamil women of the present generation and that in matter of style and language this is not in any way inferior to the journals of this kind. This is a journal that should be read by women of all classes and creeds in their homes and by the girls in their schools.—FRANCIS KINGSBURY, Kilpauk, 25th July 1925.

I have read with pleasure the firstc hapter of your journal. There is need for intensive work among the women of Madras. I am glad you have taken up the task. The contents are very interesting. If the succeeding ladies take up the standard, it would be of great service to Madras ladies.—Mr. T. V. SESHAGIRI AIYAR, *Retired High Court Judge, Madras*, 24-8-24.

Of the many magazines in Tamil have come across, 'Chintamani' is by far the best. Let me tell you why. Its Tamil is simple, homely, idiomatic. Its articles are well conceived and short, making it possible for the most laboriouse lady to read and finish one of them in a single day. The subjects written upon are such as our girls ought to be very much interested in.—Mr. S. V. RANGASWAMI AIYANGAR, B. A., *Manager, Oxford University Press, Madras*, Sept. 4, 1924.

# Some Select Opinions on "Chinthamani."

Dewan Bahadur T. RANGACHARIAR, C. I. E., Dy. President, Indian Legislative Assembly, writes under date, 29th Dec. '25 as follows :—

I have been a regular subscriber to the monthly magazine "*Chinthamani*" edited by that talented and well-known lady Sister Balammal and occasionally read it also. My daughters take a copy each and read it regularly. The magazine is written in homely and beautiful Tamil. The choice of the subjects is most appropriate and well conceived for educating our ladies in worldly knowledge and social evils. The magazine is run on advanced conservative lines,—neither too radical nor violently reactionary. It is thoroughly readable from page to page. It deserves large support at the hands of the Tamil reading public. It will be a very useful magazine for students of both sexes.

K. A. NARAYAN, Esq., c/o Messrs Paterson Simons & Co., Ltd., Kuala Lumpur, writes:—

I may say that those who have been regular readers of "Chintamani" are very appreciative, especially womenfolk are jubilant over some of your picturesque and telling articles.

Wishing you continued prosperity and rapid increase in subscribers.

T. S. SANKARASUBBU, Esq., M.A., B.L., Nagercoil, writes under date 30—12—1925 as follows :—

I had an occasion to go through one of the volumes of your most invaluable and interesting magazine. I am sorry I did not make my acquaintance with it sufficiently early. "Your Chintamani is a beacon-light to Indian womanhood."

(ஒரு சகோதரர் எழுதுவது.)

அம்மா !

தமிழகந்தோறும் அவசியம் அலர்ந்திருக்க வேண்டிய தங்கள் "சிந்தாமணி" நாளுக்கு நாள் நல்வளர்ச்சி யுறுவதை கண்டு மகிழ்கிறேன். அதில் தாங்கள் எழுதிவருகிற கதைகளிலே பெண்கள் விசேஷ பிரியங்கொள்ளுகிறார்கள்.

(ஸ்ரீமதி ஆர். சி. நாயுடு, தென்னாப்பிரிகா, எழுதுவது.)

ஸ்ரீமதி சகோதரிக்கு வந்தனம்.

'சிந்தாமணி' யென்னும் சிறந்த தமிழ் மாதப் பத்திரிகையை யான் வாசித்துக் களிப்புறுகிறேன். என் போன்ற வெளிநாட்டில் பிறந்த பெண்மக்களுக்கு நமது தாய் பாஷையை வாசிக்கவும் உபாயமாகக் கற்றவர்கள் அதை விருத்தி செய்து கொள்ளத்தக்க சௌகரியமும் இடையாது. ஆதலால் பெரும் பான்மையாய் நம்பாஷையைக் கைவிட்டு இதர பாஷையைக் கைக்கொள்ளுகிறார்கள். தாங்கள் மெத்த பிரயாசை யெடுத்து வெளியிடும் "சிந்தாமணி" தமிழ் நாட்டிற்கு அளவு கடந்த நன்மையைச் செய்வதன்றி வெளி நாட்டிலுள்ள எங்களுக்கும் மிகப் பிரயோஜன முள்ளதாகவுமிருக்கிறது.



கேஸரியின்.

## லோத்ரா.

ஸ்திரீகளுக்குள்ள சகல கஷ்டங்களையும் நிவர்த்திக்கும்.

பயனடைந்த பெண்மணிகளின் அபிப்பிராயம்

ஸ்ரீமதி மிஸர்ஸ் காத்தர் எழுதுகிறார் : "நான் பத்து வருஷ காலமாய் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த ருது சூலை, வயிற்று வலி கேசரியின் 'லோத்ரா' வை உபயோகித்த பிறகு அதியாச் சரியமாய் நிவர்த்தியாயிற்று."

ஸ்ரீமதி கோபால பணிக்கர் எழுதுவதாவது :—'லோத்ரா' உபயோகித்ததால் நானும் என் சகோதரியும் ருது சூலைக் கஷ்டத்தினின்று நிவர்த்திக்கப்பட்டோம்.

இது எங்கும் கிடைக்கும்.

கேஸரி குடீரம்.

ஆயுர்வேத அவுஷத சாலை, எழும்பூர், மதராஸ்.

## கிரேட் ஈஸ்டர்ன் லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.

(இங்கிலாந்தில் ரிஜிஸ்டர் செய்யப்பட்டு ஸ்டிரெயிட் செட்டில்மெண்டில் இணைக்கப்பட்டது.)

55-வது வயது வரையில் எல்லா நபர்களையும் இன்ஷியூர் செய்யப்படுகிறது.

ஸ்திரீகள் கூட இன்ஷியூர் செய்யப்படுகிறார்கள்.

எல்லா கேஸுகளிலும் பரிமுதல் செய்யப்படாது தானாகவே ஆதரவு கிடைக்கக் கூடியது. காலத்தில் ப்ரீமியம் கட்டாததற்காக பாலிஸிகள் காலாவதியாக விடப்படமாட்டா. ஆயுள்காலத்தில் அகஸ்மாத்தாகவோ அல்லது வியாதியினாலேயோ அசக்தர்களாகி விட்டால் அவர்களுக்கு பாக்கியுள்ள காலத்திற்கு ப்ரீமியங்கள் வாங்கப்படமாட்டா. எந்த தேதி ஏற்பட்டதோ அதுவரையிற் சேர்ந்துள்ள இன்ஷியூர் செய்யப்பட்ட தொகை கொடுக்கப்படும்.

தொழில், வசிக்குமிடம், அல்லது பிரயாணம் ஆகியவற்றில் பூரணசுதந்திரம். குழந்தைகளுக்கான எண்டௌமெண்டும், மற்றுமுள்ள பிளான்களும் உண்டு. மாகாணமெங்கும் சாமர்த்தியமான ஏஜெண்டுகள் தேவை.

பிரகடனப் பத்திரத்திற்கு எழுதவும்.

**R.** வேங்கடாசாரி,

சீப் ஏஜண்டு, "ரிதர்டன் ஹவுஸ்," வேப்பேரி, மதராஸ்.

# (இந்தியன் கோவாபரேடிவ் ஸ்டோர்ஸ் கம்பெனி, லிமிடெட்.)

தலைமையாபீசு : பம்பாய்.

சேர்மன்.

ஸர் ஹார்மஸ்ஜி ஸி. டின்ஷா, Kt., M.V.O., O.B.E.

(இவர் ஏடனிலுள்ள கௌவாஜி டின்ஷா அண்டு பிரதர்ஸ் கம்பெனியின் முதலாளியும், பம்பாயில் பிரபல வர்த்தகரும், மைசூரில் பிரபல இனும்தாரும் கிலச்சுமாந்தாரும் ஆவார்.)

ஆலோசனைக் கமிட்டித் தலைவர் :

ஸர் டின்ஷா எடல்ஜி வாச்சா, Kt., J. P.

(இம்பீரியல் பாங்கு மத்தியசங்கத்தின்கவர்னர்.)

தொழிலபிவிருத்தி, ஒற்றுமை, உண்மை உழைப்பு, கல்வி, பொது நன்மை இவைகளைப் பிரசாரம் செய்து வரும் நல்லியக்கமெனப் பேர் பெற்ற பல தலைவர்களால் இந்த ஸ்தாபனம் புகழ்ப்பெற்றது. மிகப் பிரசித்திபெற்ற முதலாளிகளுக்குப் பிரதிநிதியாகவிருந்து சுதேசிய இயக்கத்தை பரவச் செய்வது. தென்னிந்தியா பர்மா ஸிலோன் முதலியவிடங்களின் முக்கிய நகரங்களுக்கு ஏஜண்டுகள் தேவை.

மைசூர் சமஸ்தானத்தின் வியாபாரம், கைத்தொழில் இவைகளின் அபிவிருத்தியை உத்தேசித்து, சில பிரமுகர்களின் வேண்டுகோளுக்கிணக்கி, மேற்படி கம்பெனியார் தங்கள் டைரெக்டர்களில் ஒருவரும், பம்பாயில் பிரபல தொழிலபிமானியுமாகிய A. B. கூடரெஜ், B. A. என்பவரை பெங்களூருக்கழைத்துள்ளார்கள். புதிதாக ஒரு கம்பெனியை ஸ்தாபித்துத் தற்போது மைசூர் கவர்மெண்டின் ஆதாவின்கீழ் இருக்கும் சில கைத்தொழிற்சாலைகளை விலைக்கு வாங்கவோ அல்லது அவைகளின் நிர்வாகவிஷயங்களை மேற்கண்ட கம்பெனியின் மூலமாகவே நடத்திவரவோ, தீவிர ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன. மேற்சொல்லியிருக்கும் ஸ்தாபன விஷயத்தில் பல கைத்தொழில் நிபுணர்களும், பாங்கர்களும், பிரபல வியாபாரிகளும், செல்வாக்குடையவர்களும், இந்தியாவிலுமல்லாது ஐரோப்பா, அமெரிக்கா தேசங்களிலும்கூட ஊக்கமுடன் கலந்துகொண்டிருப்பதால் கூடியசீக்கிரம் மேற்சொன்னவிஷயம் ஒருவித முடிவிற்கு வாலாமென சகலராலும் எதிர்பார்க்கப்படுகிறது.

விவரம் வேண்டுவோர்

பி. வி. சுப்ப ராவ்,
கௌரவ மானேஜிங் டைரெக்டர்,
இந்தியன் கோவாபரேடிவ் ஸ்டோர்ஸ் கம்பெனி லிமிடெட்,
பெங்களூர் ஸிடி.



# தமிழ் பிரசுரங்கள்.

1. நந்தன் சரித்திரம்.—ஆசிரியர் T. G. ஆராவமுத அய்யங்கார் அவர்கள், M.A. விலை அணா 10.

   Approved as a Library Book.

2. போஜ சரித்திரம்.—ஆசிரியர் K. S. ராமஸ்வாமி சாஸ்திரி அவர்கள், B.A., B.L., ஸப்ஜட்ஜ், நாகபட்டணம். விலை அணா 10.

   Approved as a Text-book suitable for School use, vide *Fort St. George Gazette*, Part I-B, dated 19-5-1925.

3. ராஜ ராஜ சோழன் I.—ஆசிரியர் P. V. ஜகதீச ஐயர் அவர்கள். R ரங்காசாரியாரவர்களுடைய முன்னுரையுடன் கூடியது. விலை அணா 8.

   Approved as a Text-Book suitable for School use.

4. இட்டார்க்கு இட்ட பலன்—ஆசிரியர் மிஸ் J. பொன்னுசாமி ராவ். விலை அணா 10.

   Approved as a suitable Text-Book, vide *Fort St. George Gazette*, dated 24-7-23.

5. திலகவதி.—சகோதரி V. பாலம்மாள் (சிந்தாமணி பத்திராதிபர்) எழுதியது. ராவ் ஸாஹெப் S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் எழுதிய முன்னுரையுடன் கூடியது. விலை ரூ. 1—4—0.

   Approved as a Library Book.

6. தமிழ் வசன லக்ஷணம்—G. தாமோதர முதலியார், B.A. எழுதியது. விலை அணா 12.

   Approved as a Text-Book for Schools and Colleges, vide *Fort St. George Gazette*, 21st October 1913.

7. இரகுவம்சம் முதல் பாகம்.—(1—6 சருக்கங்கள்) பண்டித நடேச சாஸ்திரியாரவர்கள் எழுதியது. விலை அணா 12.

8. இரகுவம்சம் இரண்டாம் பாகம்.—(7—12 சருக்கங்கள்) பண்டித நடேச சாஸ்திரியாரவர்கள் எழுதியது. விலை அணா 12.

   Parts I and II are approved as suitable class-books, vide *Fort St. George Gazette*, Part I-B page 478, dated 3-6-24.

9. சுகாதாரபோதினி.—(மூன்றாவது பாரத்திற்கு) K. வரதராஜ ராவ் இயற்றியது. விலை அணா 8.

   Approved as a Text-book suitable for School use, vide *Fort St. George Gazette*, Part I-B dated 19-5-1925.

10. மனு சரித்திரம்—சென்னை க்ரிஸ்டியன் காலேஜ் தமிழ் போதகாசிரியராயிருந்த ஆர். இரங்காசாரியார், M.A., L.T. அவர்கள் இயற்றியது. விலை அணா 10.

SRINIVASA VARADACHARI & CO., TRIPLICANE AND MOUNT ROAD, MADRAS.

"சிந்தாமணி"

இரண்டாவது வருஷம்.

ஓர் உயர்தர மாதாந்தத் தமிழ் பத்திரிகை 1924 ஆகஸ்டிலிருந்து வெளிவருவது

பத்திராதிபர் : சகோதரி வி. பாலம்மாள்.

D. Crown 8vo. 64 பக்கங்கள். உயர்ந்த அபிப்பிராயங்கள். சிறந்த வியாசங்கள்.

வருஷ சந்தா (தபால் கூலி உள்பட) உள்நாடு ரூ. 5; வெளிநாடு ரூ. 6.

தனிப்பிரதி அணா 8. மாதிரிப்பிரதி வேண்டுவோர் 8 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

சிந்தாமணி இந்தியா, பர்மா, சிலோன், தென்னாபிரிக்கா, மலாய் நாடுகள் முதலிய தேசங்களிலிருக்கும் தமிழர்கள் வீடுகளில் அதிகமாக உலாவுவதால் இதில் செய்யப்படும் விளம்பரங்கள் மிகவும் லாபகரமாகவே யிருக்கும்.

விளம்பர விகிதங்கள் :—பிரதி மாதத்திற்கும் ஒரு பக்கம் ரூ. 10; அரைப் பக்கம் ரூ. $6\frac{1}{2}$; கால் பக்கம் ரூ. 3. விளம்பரங்கள் தோன்றும் இதழ்கள் இனாமாய் அனுப்பப்படும்.

நீடித்தகால விளம்பரங்களுக்குப் பிரத்தியோகமான விகிதங்கள். விவரத்துக்குப் பின்கண்ட விலாஸத்திற்கு எழுதவும்

மானேஜர்,

சிந்தாமணி ஆபீஸ்,

விவேகாச்ரமம், ஸலிவன்ஸ் கார்டன் ரோட், மயிலாப்பூர், சென்னை.


## பத்திராதிபர் அறிவிப்பு.

1. வியாச மெழுதுவோர் தயவு செய்து ஒரே பக்கத்தில் தெளிவாய் எழுதி யனுப்புவதுடன் பெண்மக்களின் முன்னேற்ற விஷயமாகவே பெரும்பாலும் எழுத வேண்டு மென்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

2. வியாச மெழுதுவோர்களின் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதி யல்லர்.

3. ஓரணா அனுப்பினால் பிரசுரிக்கப்படாத வியாசம் திருப்பியனுப்ப சௌகரியப்படும்.

4. வியாசங்கள், மதிப்புரைப் புத்தகங்கள் இவைகளை பத்திராதிபர், "சிந்தாமணி," "விவேகாச்ரமம்," சலிவன்ஸ் கார்டன் ரோட், மயிலாப்பூர், சென்னை, என்று எழுதவும்.

5. மாதிரிக் காபி வேண்டுவோர் எட்டணா ஸ்டாம்பு அனுப்பவும்.

6. நிருபம் எழுதுவோர் அவைகளில் வரக்கூடிய பாடல்களைப் பிழையின்றி கவனித்து எழுதுதல் முக்கியம்.

7. நிருபங்களில் விசேஷமாகப் பாடல்கள் போட்டு நிரப்பிவிடாமல் விஷயத்தைத் தெளிவாயும் சுருக்கமாகவும், தொடர்ச்சியாய் வரக்கூடிய வியாசத்தை முழுவதும் ஒரே தடவையிலும் எழுதியனுப்பும்படி விஷயதானம் செய்வோர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

8. எட்டணா முன்பண மனுப்பிச் சிந்தாமணி மாதிரிக் காபி பெற்றுக் கொண்டவர் சந்தாதாராகும் பக்ஷத்தில் மாதிரிக் காபி விலை எட்டணா வருஷ சந்தாவில் கணக்கிட்டுக் கொள்ளப்படும்.

9. சிந்தாமணியின் நிர்வாக விஷயங்கள், விளம்பர சம்பந்தமான கடிதங்கள் முதலியவைகளுக்குக் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,

சிந்தாமணி ஆபீஸ்,

சலிவன்ஸ் கார்டன் ரோட், மயிலாப்பூர், சென்னை.


# CHINTHAMANI.

A HIGH CLASS TAMIL MONTHLY.

*(Devoted mainly to the cause of Indian Women.)*

EDITOR SISTER V. BALAMMAL.

Vol. II.] January 1926. [No. 6.


श्रीशारदायै नमः ।



श्रीरामचन्द्र परब्रह्मणे नमः

## சிந்தாமணி

### சுபோத ராம சரிதம்.


COMPOSED AND ANNOTATED BY
SISTER V. BALAMMAL
DAUGHTER OF
*Late Dr. A. R. VAIDYANATHA SASTRIAR, M.A., M.B. & C.M.*



*(All Rights reserved by the Authoress.)*


### सुबोधराम चरिते

### ॥ अयोध्याकाण्डः ॥

सीतालक्ष्मणसंयुक्तो जटाधारी सवल्कलः ।
गुहेनानीतया नावा ततार स सुरापगाम् ॥ २२ ॥

**जटाधारी** *சடை தரித்தவரும்* **सवल्कलः** *மரவுரி தரித்தவரும்* **सीतालक्ष्मणसंयुक्तः** *ஸீதையுடனும் லக்ஷ்மணருடனும் கூடினவருமான* **सः** *அந்த ராமர்* **गुहेन** *குகனால்* **आनीतया** *கொண்டு வரப்பட்ட* **नावा** *ஓடத்தினால்* **सुरापगां** *கங்கையை* **ततार** *தாண்டினார்* ॥ २२ ॥

अथ रामश्चित्रकूटे सुमित्रासुतनिर्मिताम् ।
पर्णशालां सजानिस्सन्नध्यवात्सीत्सुखं गिरौ ॥ २३ ॥

**अथ** *பிறகு* **रामः** *ஸ்ரீராமர்* **चित्रकूटे** *சித்திரகூடமென்ற* **गिरौ** *பர்வதத்தில்* **सजानिस्सन्** *பத்தினியுடன் கூட* **सुमित्रासुतनिर्मितां** *லக்ஷ்மணரால் கட்டப்பட்ட* **पर्णशालां** *பர்ணசாலையில்* **सुखं** *சுகமாக* **अध्यवात्सीत्** *வசித்தார்* ॥ २३ ॥

रामादेशात्सुमन्त्रेऽपि प्रत्यायाते महीपतिः ।
वनमेवागमद्राम इति श्रुत्वा मुमूर्च्छ सः ॥ २४ ॥

**रामादेशात्** *ஸ்ரீராமரின் கட்டளைப்படி* **सुमन्त्रेऽपि** *சுமந்திரரும்* **प्रत्यायाते(सति)** *திரும்பி வந்ததும்* **रामः** *ஸ்ரீராமர்* **वनमेव** *வனத்தையே* **अगमत्** *அடைந்தார்* **इति** *என்று* **श्रुत्वा** *கேட்டு* **सः** *அந்த* **महीपतिः** *அரசனான தசரதர்* **मुमूर्च्छ** *மூர்ச்சித்தார்* ॥ २४ ॥

मुनिशापं दशरथः कौसल्यायै निवेद्य च ।
हा राम राम रामेति प्रलपन्नगमद्दिवम् ॥ २५ ॥

**दशरथः** *தசரதர்* **मुनिशापं** *ரிஷியின் சாபத்தை* **कौसल्यायै** *கௌசலைக்கு* **निवेद्य च** *சொல்லிவிட்டும்* **हा राम राम राम इति** *ஹா ராம ராம ராம என்று* **प्रलपन्** **(सन्)** *பிரலாபித்தவராக* **दिवं** *சுவர்க்கத்தை* **आगमत्** *அடைந்தார்* ॥ २५ ॥

*(To be continued.)*

# சிந்தாமணி


தமிழ் நாட்டுப் பெண்மணிகளின் முன்னேற்றத்தை முக்கிய
மாகக்கொண்டு வெளிவரும் ஓர் உயர்தர மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

பத்திராதிபர். சகோதரி வி. பாலம்மாள்.

மலர் II.] குரோதன—தை. [இதழ் 6.


## சிந்தாமணிக்கு நிகழும் இரண்டாம் வருஷ வாழ்த்து.

(ரெங்கூன் இலக்கண வித்வான் நா. கோவிந்தசாமி பண்டிதர்.)

*மாகத மயிலும் வளரொளி வேலும்*
*சரவண பவனுஞ் சமயத் துணையே.*

*நீர்கொண்ட வேணி நிமலன் திருமகனே!*
*தார்கொண்ட வேல்கொண்ட சண்முக! செங்—தூர்கொண்ட*
*எந்தாய்! நீ யுள்ளமட்டும் இவ்வுலகிற் செய்யதமிழ்ச்*
*சிந்தா மணிதிகழச் செய்.* (1)

*ஐந்து முகத்தோ டதோமுகங்கொண் டாயெனவே*
*தந்திரங் கூறல் சாதமன்றோ?—எந்தைகேள்*
*சிற்றறிவின் சிலர் தெரியாது செய்திட்ட*
*குற்றத்தை நீக்கியருள் கூர்.* (2)

*தொன்னூற் குறுமுனியுந் தூய தமிழ்நாடும்*
*பன்னூற் கடலளந்த பண்டிதரும்—முன்னூல்சொல்*
*பன்னாள் தமிழ்வளர்த்த பாண்டியர்பின் வந்தவரும்*
*என்னாளும் வாழ்க இனிது.* (3)

புள்ளி மயிலூர் புலவ!நீ கேட்டிமுன்
வள்ளியர்பி தேய்பிறையே வண்டமிழ்தான்—ஒள்ளியாய்!
பன்னிரண்டு கண்ணிருந்தும் பார்க்கவிலை. யென்செய்யும்
உன்னடிநோக் குற்ற துலகு. (4)

தன்னிகரி னீயிருந்த சங்கத் தமிழ்மூன் றும்
குன்னியதென் கூறு குறைவில்லாய்!—பன்னிரண்டு
காதிருந்துங் கேளாயோ? கற்றவரின் விண்ணப்பம்
ஈதென்? விளையாட் டியம்பு. (5)

ஞான மணிவிளக்காம் நால்வர் தமிழ்மறையும்
ஆன படையும் அரும்புகழும்—போன
பிறகே பெருந்தமிழின் பெட்பென்ன? பாரில்
இறவா துயர்ந்திடவே யெண். (6)

பொற்புற்ற தொண்டர் புகல்பெரிய செந்தமிழின்
அற்புதமோ! மிக்கவென்ப ராயறிஞர்—சிற்பர்
எழுதொணு மேனியாய்! இக்கலியிற் பொய்த்துப்
பழுதடைய லாமோ? பகர். (7)

உலகெலா மென்றெழுந்த வொப்பறுசொற் கொண்ட
பலவடியார் நற்சரிதம் பாண்டி—நிலமன்
இருமைவினை யாடல் இலைமறைகா யான
திருமருக! காரணமென்? செப்பு. (8)

நற்றமிழைக் கற்போரும் ஞானமுறக் கேட்போரும்
உற்றநூ லுண்மை யுரைப்போரும்—பற்றுடனே
ஆதரிக்கும் வள்ளியரும் ஆன்ற தமிழ்நாடும்
மாதவரும் வாழ்வுறவே வை. (9)

திரண்ட விடயமுறுஞ் சிந்தா மணிக்கி
திரண்டாம் வருடம் இயங்கல்—முரண்படா
மேவுறுசீர் கொண்டு விளங்கிப் பெறல்வேண்டும்
பூவுலக மெங்கும் புகழ். (10)

# பெண்மக்களும் தேச பாஷையும்.

## பத்திராதிபர்.

(260-வது பக்கத்தொடர்ச்சி.)

பெண்களின் கல்வி யறிவானது குறுகிய தாயும் உயர்வற்றதாயு மிருக்கவேண்டுமென்று நாம் கூறவில்லை. ஆடவர்களைக் காட்டிலும் பெண்கள் அறிவிற்சூழ்ந்தவர்களென்று சொல்லத் துணிதல் மதியீனமாகும். நிதானமென்ற அபூர்வ சக்தியைக்கொண்டு விளங்கும் பெண்மணிகளுக்கு அறிவு அதிகமென்றும் சொல்லலாம். பெண்கள் தேச ஊழியத்தில் ஈடுபடுவதற்கும் கல்வித் துறையில் விசேஷப்பயிற்சியுறுவதற்கும் நியாயமான வழியில் கண்ணியத்துடன் சுயமாக ஜீவிப்பதற்கும் பாத்தியமுள்ளவர்கள் தான். முற்கால சரிதைகளைக் கவனித்தாலும் பெண்கள் பலர் பண்டிதைகளாகவும் சன்னியாசினிகளாகவும் நூலாசிரியர்களாகவும் அரசர்களால் சன்மானிக்கப்பட்டவர்களாயும் ஆன்ம ஞான விசாரத்தில் சித்திபெற்ற துறவிகளாயும் இருந்து வந்தார்களெனத் தெரிகிறது.

ஆனால் பெண்கள் என்று பொதுவாய்க் கூறுமிடத்தில் அதற்கடுத்தபடியாக விவாகம், குடும்ப நிர்வாகம் என்ற இருசொற்களே முன் நிற்கின்றன. குடும்ப நிர்வாகமென்றால் கல்வியறிவு தேவையில்லை என்று சொல்லி விட முடியுமா? ஒரு பெண்ணானவள் மனைவி என்ற ஸ்தானத்தை வகிக்குங்கால் அவளுடைய கடமைகளைச் செவ்வனே செய்து முடிப்பதற்குக் கல்வி யறிவே முக்கியமன்றோ. பொறுமை, அடக்கம், சிக்கனம், பிறரை யுபசரித்தல் இவைகளே ஒரு பெண்மணிக்கு அணிகலன்களாயின் இவைகள் கல்லாத பெண்மணிகளிடத்தில் எவ்வாறு பொருந்தியிருக்க முடியும். தன் மக்களை இளமைப் பருவத்தில் நோய் நொடியின்றி வளர்த்து நன்னெறியிற் செல்லும்படி நீதி போதங்களைப் போதிக்கும் தாய்க்கு வைத்திய சாஸ்திர பரிச்சயமும் கல்வி யறிவினால் ஆராய்ச்சியும் மெத்த அவசிய மில்லையா?

சில சமயங்களில் தனது குழந்தைகளுக்குத் தானே கார்டியனாக இருந்து சொத்துக்களைப் பரிபாலிக்க வேண்டியவளாயிருக்கும் பெண்மணிக்குச் சட்ட ஞானமும் தேவையன்றோ. ஏழ்மை வாய்ந்த குடும்பத்தில் ஜீவனத்தைக் கஷ்டமின்றி சுலபமாகவும் சந்தோஷமாகவும் கழிப்பதற்கு ஏதேனும் ஒரு தொழில் முறையைக் கற்றிருத்தலும் பெண்களுக்குப் பேருபகாரம் விளைவிப்பதாகு மென்பதை மறுப்பாருண்டா?

தெய்வகதியில் இளமையிற் கணவனையிழந்து பரிதபிக்கும் பெண்மணிகளுக்குத் தங்களைத் தாங்கள் காத்துக்கொள்ளக் கூடிய சக்தியையும் சுலபமான ஜீவனோபாயத்தையும் மனதிற்குச் சாந்தியையும் அளிக்கக்கூடிய கல்விப் பயிற்சியை யளிக்காமலிருத்தல் துரோகச் செயலல்லவா? பூர்வீகம், நாகரிகம் இரண்டை யனுசரித்தும் பெண்மணிக்குக் கல்விப் பயிற்சியானது இன்றியமையாததெனவே ஏற்படுகின்றது.

பெண்மணிகளைப் படிப்பிப்பதில் தாய்தந்தையருக்கும் அவகாசம் மிகக் குறைவாம். ஒரு பெண்மகள் எத்துறையிலேனும் தீவிர முன்னேற்றத்தை யடைவதாயின் அதற்கு அவள் கணவனின் கூட்டுறவும் சிலருக்கு (தனது வாழ்நாளின் லக்ஷியத்தைத் தானே தீர்மானிக்க வேண்டியவர்களான துர்ப்பாக்கியம் வாய்த்த பெண்மணிகளுக்கு) தனது சுயத்தீர்மானமுமே மூலகாரணமாக விருக்கின்றன. இவ்விரண்டு

வழிக்கும் ஆதாரமாகவும் 'இளமையிற் கல்' என்பதற் கிணங்கவும் பெற்றோர் தமது பெண்களுக்குச் சுலபமாகவும் பரிபூரணமாகவும் அளிக்கக்கூடியது தேசபாஷைக் கல்வி யொன்றே யாகும். இதை விடுத்து ஒரே மட்டாகத் தமது பெண் மகவைச் சகல சாஸ்திர பாரங்கதையாகச் செய்து விடுவதாய் மனப்பால் குடித்தும் பெண்ணுக்கு நாகரிக முறையில் நல்ல வரனைக் கிடைக்கவேண்டுமே என்ற எண்ணத்தை முன்னிட்டும் தற்காலக் கல்வியை யாதரித்தல் பெண் கல்வி யாகவே மாட்டாது. கட்டாய இலவசக் கல்வி பரவி வரும் இச்சமயத்தில் பெண் கல்வியும் பெண் மக்கட் குரிய படிப்பும் பரவவேண்டுமாயின், பெண் சமூகம் முழுதும் பொதுவாகக் கல்வி யறிவைப்பெற வேண்டுமாயின், தேச பாஷையை நன்கு போதித்தலே பெரும் பயனளிக்குமென்பதைக் கல்வி யிலாகா அதிகாரிகளும் பெற்றோர்களும் ஜனப்பிரதிநிதிகளும் கவனித்துத் தக்க சிரத்தை எடுத்தல் முக்கியம். சிறுமியர் தமதிளம் வயதில் தமது தாய் மொழியைப் பயில்வாராயின் கூச்சமற்றுப் பயிலக் கூடிய பன்னிரண்டு வயதிற்குள் நல்ல தேர்ச்சியையடைந்து விடுவர். பிறகு தமக்குத் தேவையான கலைகளை இத் தாய்மொழியிலுள்ள கிரந்தங்கள் மூலமாகவே நன்கறிந்து கொள்ளவும் இடமுண்டு. ஆதலின் ஆடவர் தமது கல்விப் பயிற்சியில் எவ்வித அபிப்பிராயம் கொள்ளினும் பெண்மக்களுக்குத் தேசபாஷை முக்கியமென்பதை யுணரவேண்டு மென்பதே நமது வேண்டுகோள்.

# கர்வம் கொண்ட அரசன்.

(ஒரு சிறு கதை)

ஸ்ரீமதி பத்மாபாயி.

முன்னொரு காலத்தில் செல்வமும் செல்வாக்கு முடைய ஜிதேந்திரன் என்னுமோர் அரசன் இருந்தான். அவனது இளம் பருவமுதல் அவன் விரும்பிய யாவும் அவனுக்குக் கிடைத்து வந்தன. அழகிய மனைவியும், அகன்றதொரு அரசும், சென்ற விடமெல்லாம் ஜயமும் அவன் கோரியவாறே நிறைவேறி வந்தன. பாருக்கொரு இறைவனாய், வணங்காமுடி வேந்தனாய் வாழ்ந்து வந்தான். இருப்பினும், தினே தினே பெருகி வந்த அவனது திரண்ட செல்வத்தினால் அவனருகிலிருந்தோர் சிறிதும் இன்பமுறவில்லை. அதிர்ஷ்ட தேவதையின் கடாட்சம் பெற்ற அவனிடம் தற்பெருமையும் தன்னை நிகர்ந்தவர் ஒருவருமில்லை யென்ற அகம்பாவமும் பொங்கிவழியத் தலைப்பட்டது. தன்னருகில் அமர்ந்து சாப்பிடவும் ஒருவரும் தகுந்தவரல்லர் என்று அவன் கூறிக் கொண்டான். எளிதில் அரசனது புன்னகையையும் திருப்தியையும் பெறக்கூடிய விதூஷகர்களும் இவ்வரசனிடம் எந்த உரை அரசனது கர்வத்தைப் பாதிக்குமோ வென்ற பயத்துடன் பழகி வந்தனர். சுருக்கிச் சொல்லுமிடத்தில், அரசனது உத்தரவின்றி அவனிடம் பேசுபவர் மரணதண்டனைக்கு உள்ளானார்கள்.

வேனிற் பருவத்தில் ஒருநாட் காலை ஜிதேந்திர மன்னன் வழக்கத்தை விடச்சிறிது முன்னதாகவே துயிலெழுந்தான். தனது வீரதீரச் செயல்களைப் பற்றியும் தான் பெற்றுள்ள



மிகுதியான உயர்ந்த வஸ்துக்களைப் பற்றியும் தன் ஐசுவரியத்தையும் பற்றியும் அக்காலையில் எண்ணமிடலானான்: "எத்தகைய பெருமை யான் அடைந்துள்ளேன். என் தந்தை காலத்திலிருந்த ராஜ்யம் என்னால் பதின் மடங்கு விரிந்துள்ளது. முந்திய அரசர்கள் வாழ்ந்து வந்த மாளிகைகள் இருந்த இடமானது இப்பொழுது நகர ஜலதாரையின் சிறுவாய்க்கால் செல்லும் வழியாகவிருக்கிறது. பல சிற்றரசர்கள் உயர்ந்த காணிக்கைகள் அளித்து என் பாதத்திற் பணிகிறார்கள். மரணமும் என்னைக்கண்டு அஞ்சி விலகிவிடும்; சாதாரண மனிதர்களைவிடப் பல அம்சங்களில் சிரேஷ்டமானவனான நான் ஏன் பிணி, மூப்பு, மரணங்களினாற் பீடிக்கக் கூடாதவனாக வாழ்ந்து எல்லா உலகங்களையும் அனுபவிக்கக் கூடாது?" இவ்வாறு ஆகாசக்கோட்டை கட்டிக்கொண்டே அரசன் மறுபடியும் உறங்கி விட்டான். சூரியன் ஆகாயத்தின் உச்சியில் வந்து கொண்டிருந்தான். தேஜோமயமான அவனது கிரணங்கள் பசும்புற்றரையிற் படிந்து உலகிலுள்ள வஸ்துக்களுக்கெல்லாம் உயிரளித்து இயற்கை யழகைப்பெருக்கிக் காட்டிடா நின்றன. அரசன் ஜிதேந்திரன் கண் விழித்து ஜன்னல் வழியாகக் கண்களுக்கினிய காட்சியைக் கண்ணுற்று, வேட்டையாடத் தகுந்தசமயமெனக் கருதினான். மறுநிமிஷத்தில் யாவும் சித்தமாயின. வேடர்கள் வேட்டை நாய்களைப் பற்றிக்கொண்டு வழி காட்டியவாறு முன் சென்றார்கள். அரசன் மெய்காப்பவர் பின் தொடரக் காற்றினும் கடுகிச்செல்ல வல்லதோர் புரவியின் மீதூர்ந்து சென்றான். துள்ளிக் குதிக்குமோர் மானைப் பின்பற்றிச் சென்ற ஜிதேந்திரன் பரிவாரங்கள் கண்களுக்ககப்படாமல் அடர்ந்த கானகத்துள் வெகு தூரம் சென்று விட்டான். மானும் கண்களுக்குத் தென்படாமல் தப்பியோடிற்று.

தெளிந்த நீர் பெருகிச் செல்லு மொரு நதிக்கரைக்கு ஜிதேந்திரன் வந்து சேர்ந்தான். வெகு தூரம் சவாரி செய்து வந்ததினால் களைப்பு மேலிட்ட அரசனுக்கு அந்நதியில் நீந்தி விளையாட ஆவலுண்டாயிற்று. குதிரையை மரத்தில் கட்டிவிட்டுத் தனதாடையைக் களைந்து கரையில் வைத்து விட்டு அரசன் ஜலத்திலிறங்கினான். சிறிது நேரம் நீராடி விட்டுக் கரையேறினான். அவனுக்கு ஆச்சரியமும் கோபமும் பொங்கிவர, அரசனது குதிரையும், உடையும் அங்கு காணப்படவில்லை. அரசனது தலை முதல் கால் வரை கோபத்தினால் சிலிர்த்தது. குளிர்ந்த நீரில் ஸ்நானம் செய்ததற்குப் பதிலாக வியர்வை யரும்பியது. பலங் கொண்டமட்டும் தன் பரிவாரங்களைக் கூவி யழைத்தான். இவன் என்ன கூவியும் பதிலொன்றும் கிடைக்கவில்லை. இச்சத்தத்தைக்கேட்டு மருண்ட சில பட்சிகள் கூச்சலிட்டுப் பறந்து சென்று பிறகு தங்கள் பயத்திற்குக் காரணத்தைக்காணாதவைகளாய் அமைதியாய்க் கூட்டிற்குட் புகுந்து கொண்டன. யாரோ திருடன் தன் குதிரையையும் உடையையும் கவர்ந்து சென்றிருப்பானென ஜிதேந்திரன் நினைத்தான். வெற்றுடம்புடன் இங்கு நின்று யோஜித்துக் கொண்டிருப்பதைவிடச் சிறிது தூரத்திற் காணப்பட்ட சிறியதொரு கட்டடத்திற்குப் போகலாமென்று எண்ணினான். அரசனது வாழ்நாளில் அவனது ஏவல்களைத் தலையால் வணங்கிப் பெறும் பணியாளரில்லாமையை அப்பொழுதுதான் அவன் அடைந்தான். அவன் முகம் கோபத்தினாற் சிவந்தது. காலினால் பூமியை உதைத்தான் கட்டடத்தை நோக்கி நடந்தான். அது காட்டில் வசித்து மிருகங்களை வேட்டையாடிக் கொண்டிருந்த காடு காவற்காரனுக்கு அரசன் சிறிது நாள் முன் அவனது ஊழியத்திற்கு வெகுமதியாகக் கட்டிக்கொடுத்த சிறு மனை. அங்கு போனதும்

அதன் தலைவன் தன்னை அடிபணிந்து ஆடை ஆகாரம் கொடுத்துபசரித்துக் கௌரவிப்பானென்று அரசன் தன்னைச் சமாதானம் செய்து கொண்டான்.

அரசனை விட்டுப் பிரிந்த பரிவாரங்கள் ஜிதேந்திரனைக் காணமல் என்ன செய்து கொண்டிருந்தார்கள்? காடு முழுமையும் சுற்றி அரசனைக் காணாது கலங்கியிருந்த அவர்கள் ஜிதேந்திரனது உடையை யணிந்தும் அவயவ அமைப்பிற் சிறிதும் வேற்றுமையின்றியும் அரசனது குதிரையில் ஏறிச் செல்லும் ஒருவனைக்கண்டு தங்களரசனென்பதில் எள்ளளவும் ஐயமின்றி வந்தனைபுரிந்து அந்திப் பொழுதிற் புதிய அரசனைப் பின்பற்றி நகரம் செல்வாராயினர். சபையில் வீற்றிருந்த பிரபுக்களும் மற்றவரும் அவ்விடம் கொலுவிருக்கும் புதிய அரசனிடம் வேற்றுமை காணாதவராய் தங்கள் மன்னவனெனவே கருதியிருந்தனர். ஜிதேந்திரனது தேவியும் தன் கணவனென்றே புதிய அரசனைப் பாவித்தாள். நகரத்திலும் அரசமாளிகையிலும் வழக்கம் போலவே எல்லாக் காரியங்களும் நடை பெற்று வந்தன.

ஆனால் ஜிதேந்திரனது அதிர்ஷ்டம் வேறு விதமாக இருந்தது. அக்காட்டுத் தலைவனது இருப்பிடம் வந்துசேர்ந்து யாராவது வந்தால் தம்மை அறிவிப்பதன் பொருட்டுக் கட்டியிருக்கும் மணியின் கயிற்றைப்பற்றி அரசன் இழுத்தான். கதவைத் திறக்கும் பையன் உள்ளிருந்தபடியே எட்டிப்பார்த்து சரியானபடி வஸ்திரமணியாமல் நின்றுகொண்டிருக்கும் அரசனைப் பார்த்து தான் காண்பது கனவோ நினைவோ எனக்கருதிக் கண்களைத்துடைத்துப் பார்த்தான். 'யாரது கதவைத் தட்டுவது? சரியானபடி உடையணியாமல் வெளிவர உனக்கு வெட்கமாயில்லையா? வெற்றுடம்பைக் காண நாங்கள் விரும்பவில்லை. போய்விடு இவ்விடத்தை விட்டு. வீட்டிற்குப்போய் சரியானபடி உடை யணிந்துவா' என்று அப்பையன் கூறினான். அரசனது கோபம் பன்மடங்காயிற்று. 'சீ! மூட்டாள்! இந்த நிமிஷமே கதவைத்திற! உன் இறைவன் ஜிதேந்திரன் இங்கு வந்திருக்கிறான். அவனுக்கு ஆகாரம் உடை யாவும் சித்தமாயிருக்கட்டுமென்று உன் எஜமானிடம் உரைத்துவிட்டு வா. சீக்கிரம் போ; இல்லாவிடில் என்கோபத்திற் கிரையாவாய்' என்று கர்ஜித்தான். பையன் இடி இடியெனச் சிரித்தான். "வெகு அழகாயிருக்கிறது! நன்றாயிருக்கிறது நீ சொல்வது! இவ்வளவு சொல்பவன் தன் சக்தியினால் இவ்விரு கதவையும் தூளாகச் செய்து விட்டிருக்கலாமே உள்ளே வர இலகுவாய்" என்று பரிகாசம் செய்து கொண்டே அப்பையன் அவ்விடம் விட்டகன்றான். ஜிதேந்திரன் பலமாகக் கதவைத் தட்டினான். போன பையன் திரும்ப வந்து கதவைத் திறந்தான். "வீணாகக் கூச்சலிடாதே. நீ விரும்பியபடி உன்னை என் எஜமானனிடம் கொண்டு போய் விடுகிறேன். ஆனால் அங்கு ஏன் வந்தோமென்றுதான் நீ நினைக்கும்படி ஆகப்போகிறது. நட சீக்கிரம்."

ஒரு விசாலமான அறையில் ஓராசத்தின் மீது அக்காடுகாவற்றலைவன் அமர்ந்திருந்தான். அவன் எதிரில் ஒருமேஜையின் மீது திராக்ஷாரசம் ஒரு கிண்ணத்தின் நிறைய வைக்கப்பட்டிருந்தது. பழவகைகள் சில தட்டுகளில் அம்மேஜையின் மீதிருந்தன. சூரியனுடைய மஞ்சள் வெயில் ஜன்னல் வழியாகப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. அவன் தன் வாழ்நாட்கள் முழுதும் அரசனது நம்பிக்கையான ஊழியனாக விருந்தமையால் அரசன் அவனுக்கு அவனுடைய உழைப்புக்குத் தகுந்த கைம்மாறு அளித்திருந்தான். அரசனது சபையில் வந்து உட்காரவும் அவனுக்குரிமையுண்டு. அந்நம்பிக்கையுள்ள ஊழியன் தனது திருப்தியும், சந்தோஷமும் நிரம்பிய கண்களை சுவர்களின்மீது மாட்டப்பட்டிருக்கும் உயர்ந்த மிருகங்களின் தலைகள், தோல்கள், இன்னும் அரசன் தனக்கு வெகுமதியாக வளித்த தந்தப் பிடியுள்ள கத்திகள், தங்கமுனையுள்ள அம்புகள் இவைகளின் மீது செலுத்தினான். அவனுக்கு எஜமானனளித்த வீடும், தோட்டமும் அவனுடைய தேவையைத் தீர்க்கப் போதுமான சௌகரியத்தையுடையதாயிருப்பதைக் கண்டு அவன் திருப்தியடைந்தான். அதே வீட்டில் எத்தனை முறை ஜிதேந்திர மன்னவனை அவன் வேட்டைக்கு வரும்பொழுதெல்லாம் உபசரித்திருக்கிறான்!

இவனது சந்தோஷகரமான சிந்தனையை அரசன் வரவைக் கண்டு சிரித்த அப்பையனது இறைந்த சத்தமானது கலைத்தது. அப்பையன் தலை வணங்கி முன் வந்து நின்றான். "ஐயனே, வாசலில் ஒரு மனிதன் தன்னை நமது அரசனெனக் கூறுகிறான். தங்களைப் பார்க்க வேண்டுமென முறையிடுகிறான். இங்கழைத்து வரட்டுமா?" "ஆம். அவனை இங்கு வரச் சொல். காரியார்த்தமாகப் பைத்தியக்கார வேஷம் போடுகிறானா அல்லது உண்மையா என்பதையும் கவனிப்போம். அவன் நம்மிடத்திற்கு இதைவிட வேறு சமயத்தில் வந்திருக்கலாம்." என, அப்பையன் திரும்பிச்சென்றான். முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க ஜிதேந்திரன் அங்கு தோன்றினான். வரும் வழியில் வேலை செய்யும் ஆட்களெல்லாம் இவனைப் பார்த்து சிரித்தது இவனது உள்ளீரலில் ஈட்டி பாய்ந்ததுபோலாயிற்று. "இருக்கட்டும். எப்படியும் அவர்கள் தலைவன் நம்மை யடையாளம் கண்டுகொண்டு, நமக்குத் தலைவணங்கும் பொழுது, இவர்கள் காலில் விழுந்து பணிவார்களல்லவா? அப்பொழுது பார்ப்போம்" என்று





தன்னை ஒருவாறு அடக்கிக்கொண்டான். "இவன்தானா அம்மனிதன்" என்று அக்காடு காவற்றலைவன் கேட்டான். ஜிதேந்திரன் பேசலானான்: "என் உண்மையுள்ள ஊழியனே! உன் மன்னன் தனது பதவிக்குரித்தான ஆடைகளின்றி உன் முன்னிற்பது உனக்கு ஆச்சரியமாக விருக்கும். அருகிலிருக்கும் உன் மேலங்கியை நான் அணிவதற்கு எடுத்துக் கொடு. நான் தற்செயலாய் உடைகளையும் வாகனத்தை இழக்க நேரிட்டதைப்பற்றிக் கூறுகிறேன். உன் வேலை யாட்கள் தங்கள் அறிவீனத்தினால் என்னை இத்தருணத்தில் அறியமாட்டாதவர்களானார்கள். ராஜத்வத்தை அதன் மேல் வேஷமாகிய ஆடம்பரமின்றியே நீ யறிவாய். என்ன! நீயும்கூடவா மறுக்கிறாய்?" அரசன் இதற்குமேல் பேசமாட்டாதவனானான். அவ்வனவாசி அரசனை மரியாதையைக் குறிக்காமல் மட்டுமல்ல, பரிதாபத்துடனும் உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தான். தன் கண்களை ஜிதேந்திரனை விட்டுத் திருப்பித் தன் வேலையாளை நோக்கி உரைத்தான்: "ஐயோ! பரிதாபம்! சித்தம் கலங்கிய இம்மனிதனை அழைத்துக் கொண்டு போங்கள். இவனுக்கு வேண்டுவனவற்றைக் கொடுத்துதவுங்கள். ஆடையாகாரம் கொடுத்துப் பக்ஷமாய் நடத்துங்கள். இன்றிரவு மட்டும் அவனிங்கேயே யிருக்கட்டும். இதைவிட நாம் செய்யக்கூடியது ஒன்றுமில்லை. பகவான் ரக்ஷிப்பாராக. சில சமயம் இப்படிப்பட்ட பைத்தியம் தெளிவதுமுண்டு." ஜிதேந்திரன் அவ்வனவாசி தன்னை நம்பாதது மட்டுமல்ல' தான் புத்தியிழந்தவனெனக் கூறியதனால் மிகவும் ஆத்திரங்கொண்டான். வாயில் வந்தபடி துரோகியென்றும், நன்றிகெட்டவனென்றும் வைதான். தன்னைக்கூட்டிக்கொண்டுபோக வந்த ஆட்களை யிடித்துத் தள்ளிவிட்டு அவர்களிடமிருந்து திமிறிக்கொண்டு வாசலுக்கு வெளியே ஓடினான். இவனது செய்கை அக்காடு காவற்

றலைவனது சந்தேகத்தை உறுதி செய்தது. "அடுத்தமுறை அரசன் ஜிதேந்திரனைக் காணும் பொழுது இதைப்பற்றிக் கூறவேண்டும். இப்பொழுது இந்த ஞாபகத்தைத் தவிர்க்கப் புல்லாங்குழலை எடுங்கள். சிறிது கேட்போம்" என அங்கு கவலைக் கேடாகச் சங்கீதக் கச்சேரி நடந்துகொண்டிருந்தது.

கோபத்தினாலும், அகங்காரத்தினாலும், பிடிக்கப்பட்ட அரசன் தான் எங்கு போகிறோமென்பதையும் அறியாமல் கால்கள் இழுத்துச் சென்ற வழியே ஓடினான். களைப்பும் மன ஏக்கமும் மேலிட்ட அரசன் ஜிதேந்திரன் அந்திப்பொழுதில் சாலையோரமாகப்பசும் புற்றரையில் சாய்ந்து தன் நினைவற்று அரைத்தூக்கமும், விழிப்புமாய்ப் படுத்தான். எவ்வளவு நேரம் அவ்வாறு இருந்தானோ? அவன் கண்களைத் திறந்துபார்க்கும்பொழுது தன் எதிரில் கொஞ்ச தூரத்தில் சிறு கூட்டமொன்று கையில் தீவர்த்தியைக் கொண்டு செல்வதைப் பார்த்தான். வேலைக்காரருடைய வெளிச்சத்தில் பார்க்கவும் அவர்கள் தன் ஆஸ்தானபிரபுக்களில் ஒருவனது பரிவாரங்கள் என்று தெரிந்தது. அப்பிரபுவும் கூடச்செல்வதைப் பார்த்து அவன் தன்னை அடையாளம் கண்டுகொள்வானென நினைத்து அவ்விடம் சென்றான். தனக்கு இவ்வகை இடுக்கண்நேர்ந்ததற்குக்காரணம்இப்பிரபுக்களோவெனச் சந்தேகித்தான். "ஓகோ! பிரபு தேவகுமாரனே! எங்கே நீயும் என் சத்துருக்கள் கூட்டத்திற் கலந்துகொள்ளச் செல்லுகிறாயா? இவ்வுலகமே எனக்கு விரோதமாகக் கிளம்பியிருக்கிறதுபோற் காண்கிறது." இவ்வாறு உறக்கக் கூவின அரசனை அக்கூட்டத்தாருள் ஒருவன் தன் கத்தியால் நகர்ந்து செல்லக் கட்டளையிட்டான்.

"இன்னுமொரு முறை பிரபுவைப் பார்த்து அவ்வாறு சொல்! இக்கத்தி அம்மாத்துடன் உன்னையும் பிணித்து விடும்." தீவர்த்தி வெளிச்சம் அப்பிரபுவின் முகத்திலடித்தது. நேற்று அரசன் தன் ஆஸனத்தில் கொலுவீற்றிருக்கையில் அவன் தயவை எதிர்பார்த்து முகத்திற் புன்னகை தவழ அரசனுடன் ஒத்துப்பாடிய அவ்விளம் பிரபு ஆச்சரியமும், வெறுப்பும் நிரம்பிய கண்களால் தன்னை உற்றுப் பார்ப்பதைக் காண, கர்வபங்கமடைந்த அரசன் ஜிதேந்திரன் கட்டுண்ட சிங்கம்போலத் தவித்தான். "உன் அர்த்தமில்லாத வார்த்தைகள் நீ கஷ்ட மடைந்தவனென்பதை விளக்குகிறது. என் பரிவாரத்தில் யாராலாவது உனக்குத் துன்பமேற் பட்டிருந்தால் காலையில் என்னிடம் வந்து வெளியிடு. அவைகளை நான் தீர்த்துவைக்கிறேன்" என்று அப்பிரபு கூறினான். "ஆகா! நான் வேந்தன் ஜிதேந்திரனென்று நீ அறிந்து கொள்ள வில்லையா? இப்பொழுது நீ யனுபவிக்கும் போகங்களனைத்தும் நான் உனக்களித்ததல்லவா? இதோ! நீ கையில் அணிந்துள்ள ஆழியும் நான் வெகுமதியாகக் கொடுத்தன்றோ." "ஐயோ பாவம்! சித்தம் பிரண்ட மனிதன்" என்று அப்பிரபு கூறிக்கொண்டான். "அரசனது சபையில் வந்து இவ்வாறு பிதற்றாதே. இதோ இந்த ரூபாயை எடுத்துக்கொண்டு உன் பசியைத் தீர்த்துக்கொள். நான் சொல்வதை மாத்திரம் கவனித்துக்கொள். அரசனது சபைக்குமட்டும் வாராமலிரு. பெருமை தங்கிய அரசனது பெயரை இழிவு படுத்திய ஒரு மனிதன் அடையும் தண்டனை இலகுவானதில்லை." தன் பரிவாரங்களை நோக்கி "சரி நடவுங்கள்" என் அப்பிரபு உரைத்தான். அவர்கள் சென்றுவிட்டனர். அரசன் அந்த நாணயத்தைக் கையிலெடுத்தான். தான் உலகைவிட ஒருபடி உயர்ந்தவனென்பதைக் குறிக்கும்படி ஒரு சிறு பூமியின் வடிவத்தின்மீது தனது ஒருகாலை வைத்துத் தன் உருவம் பதித்திருக்



கும் அந்நாணயத்தைக் காணவே, மன்னன் ஜிதேந்திரன் தன் தற்கால நிலைமையைப்பற்றிச் சிந்திக்க அவன் தலை சுழன்றது. கால் தழதழத்தது. மேற் செல்ல முடியாதவனாய்ப் புற்றரையின்மீது மயக்கமாய் விழுந்தான்.

காலைப்பொழுதில் ஜிதேந்திரமன்னன்முதல் நாளெண்ணியவைகளுக்குமாறான சிந்தனைகளுடனும், வேறு நிலைமையுடனும் விழித்தான். தனது ஆதரவற்ற நிலைமையினால் சித்தம் கலங்கியிருந்த அரசனது அறிவானது, சூரியனது பிரகாசமும் காலைக் காற்றும் படப்படத் தெளிவுற்று நம்பிக்கைக்கு மறுபடி இடம் கொடுத்தது. தான் நகரத்திற்கு அதிக தூரத்திலில்லை. யென்று தெரிந்துகொண்டான். பட்டணத்தில் ஜனங்களின் போக்குவரத்து ஆரம்பித்துவிட்டது. கடைகளுக்கு வண்டிகள் சாமான் நிறைந்தனவாய்ச் செல்ல ஆரம்பித்தன. அவைகளின் மறைவாக அரசன் ஒருவர் கண்ணிலும் தென்படாமல் மதிற்சுவர் வாயிலண்டை வந்து சேர்ந்தான். கூட்டம் மிகுதியான இடத்தில் மனிதர் கண்களுக்கிலக்காகாது இருத்தல் எப்படி சாத்தியம்? ஜிதேந்திரனைப் பார்த்து அவன் இருக்கும் நிலமையைக் கண்டு பரிகசித்தனராயினும் அவனிடம் இரங்கி அனுதாபப் பட்டனர். ஒருவன் ஜிதேந்திரனைத் தன் வண்டியிலேற்றிக்கொண்டு கட்டைகளினிடையில் மறையச் செய்தான். "நீயும் இவ்வூரானென்றே எண்ணுகிறேன். இருந்தபோதிலும் இப்பொழுது நீ கஷ்டப்படுகிறாயென்று தெரிகிறது. யாராயிருப்பினும் என் கூட வா" என்று அக்குடியானவன் பரிந்துரைத்தான். இனி தான் அரசனெனக்கூறினால் துன்பம் விளையுமெனக் கண்ட அரசன் வேறு விதமாகத் தன் கதையைத் துடங்கினான். தான் ஒரு வியாபாரியென்றும், வரும் வழியிற் கள்வர் தன் பொருளைக் கவர்ந்து சென்றனரென்றும், அரசனது அரண்மனையில் தனக்கு அறிமுகமானவரிருப்பதால் அவ்விடத்தையடைந்ததும் தான் சென்று விடுவதாயும், தனக்கு இவ்வுபகாரம் செய்த அக்குடியானவனுக்குப் பரிசளிப்பதாயும் கூறினான். சீக்கிரத்தில் அரண்மனைக் கருகில் வண்டி வந்து சேர்ந்தது. அரசன் மற்று மொருமுறை அக்குடியானவனுக்கு வேண்டுவனவற்றை யளிப்பதாகக் கூறிவிட்டு, அரண்மனைக்குள் மறைந்து சென்றான். உள்ளே சென்றதும் அங்கிருந்த காவலாளிகள் உடைகளற்று ஒருவன் உள்ளே வருவதைக்கண்டு வெளியே செல்லும்படி விரட்டினார்கள். "என்ன! என் ஊழியர்களே! நீங்கள் உங்கள் வேந்தனைப்பார்த்து இவ்வாறு கூறுகிறோமென்பதை யறியவில்லையா? சீக்கிரம் என் உடைகளைக்கொண்டு வாருங்கள். உங்கள் தவறுதலுக்குப் பதிலாக நீங்கள் தகுந்த கைம்மாறு பெறுவீர்கள்" என்றான் ஜிதேந்திரன். "பைத்தியம் பிடித்த மனிதனே! அரசனது பெயரைக் களங்கமுறச் செய்கிறாயா. நியாயாதிகாரியிடம் இழுத்துச் செல்வோம்" என்று அரசனைப் பிடித்துச் சென்றார்கள். யாராவது அக்கூட்டத்தாருள் ஒருவனாவது தன்னை அடையாளம் கண்டு அறிந்து கொள்வானென அரசன் நம்பியிருந்தான். அவனுக்கு ஏக்கம் மிகுந்தது. எவ்வளவுக்கெவ்வளவு இவன் தான் அரசனென்பதை நிரூபிக்கக் கதைகள் கூறினானோ அவ்வளவுக்கவ்வளவு அவர்களிவனைப் பைத்தியம்பிடித்தவனென நம்பினார்கள். அரசன் அழைத்துவரச் சொன்னானென்று இருவர் ஜிதேந்திரனைக் கொலுமண்டபத்திற்கழைத்துச் சென்றனர். ஜிதேந்திரன் முழுதும் நம்பிக்கையற்றவனானான். "இதுதான் கடைசித் தருணம். என் சபாமண்டபத்தில் என் அரசியும், பிரபுக்களும் வீற்றிருப்பார்கள். அவர்களென்னை அறியத்தவறினால் என் ஜன்மமுழுதும் நான் புறம்பாகச் செல்லவேண்டியவனே" என்று அவன் தனக்குள் கூறிக்கொண்டான்.

நெஞ்சம் பதற, உள்ளம் கொதிக்க, தலைகுனிந்த வண்ணம் ஜிதேந்திரன் கொலுமண்டபம் சென்றான். பிரபுக்களைத் தாண்டிச்சென்ற அரசன் தலை நிமிர அவனது கண்கள் அங்கு வழக்கமாய் உடையணிந்து அமர்ந்திருக்கும் தன் தேவியின் மீதாவது பிரபுக்கள் மீதாவது செல்லவில்லை. ஜிதேந்திரன் தன் பீடத்தில் அமர்ந்து தனது உடை அணி யாவையும் பூண்டு தந்தத்தினாலாகிய செங்கோலை கையிற் பிடித்துச் சபையிலுள்ளோர் யாவரும் ஏற்ற மரியாதை செலுத்தக் கொலு வீற்றிருக்குமோர் புதியவனைக் கண்ணுற்றான். ஜிதேந்திரனுக்கும் அப்புதியவனுக்கும் யாதொரு வேற்றுமையும் காணப்படவில்லை. ஆனால் ஜிதேந்திரன் மட்டும் அப்புதிய அரசனின் முகம் அதிக தேஜஸ் பொருந்தியிருப்பதையும் அவனது நெற்றியில் தெய்வீகத் தன்மையான சாந்தம் குடிகொண்டு விளங்குவதையும் தெரிந்து கொண்டான். ஏக்கமுற்ற அரசனது வியப்பு நீங்கவும் அப்புதிய மன்னவன் பேசலுற்றான்: "இம்மனிதனே நம் பெயரை அவமதித்தது." ஜிதேந்திரன் தன்னைத் திடப்படுத்திக் கொண்டான். "நான்தான் உண்மையான அரசன். இப்பிரபுக்கள் நேற்று எனக்குச் செலுத்திய மரியாதையை இன்று உனக்குச் செலுத்துகிறார்கள். உலகமே எனக்கு விரோதமாகச் சுழன்றாலும், மறுபடி என் நிலைமையை யடைவோமென்ற நம்பிக்கை அற்றுவிட்டாலும் என்உயிர் என்னை விட்டகலும்வரை, என் பெயரைமட்டுமாவது பிறருக்கு விடாமற்பற்றி நிற்பேன். நான்தான் அரசன் ஜிதேந்திரனென இன்னமும் உரைக்கறேன்." "அன்று. அவ்வாறில்லை. உன் மூளை கொதிப்புண்டிருக்கிறது. உன் நடவடிக்கைளுக்கு ஏற்படும் தண்டனை இலகுவானதன்று. ஆனால் அதை நிச்சயிப்பதற்கு முன், அரசியும் இங்குள்ள பிரபுக்களும் நம்முள் யார் அரசனென்பதைத் தீர்மானிக்கட்டும். என் பிரபுக்களே! கூறுங்கள். புத்தியிழந்த நீயும் கவனி." ஆஸ்தானிகர்களும், பிரபுக்களும் அப்புதியவனை நோக்கி "ஜிதேந்திரமன்னன் நீடூழி வாழ்வாராக. எமது வேந்தன் தாமே" என்று முழங்கினர். ராணி எழுந்து புது அரசனைப் பணிந்தாள். "தமதன்புடையாள் தம்மை நன்கறிவாள்." "கேட்டாயா இவர்கள் உரைப்பதை. நமது தேசசட்டப்படி நீ மரணதண்டனை விதிக்கப்படவேண்டியவன். ஆனால், நீ நம் முன் வணங்கி, செய்தவை யெல்லாம் தவறென்றும், இனிமேல் உன்னை அரசனெனக் கூறிக் கொள்ளமாட்டாயென்றும் கூறி மன்னிப்புக் கேட்டுக்கொண்டால் எமது ஊழியர்களில் ஒருவனாக உன்னையும் சேர்த்துக்கொள்வோம்." இவ்வாறுரைத்த அப்புதிய அரசனது சொற்கள் காதில்விழவும் ஜிதேந்திரன்வெகுண்டான். "இல்லை. அது ஒருபோதும் இல்லை. உனக்குக் கீழ்ப்படிவதிலும் உன் கையால் இறப்பதற்குச் சித்தமாயிருக்கிறேன். நான் உலகிலுள்ள யாவரையும் விட ஒரு படி மேலானவனாகப் பிறந்துள்ளேன். கீழ்ப்படிவதென்பதை வெறுக்கிறேன்." அப்புதியவனும் ஜிதேந்திரனை சிறிது நேரம் உற்று நோக்கினான். அவன் முகத்தில் முன்னிருந்த கடுமை மாறி அனுதாபம் தோன்றிற்று. "உனக்கு ஒரு தண்டனையும் நாம் விதிக்கவில்லை. ஆனால் வீணெண்ணங்களைப் பற்றிச் சிந்திப்பதையும், கர்வமுறுதலையும் தவிர்த்து, தாழ்மையும் இணக்கமுங்கொண்ட நேரான மனதோடு வாழக் கற்றுக்கொள்ள வேண்டும்" எனக் கூறினான். வேதனையும் ஏக்கமும் மிகுந்த அரசன் ஜிதேந்திரன், தன்னையறிந்ததாகக் காட்டும் குறி யாரிடமாவது காணப்படுகிறதாவென்று மற்றுமொரு முறை தன் கண்களைத் திருப்பினான். அவனுக்குச் சில அடிகளுக்கு முன்பு, சபைக்காவலனும், தளகர்த்தனும், சேனாதிபதியும், இன்னும் அரசனை நன்கறிந்த பலரும் நின்றுகொண்டிருந்தனர். ராணியைப்போலவே, எல்லாரும் இவனைக் கண்டு முகத்தைத்திருப்பிக்கொண்டு அப்புதிய மன்னனது ஏவல்களைப் பணிவதில் ஊக்கத்துடனிருந்தனர். ஜிதேந்திர மன்னனுடன் வேட்டைக்குச் செல்லும் அவனது அழகிய நாயும், இப்பொழுது அவனைப்பார்த்துக் குலைத்தது. மற்றவர் பிடித்திழுத்திருக்காவிட்டால் அந்நாய் ஜிதேந்திரனைக் கடித்திருக்கும். "மற்றவர்களைப்போலவே என் நாயும், என்வேஷம் பூண்டவனைப் பணியவும், என்னிடம் பல்லைக் காட்டவும் கற்றுக்கொண்டிருக்கிறது' எனஜிதேந்திரன் பெருமூச்செறிந்தான். அரண்மனையை விட்டு வெளிவந்ததையும், எங்கு போகிறோமென்பதையும் அவன் கவனித்தானில்லை.



முன் நாளில் ஜிதேந்திரன் வெற்றிவாகை புனைந்து போர்க்களத்தினின்றும் திரும்பி வந்த வீதிகள் வழியாகவே இப்பொழுது ஏக்கமுற்ற மன்னன் கடந்து சென்றான். அவனது சென்ற வாழ்க்கை ஞாபகங்கள் அவன் மனதிலுதித்தன. பிரகாசிக்கும் கவசங்கள் பூண்டு செல்லும் வீரர்களின் நடுவே தான் சென்றதும், இருபுறமும் விளங்கும் மாளிகைகளின் ஜன்னல் வழியாக அவனுக்கு நல்வரவு கூறும் அன்பர்களின் முகங்களும்,தனது புகழையும் "வெற்றி வேந்தனான ஜிதேந்திரமன்னனுக்கு ஜயம்" எனவீரர்கள் கட்டியங்கூறிப் பாடிக்கொண்டு சென்றதும் எல்லாம் அரசனுக்கு நினைவு வந்தது. கர்வமிகுந்து ஒருவராலும் அசைக்க முடியா நிகரற்றவனென எண்ணியிருந்த ஜிதேந்திர மன்னன், இன்று எல்லோராலும் புறக்கணிக்கப்பட்டு,நாடிழந்து, நண்பர்களையும் இல்லாளையுமிழந்து, பெயர் புகழ் பதவியாவையும் பறிகொடுத்து வீதியிற் செல்லும் பிச்சைக்காரர்களும் இகழும்படியான ஸ்திதியை யடைந்து விட்டான். இவனது இஷ்டத்தையே செய்து வந்த அதிர்ஷ்ட தேவதை ஏன் இவனிடம் கோபம் கொண்டது?

நகரத்தின் எல்லைவரையில் ஜிதேந்திரனைக் கொண்டு வந்து விட்ட காவலாளிகள் "இனிமேல் உன்னிஷ்டப்படிச் செல்லலாம். இவ்வளவு தூரம் உன்னைக்கொண்டு வந்து விட்டு விட்டுத் திரும்பவேண்டுமென எங்களுக் கிடப்பட்ட கட்டளை. நீ மறுபடி புத்தி ஸ்வாதீனத்திற்கு வருமளவும் இந்நகரத்திற்குள் அடியெடுத்து வைக்கக்கூடாது" என்றுரைத்து விட்டுத் திரும்பிச்சென்றனர். இவ்வாறு நாட்டினின்றும் துரத்தப்பட்ட அரசன் தன் கால்களிழுத்துச் சென்றவாறு முன் நாள் சாயங்காலம் போலவே இன்ன விடத்திற்குப் போகிறோமென்ற நியதியில்லாமலே நாலைந்து மைல் தூரம் சென்றான். நாற்புறமும் சோலைகளடர்ந்து நீரூற்று ஒன்று சலசலவென அருகில் ஓடும் ஒரு பர்ணசாலைக்குச் சமீபமாக அரசன் வந்து சேர்ந்தான். ஜிதேந்திரன் அக்குடிசைக்குப் பல முறை அவன் சிறு வயதில் வந்திருக்கிறான். அக்குடிசையையே இன்று யதேச்சையாக அடைந்ததை அவனறிந்துகொண்டான். அக்காலத்தில் அரசன், தன் குருவும் காயக்கிலேசம் செய்த யதியுமான அங்கு வசித்துவரும் பெரியவரிடம் ஆலோசனைபுரியவும், தன் தவறுகளுக்கு மன்னிப்புக் கேட்கவும் எத்தனை முறை வந்திருக்கிறான்? பிற்காலத்தில் தான் விரும்பிய யாவையும் பெற்று, செருக்கும், அகம்பாவமும் குடிகொண்டவனாகி, இங்கு வருவதையும் தன் குருவையும் மறந்தேவிட்டான்.

இந்த யதி தன்னை யடையாளம் கண்டுகொள்கிறாராவென்று அறியும்பொருட்டு அரசன் அக்குடிலின் கதவைத் தட்டினான். "உள்ளே

வா" என்று மிருதுவான குரலில் அப்பெரியோருரைத்தார். "எதற்காக இங்கு வந்தாய், நண்பனே?" "என் குருவே! முன்பு இவ்விடத்தைப் பன் முறையும் தரிசித்துள்ள என்னை நன்றாய்ப் பாரும். நான்தான் அரசன் ஜிதேந்திரன்" என்று ஜிதேந்திரனுரைத்தான்." "என்ன! மூடத்தனமான உன் வார்த்தைகளுக்கு நான் செவிகொடுக்க முடியாது. என் கருத்துக்கள் யாவும் பச்சாத்தாபப்படுபவருக்கும், தாழ்மையுள்ளவர்க்குமேயன்றி, கண் மூடித்தனமாக அகம்பாவத்தினால் பிதற்றுபவனுக்கன்று." இவ்வாறு கூறிவிட்டு அந்த யதி கதவைத் தாளிட்டுக்கொண்டார். ஜிதேந்திரன் ஒரு நிமிஷம் பிரமித்து நின்றான். அவன் உள்ளம் மாறுதலடைந்து, கடவுளை நோக்கித் தண்டனிட்டு இரு கண்களிலும் நீர் பெருகப் பின் வருமாறு மன்றாடினான்: "தெய்வமே! எதனால் இவ்வாறு எல்லாராலும் ஒதுக்கப்பட்டேன்? என் முட்டாள்தனமான அகம்பாவத்திற்காகவோ ஈசன் என்னை இந்நிலைக்குக் கொணர்ந்தார்? இந்த யதியின் குடிசைக்கு முன்பு எவ்வளவு தடவை வந்து என் தவறுகளின் மன்னிப்புக்காக மன்றாடியிருக்கிறேன். அப்புறம் எவ்வளவு நாள் நானிவையெல்லாம் மறந்து, இருமாப்புக்கொண்டு கர்வத்தினால் மதிமயங்கியிருந்தேன். நேற்றுக் காலையில்தான் நான் இவ்வுலகில் ஒன்றும்-மரணமும்-என்னை அசைக்க முடியாதென்று இறுமாப்படைந்தேன். இன்று நான் எவ்வளவு அற்ப மனிதனென்றும், என் எண்ணங்கள் யாவும் வீணானவையென்பதையும் காண்கிறேன். என்னைப்பற்றிக் கர்வப்பட என்னிடம் ஒன்றுமில்லையென்பதை கடவுள் துலக்கிவிட்டார்." சோகத்தினால் தன்னை மறந்திருக்கும் அரசனது தோளின்மீது யதியானவர் மெதுவாகக் கையை வைக்க அரசன் திடுக்கிட்டெழுந்தான். "பெருமைதங்கிய அரசனே! என் அன்பார்ந்த புதல்வனே! எழுந்திரு. இங்கு எப்படி வந்தாய்? உனக்குற்ற துன்பம் யாது?" என அம்மகான் வினவினார். அரசனது துயரமெல்லாம் உடனே சந்தோஷமாக மாறிற்று. அவன் கண்களில் பிரகாசமுண்டாயிற்று. "நான் கொண்டிருந்த வீண் கர்வத்திற்காகக் கடவுள் என்னை சோதித்தார். என் நாடு, இல்லாள், பெயர், புகழ், பொருள் யாவையுமிழந்தேன். தந்தையே! சற்று முன் தாமும் என்னை யறியேனென மறுதளித்தீர்கள். இப்பொழுது என்னைப் பெயரினால் அழைப்பதால் ஈசன் என்னை மன்னித்திருக்கிறார். நானிழந்தவைகளை மீண்டும் அடைவோமென்றும் நம்புகிறேன். என் குருவே! என் நடவடிக்கைகளைக் கேட்டு எனக்குச் சாந்தி யேற்படும்படிச் செய்ய உம்மை வேண்டுகிறேன்," என்று அரசன் அவர் கால்களிற் பணிந்தான். "உள்ளே வா. உன் இடுக்கண்கள் முடிவுக்கு வந்துவிட்டன. என் புத்திரனே! என் குடிசையிலுள்ளவைகளால் உனக்கு வேண்டுவனவற்றையளித்து, உன் உரிமைகளைப் பெற உன்னை உன் நாட்டை நோக்கி அனுப்புகிறேன்" என்று அப்பெரியோர் கூறி அரசனை உள்ளே அழைத்துச் சென்றார். ஜிதேந்திரன் அவருடனும் அவரது சிஷ்யர்களுடனும் தன் வாலாற்றைக் கூறி மன்னிப்பை வேண்டினான். அவன் மனம் ஆறுதலடைந்தது. அவர்களுரைத்த புத்திமதியின்படி, அந்த யதியின் வஸ்திரமணிந்துகொண்டு கோவேறுக் கழுதையின் மேலேறி ராஜ்யத்திற்குச் செல்லலானான். இன்னும், அதிகமான கஷ்டங்களைச் சகிக்கவும், தாழ்மையைச் சந்தோஷத்துடன் ஏற்றுக்கொள்ளவும் கற்றுக்கொண்டான். சாயங்காலத்தில் தன் நகரத்தை யடையவும், அங்கிருந்த கோட்டைவாயிற் காவலாளிகள் இவனைப் பார்த்து ஒருவர் கொருவர் "அரசன் இன்று மாலை மாற்றுருவுடன் நகத்திற்குட்பிரவேசிக்கும்பொழுது தமக்குரித்தான வந்தனைக் குறிகள் செய்ய



வேண்டாமென்று உத்திரவு" என்று சொல்லிக்கொண்டது அரசன் காதில் விழுந்தது. உற்சாகத்துடனும், தைரியத்துடனும் ஜிதேந்திரன் தன் அரண்மனை சென்றான். செல்லும் வழியில் வேற்றுடையிலும் தன்னை யறிந்து யாவரும் மரியாதையாய்ப் பார்ப்பதை அவன் கண்டு களிப்புற்றான். அரண்மனையிலும் எல்லாரும் அவனைக்கண்டு தலை வணங்கினார்கள். இப்பொழுது ஒரு நாள் அவர்களால் மதிக்கப்படாது மீண்டும் அவர்கள் பணியைப்பெற்றதினாலடைந்த திருப்தியை இதற்கு முன் அவர்களது பணியால் ஜிதேந்திரன் ஒருபொழுதும் அடைந்ததில்லை. ஒரு சேவகன் வந்து அரசனை வணங்கி அவன் விரும்பியபடி ராணி அரசனை மகாலில் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறாளென்று கூறிவிட்டுப் போனான். "ஈசனது அருள்தான் போலும்! எல்லாம் எனக் கனுகூலமாகவே நடக்கிறது. அவ்வாறானால் இன்று காலை என் பட்டத்தை வகித்திருந்த அந்நியனும் என் உரிமைகளை எனக்குத் திரும்பக்கொடுத்து விடுவானென்று நம்புகிறேன்" என்று கூறிக்கொண்டே ஜிதேந்திரன் தன் தேவியிருந்த மகாலிற் புகுந்தான்.

அங்கு அரசி ஒரு சோபாவின் மீது சாய்ந்தபடியே உறங்கிக் கொண்டிருந்தாள். அவள் கையிலிருந்து கைவேலையினால் சித்திரித்துள்ள பட்டுச் சவுக்கம் கீழே விழுந்து கிடந்தது. அவளருகே அன்று காலை அரசனாக நடித்த அம்மனிதன் நின்றுகொண்டிருந்தான். அவன் அரச உடையணிந்து ஜிதேந்திரனையே முழுதும் ஒத்திருந்தான். ஜிதேந்திரன் அவன் குற்றத்தைக் கூறி அவனை வாதுக்கழைப்பதற்காக நெருங்கியவுடன் அம்மாற்றானின் முகம் அபூர்வமான பொலிவையும் சாந்தத்தையும் கொண்டு அவன் மானிடன் அன்று என்றறிவித்தது. அவன் பூண்டிருந்த பூக்களினால் சித்திரிக்கப்பட்ட தாவள்யமான உடை நழுவி விழ, தோள்களினிருபுறமும் இறகு முளைத்தது. "என்னைக்கண்டு அஞ்சவேண்டாம்" என்னும் இனிய சொற்களை ஜிதேந்திரன் செவியுற்றான் "இதற்கு முன் பலமுறை நான் உன்னருகில் சஞ்சரித்திருக்கிறன். நீ உன் மனதில் உயர்ந்தனவாகக் கருதிய உன் வலிமையும் இவ்வரசும் எத்துணை அற்பமானவை யென்பதை உனக்கறிவிக்கவே ஒரு நாள் உன் பட்டத்தை நான் வகித்தேன். எவ்வளவு பெரிய வேந்தனையும் ஒரு நொடியில் தாழ்த்திவிட வல்லமை ஈசனுக்குண்டென்பதை யறிந்தாயா? அவ்வளவும் போதாதென்று மரணமும் உன்னை நெருங்காதென இறுமாப்புக் கொண்டாய். நீ கற்கவேண்டியவை யெல்லாம் கற்றுக்கொண்டாய். நீ பட்ட சில நாழிகைத் துன்பமானது உன் வாழ்நாள் முழுதும் சந்தோஷமாய்க் கழிக்கும்படியான ஞானத்தை உனக்குக் கற்பித்தது. காட்டிலிருந்த அந்த யதீசுவரரைத் தவிர வேறு ஒருவருக்கும் நீ பட்ட கஷ்டங்களும் அடைந்த தண்டனையும் தெரியவராது. ஆனால் இனிமேல் எல்லாரும் நீ உன் கடின சித்தத்தை விட்டு சாந்தமும் தயையும் பெருகிய மனத்தினனாயிருப்பதைத் தெரிந்து கொள்வார்கள்." ஜிதேந்திரன் எல்லாவற்றையும் உணர்ந்து கொள்ளுமுன் ஜோதியொன்று தோன்ற இந்நற்றேவதையும் அதில் மறைந்து விண்ணுலகேகியது. ஜிதேந்திரன் ஒன்றும் புரியாது முன்னிரண்டு நாட்களாய் நடந்தவற்றைப் பற்றி யோசித்துக்கொண்டே நின்றான். அவன் தேவி விழித்துத் தன் நாயகன் துறவிவேடம் பூண்டு நிற்பதைக்கண்டு சிரித்துப் பிரபுக்கள் அரசனைப் பார்க்க வருமுன் அவ்வுடையைக் களைந்து சொந்த உடை உடுத்திக்கொள்ளும்படி உரைத்தாள். மறுபடி அரசன் வழக்கம் போல் ராஜ உடை தரித்துக் கையில் செங்கோல் தாங்கிக் கொலு மண்டபத்தில் பிரபுக்களுக்

கிடையே வீற்றிருந்தான். அப்பைத்தியம் பிடித்த மனிதனைப்பற்றி ஒன்றும் பிரஸ்தாபிக்கப்படவில்லை. அரசனது பரிவாரங்களில் ஒருவராவது தாம்வேறொருவனை அரசனாகப்பாவித்தோமென்று நம்பியிருக்க மாட்டார்கள். ஆனால் எல்லாரும் அரசன் அந்த வேட்டைக்குச் சென்று திரும்பியபிறகு தயை மிகுந்து நற்குண முள்ளவனாயிருப்பதைக்கண்டு வியப்புற்றனர். ஜிதேந்திரனே தன்னை முழுதும் வேறொருவனாகவே கருதினான். இதற்கு முன் அவன் பாராட்டிய தற்பெருமையும் செறுக்கும் நினைக்க நினைக்க வெறுக்கத் தக்கனவையாக ஆயின. ஜிதேந்திர மன்னன் வெகு காலம் தன்குடிகளுக்குமிகச் சந்தோஷமும் சௌக்கியமும் பெருகும்படி பூமியை ஆண்டு கீர்த்தியுடன் வாழ்ந்து வந்தான்.

# நூர்ஜஹான் அல்லது
# பரதகண்டத்துச் சௌந்தரியக் கொடி.

ஸ்ரீமதி பாரதி அம்மாள்.

(282-ம் பக்கத் தொடர்ச்சி.)

## ஏழாவது அத்தியாயம்.

தன் பத்தினியைக் கண்ட மாத்திரத்தில் அயாஸின் கண்களினின்றும் அருவிபோல் நீரோடியது. ஆனால் அமீனாவின் நேத்திரங்களினின்றும் ஒரு துளி ஜலமும் வரவில்லை. ஸ்திரமனதுடன் பிரமை கொண்டவள்போல் நாலா பக்கங்களிலும் நோக்கினாள். மிக்க நேரம் அழுது கொண்டிருந்ததால் அவளது துக்கம் சற்று குறைந்திருந்தது. அவளைச் சுற்றித் தரை முழுதும் கண்ணீரால் நனைந்திருந்ததென்றால் அவள் எவ்வண்ணந் துக்கித்திருப்பாளெனச் சொல்லுவது கடினமே. பதியைக் கண்ட மாத்திரத்தில் தன்னழுகையை நிறுத்தினாள். வாயைத்திறவாது அவனது முகத்தை உற்று நோக்கினாள். கொஞ்ச நேரத்திற்கு முன் அழகு மிக்க குழந்தையாற் சோபித்துக் கொண்டிருந்த அவளது மடி இப்பொழுது சூனியமாகத் தோற்றியது. பதியின் முகத்தை நோக்கி நோக்கி அவளது தலை சுழல உலகத்தையே மறந்து மூர்ச்சித்தனள். மிக்க நேரஞ் சென்றபின் மூர்ச்சை தெளியக் கண்களைத் திறந்து பார்க்கப் பதியின் மடியில் தனது தலையை வைத்துப் படுத்திருக்கக் கண்டனள். பசி, தாகம், சோகம் இவைகளாற் பீடிக்கப்பட்டுப் பிரமைகொண்ட அமீனாவின் தலை அவளது பதியின் மடிமேலிருந்த போதிலும் அவளது மனமோ யாத்திரை செய்துகொண்டிருந்தது. தனது இளங் குமரியை மடியிலிருத்தி முத்த மீந்து அடிக்கடிப் பால் கொடுத்துக் கொண்டிருப்பதாகத் தனது மானசிக நேத்திரத்தால் நோக்கினாள். குடையால் நிர்மாணிக்கப்பட்ட அச்சிறு கூடாரத்திற்குள் இக்காட்சிகளைப் பார்த்தாள். ஆனால் இந்த மானசீக சுகமும் கொஞ்ச நேரம் நீடித்திருப்பதில் தெய்வத்திற்கு இச்சையில்லை போலும்! திடீரென ஒரு பெருத்த காற்றடிக்க, இவளது மனோராஜ்யமும் இருந்தஇடந்தெரியாது மறைந்தது. குடையும் அக்காற்றின் வேகத்தால் அதிக தூரம் பறந்தது. அவ்விருவர்களது சரீரங்களும் மணலால் மூடுபடவே, அயாஸ் மெதுவாகத் தனது பத்தினியை நோக்கி "பிரியே! நாம் இவ்வண்ணம் வீணில் யோசித்துட்கார்ந்திருப்பது வியர்த்தமே. எழுந்திரு!



நாம் செல்லுவோம். எவ்வளவு சீக்கிரஞ் செல்லுகின்றோமோ, அவ்வளவுக் கவ்வளவு நலமாகும்," என்றனன்.

"சரி, செல்லுவோம். இச்சண்டாளியினது காரியம் பூர்ணமாயிற்று. நாதா! கேவலம் இப்பிராணனுக்காக நான் என் கைக்குழவியை இக்கோர ஆரணியத்தில் அனாதையாய் விடுத்தேன். இப்படிப்பட்ட பயங்கர காரியத்தைச் செய்த யான் வேறென்ன செய்யத் துணியேன்? வாருங்கள். இனிமேல் பயமென்பது கொஞ்சமேனு மில்லை. எனது இருதயம் கல்லைவிடக் கடினமாயுளது. இனி இப்பயங்கர வனத்தைக் கடக்கக் கொஞ்சமேனு மஞ்சேன். பூமி தேவியே! இவ்வளவு துக்கத்தைக் கொடுத்துப் பரீக்ஷை செய்யவோ நீ இந்த அபாக்கியவதியைப் பிறப்பித்தாய்? இனி எத்துக்கத்தையும் கொஞ்சமேனுங் கருதேன்!" என்ற இச்சொற்கள் அமீனாவின் வாயினின்றும் வெளிவந்தமாத்திரத்தில், அவள் கண்களினின்றுங் கண்ணீர் வடிந்து கன்னங்களின் வழியாய் ஓடியது. இவ்வண்ணம் இவ்விருவரும் வழியை நோக்கிச் சென்றுகொண்டேயிருக்க வனத்தில் விடுத்து வந்த குழந்தையின்மேல் மனம் நாட, அன்பும், ஆதரவும் இவர்களது இருதயத்திற் குடிகொண்டன. இருவர் மனதிலும் தயை அதிகரித்துக்கொண்டே வந்தது. கொஞ்ச தூரஞ் சென்றபின் அமீனா அழ ஆரம்பித்தனள். தரையில் விழுந்து புரண்டாள், கதறினாள், அலறினாள். "என்னையும் இந்த ரணபூமியில் உயிருடன் விடுத்துச் செல்லுங்கள். எனது குழந்தையின்றி நான் ஒரு அடியேனு மெடுத்து வையேன். எனது கால்களிலோ பலமில்லை. எனது அங்கத்தில் சக்தி சிறிதேனுந் தங்கவில்லை. பிராணநாதா! எனது குழந்தையைத் திருப்பி என்னிடங் கொடுங்கள்! ஒரு முறையேனும் எனது கண்மணியின் சிரித்த முகத்தைக் காண்புவித்து, எனது இருதயத்தைக் குளிரச் செய்யுங்கள்!" என்றனள்.

சோகம் நிறைந்த இச்சொற்களைக் கேட்ட அயாஸ், "ஆகா! இக்கஷ்டத்தினின்றும் நம்மைக் கடவுள் சீக்கிரம் விடுவிக்கமாட்டாரா? ஈச்வரா! நீயேன் எங்களுக்கு இச்சங்கடத்தை வருவித்தாய்?" எனச் சொல்லித் தேம்பித் தேம்பி அழலானான். இருள் மூடியிருக்கும் ஆகாயத்தில் மின்னல் எப்படி பளிச்செனப் பிரகாசிக்குமோ, அப்படியே அமீனாவின் மழுங்கிய முகத்தில் மந்தகாஸம் துலங்கியது. "பிராணநாதா! வீணில் அழுவானேன்? ஆகா! நான் இன்னுமேன் உயிருடனிருக்கின்றேன்? எனது மதலையின் முகத்தை எனக்கொரு முறை காட்டுங்கள்! குழந்தையின் முகாவலோகனஞ் செய்தாலல்லது என் பிராணன் நிலைப்பது கடினமே. தயவு செய்து என் ஆசையைப் பூர்த்தி செய்யுங்கள்! மிருத்யுவின் பாசத்திற் குட்பட்டு, அதனுடன் போர் புரிந்து இன்னும் பிராணனை விடாமலிருக்கின்றேன். ஆகா! ஒரு முறை என் குழந்தைக்குப் பால் கொடுத்து, அதன் தொண்டையை நனைக்க நான் கொண்டிருக்கும் இச்சையை வீணாக்க வேண்டாம். எனது கண்மணியின் சந்திர முகத்தைப் பார்த்தாவது, என் துக்கத்தைச் சாந்தி செய்துகொண்டு சமாதான மடைவேன். நீங்கள் எவ்வளவுக் கெவ்வளவு தாமதஞ் செய்கின்றீரோ, அவ்வளவுக் கவ்வளவு என் மனதிற் சங்கட மதிகரிக்கின்றது. அஞ்ஞானமாயுள்ள பசுவும், தன் கன்றை ஒருபோதும் தியாகஞ் செய்யத் துணியாதே. நான் மானிட ஜன்மத்தை யெடுத்தும், எனது வயிற்றிற் பிறந்த குழந்தையைத் தியாகிப்ப தென்றால்! என் கண்மணியை எங்கு விடுத்து வந்தீரோ, அங்கிருந்து மறுபடியும் நானொருமுறை பார்க்கும் வண்ணம் எடுத்து வாருங்கள். இதுவே நானுங்களைக் கடைசியாகக் கேட்கும் பிச்சை! எனது குழந்தை இன்னும் உயிருடனிருக்

கிறதா?" என்ற மனதைப் பிளக்கும்படியான வார்த்தைகளைக் கேட்ட அயாஸ் ஆகாயத்தை நோக்கி, "ஓ குதா! அல்லா! காப்பாற்று! காப்பாற்று!!' என்றனன். பிறகு குடையால் பழையபடி ஒரு சிறு கூடாரம அமைத்து, அதற்குள் கம்பளியை விரித்து, அமீனாவைப் படுக்க வைத்துத் தன் குழந்தையை எவ்விடம் விடுத்து வந்தனனோ அவ்விடத்தை நாடி விரைவாகச் சென்றனன்.

கொஞ்ச நேரத்திற்கு முன் எக்குழந்தையைக் கன்னெஞ்சுடன் நிராகரித்து வந்தனனோ அக்குழந்தையைக் குறித்து இப்பொழுது அதைரியங் கொண்டவனாய், தன் சக்தி யெல்லாவற்றையும் ஒன்று சேர்த்து, குதிரையை விட அதிக வேகமாக ஓடினான். வாத்ஸல்ய தேவதைக்கு வசப்பட்டிருந்ததால், அதி சீக்கிரத்தில் தன் குழந்தையை விடுத்து வந்த இடத்தை யடைந்தமாத்திரத்தில், ஒரு பயங்கரக் காட்சி இவனது கண்களுக்குத் தென்பட்டது. மிக்க பீதியடைந்தவனாய் இரண்டு மூன்று அடிகள் பின்னாலேயே நகர்ந்து, கண் கொட்டாமல் அக்காட்சியை நோக்கி யிருந்தனன். அச்சமயம் ஒரு பெரிய சர்ப்பம் தன் படத்தை விரித்து, சூரிய கிரணங்கள் படா வண்ணம் குழந்தை முகத்தை மறைத்து அடிக்கடித் தன் விஷநாக்கை வெளியே நீட்டிக்கொண்டிருந்த காட்சியைக் கண்ட அயாஸ் ஸ்தம்பித்து நின்றனன். ஒரு தாய் தன் குழந்தைக்குப் பால் கொடுக்கக் கருதி, மடியிலிருத்தி, உச்சி மோந்து, மிக்க அன்புடன் எவ்வண்ணம் அதை உற்று நோக்கி யிருப்பாளோ, அவ்வண்ணமே அச்சர்ப்பமும் தன் படமாகிய குடையை விரித்து, அம்மதலையின் முகத்தையே நோக்கி யிருந்தது. கொடிய சுபாவமுள்ள அந்த ஜந்துவின் புத்தியைக் கண்ட அயாஸ் ஆச்சரியத்தி லாழ்ந்தனன். வாத்ஸல்யம் மேலிட, மிக்க ஆவேசங்கொண்டவனாய் இரண்டடி முன் செல்லவே, காலடிச் சத்தத்தைக் கேட்ட அச்சர்ப்பமும் அவ்விடத்தை விடுத்து, அருகிலிருந்த ஒரு விருட்சத்தின் துவாரத்திற்குட் சென்று மறைந்தது.

அச்சமயம் அயாஸின் மனதிற் பற்பல எண்ணங்களுதித்தன. தற்கால ஸ்திதியை மறந்து மனோராஜ்யத்திற் சஞ்சரித்தனன். தனது இளங் குமரியின் தற்சமய நிராதார ஸ்திதியை மறந்து, அவள் பின்னாலடைய விருக்கும் வைபோகத்தின் நற்சகுனமேயெனக் கண்டான். ஆனந்தமேலீட்டால் அவன் யோசித்து நிற்காது, தனது குழந்தையை விரைவாக வாரியெடுத்து, அவ்விடத்தைவிட்டகன்றனன். அப்பொழுது அம்மதலையின் பிரகாச நேத்திரங்களைக் கண்டு, அவனது வாத்ஸல்யம் அதிகரித்தது. அவன் சுக துக்கத்திற்குப் பாத்தியப்பட்டுள்ள அமீனாவோ, அத்தியந்த வியாகூலத்தோடு தனது கன்னிகையின் முகாவலோகனஞ் செய்யும்பொருட்டு, மிக்க சிரமத்துடன் தனது பிராணனைப் பிடித்துக்கொண்டு, பதியின் வரவை நோக்கிக் காத்திருந்தனள். அடிக்கடி மூர்ச்சையடைந்து, யமனுடன் யுத்தஞ் செய்து அவள் அபஜயமே அடைந்திருந்தபோதிலும் தனது கன்னிகையை மறுபடியும் கண் குளிரக் காண்போமென்ற ஆவலால், அவளது அங்கத்தில் ஒரு புதிய ஜீவனுதிக்க, மறுபடியும் ஜயமே கொண்டனள். அச்சமயம், "அமீனா! இதோ பார், உன் குழந்தையைக் கொண்டு வந்துள்ளேன்; எழுந்து கண்களைத் திறந்து, உனது கண்மணியின் முகத்தைப் பார்த்து ஆனந்தங்கொள்!" என்ற குரல் அவள் காதில் விழுந்தது. "உன் குழந்தையைக் கொண்டு வந்துள்ளேன்." என்ற அமிர்தம் நிறைந்த வார்த்தைகள் காதில் விழுந்தமாத்திரத்தில், அமீனா திடீரெனக் கண்களைத் திறந்து, தனது



குழந்தையை வாங்கிக்கொள்ளக் கரத்தை நீட்டினாள்.

அமீனா தனது மரணாவஸ்தையிலிருந்தாளாயினும், வாத்ஸல்யத்தால் அவளது அங்கத்திற் கொஞ்சம் சக்தி பிறக்க, எழுந்துட்கார்ந்து தன் குழந்தையை வாங்க முயன்றனள். ஆனால் வியர்த்தமே! எழுந்திருந்தமாத்திரத்தில் இரத்தத்தைக் கக்கினாள். திடீரென மூர்ச்சையுற்று விழுந்தாள். புத்தி கூர்மையுள்ள அயாஸ் இதன் காரணத்தை அதி சீக்கிர மறிந்துகொண்டனன். இது இரத்தமல்லாது, அந்திய காலத்திற் கடைசியாகக் காணும் சிவப்புக்கொடியெனக் கண்டனன். உடனே தைரியம் அவனை விட்டு விலகத் தாழ்ந்த குரலில், "தேவா! நான் காண்பது யாது? பிராண சுந்தரி அமீனா? நீ வாஸ்தவமாகவே இந்த ஜனமற்ற ஆரணியத்தில் என்னை விடுத்துச் செல்லுகின்றாயா? பிரியே! பார்! பார்!! நான் உன் பெண்ணை, பின்னால் சிம்மாதனத்தில் ஆரூடஞ் செய்யவிருக்கும் அதிர்ஷ்டசாலியான உன் பெண்ணைக் கொணர்ந்துள்ளேன்; இதோ பார்; இவளுன்னை உற்று நோக்குகின்றாள்; தாவி யுன்னிடம் வர முயலுகின்றாள்! இவளுக்கு இறக்கைகளிருந்திருக்குமாயின், எப்பொழுதேயோ உன்னிடம் பறந்து வந்திருப்பாள். பேசுஞ் சக்தியிருக்குமாயின், தன்னை அவமதித்ததற்காக உன்னைத் தூஷியாதுமிருந்திராள். அமீனா! எழுந்திரு; வாஸ்தவத்தில் நீ மிக்க பாக்கியசாலியே; நீ அதிக சுகப்படவேண்டுமென உன் தலையிலெழுதியுளது. நீ இவ்வுலகில் ஒரு நாள் வைர மாணிக்கங்களிற் படுத்துப் புரளுவாயென்பதிற் சந்தேகமில்லை. ஜகதீசன் உன்னை இரட்சிப்பார்!" எனப் பிரலாபித்தனன். ஆனால் பாவம்! அமீனா யாது செய்வாள்? அவளது பிராணன் ஸ்திரமாக இருந்தாலல்லவோ? எக்கூண்டிலடைபட்டு இவ்வளவு நாட்கள் கணக்கில்லாக் கஷ்டங்களை அனுபவிக்க நேரிட்டதோ, அக்கூண்டை விடுத்து, அது தேவலோகத்தையடைய ஆயத்தமாயிருந்தது. மாயா பாசத்திற்குக் கட்டுப்பட்டிருந்த அயாஸின் சோகமய வார்த்தைகள் திவ்விய உலகத்திற்குப் பிரயாணஞ் செய்யத் தயாராகியிருந்த அமீனாவின் செவிகளில் எவ்வண்ணம் ஏறும்?

கொஞ்ச நேரத்திற்குப் பிறகு அமீனா கண்களைத் திறந்து மௌனமுடன் தனது குழந்தையையும் நோக்க, அயாஸ் குழந்தையைப்பற்றிய எல்லா விருத்தாந்தங்களையும் சுருக்கமாய்ச் சொல்லி முடித்தான். கொடிய விஷத்தைக் கக்கும் சர்ப்பம் யாதொரு தீங்கு மிழைக்காது, தனது குழந்தையின் தலைமேல் இராஜ்ய வைபவக் குறியாகப் படத்தை விரித்திருந்த சங்கதிகளைக் கேட்டமாத்திரத்தில், பரலோகத்திற்குப் பிரயாணமாக விருந்த அமீனாவுக்கு இகலோக மாயை உற்பவித்தது. நிர்ஜன ஆரணியத்தில் இன்று அதிகக் கஷ்டங்களுக்குட்பட்டிருக்கும் தனது குமாரி நாளடைவில் ராஜ்யபோகத்தை அனுபவிக்கப் போகின்றாள் என்ற ஆசையால், மரணாவஸ்தைக்குள்ளாயிருந்த அமீனாவின் தேகத்தில் உஷ்ணமுண்டாயிற்று. அவளது க்ஷீணமடைந்திருந்த ஜீவன் திடீரெனத் தீபத்தைப்போற் ஜ்வலிக்க ஆரம்பித்தது. அவளது ஒளியற்ற முக கமலம் பிரகாசித்தது. குழிவடைந்திருந்த நேத்திரங்கள் நீரால் நிறைந்தன. ஆனால் இவையெல்லாம் க்ஷணநேரமே! அவள் மறுபடியும் எழுந்துட்கார முயன்றனள். அது சாத்தியமில்லாதிருக்கவே, தனது கன்னிகையை மார்போடணைத்து முத்த மீந்தனள்.

ஆனால் ஆகாகா! இரண்டு நிமிஷநேரம் அவளது உடலில் தங்கியிருந்த உஷ்ணம் கொஞ்சமேனு மில்லாமற் போகுஞ் சமயமும் நெருங்கிற்று. மிருத்யுவின் கரங்களிற் சிக்கிய அமீனா அடிக்கடி எழுந்துட்கார முயன்ற

தாலும், தனது கன்னிகையை மார்போடணைத்து முத்தமீந்த சிரமத்தாலும், சீக்கிரத்தில் ஜீவனற்றவளானாள். அவளது அங்கத்திலிருந்த தேஜஸ் கொஞ்சங் கொஞ்சமாய்க் குறைந்தது. இதைக் கவனித்த அயாஸ் தனது பிராணப் பிரியையின் அந்தியகாலம் சமீபித்துவிட்டதென நிச்சயித்தனன். உரத்த குரலில் அழத் தொடங்கினான். மனதைப் பேதிக்கும் வார்த்தைகளைச் சொல்லிக் கதறினான்! "சுயநலமே குடிகொண்ட தயையற்ற உலகமே! துஷ்ட ஆப்த மித்திரர்களே! நீங்களெல்லோரும் இவண்போந்து சோகமே குடிகொண்ட இந்த நாடகத்தை ஒரு முறை கண்களைத் திறந்து பாருங்கள். அட! உமதக்கிரமத்தாலும், உமது அநியாயத்தாலும் இந்த ரணபூமியில் எனது ஜீவனாதாரமாகிய இருதயேச்வரியை இழக்கின்றேன். பிராண சஞ்சீவினி அமீனா இன்று என்னை விடுத்துச் சென்று கொண்டிருக்கின்றாள். ஆகா! ஜாதி பேதமே! நீயும்பார், இன்று நான் எவ்விதத் துர்த்தசையிலிருக்கிறேனென! உனது அக்கிரமத்தாலன்றோ எனது ஜீவாதாரத்தை இழந்து உட்கார்ந்திருக்கின்றேன்! அமீனா! பிராணப் பிரியே, சதி! தவித்து நிற்கும் உனது பிராண பதியைப் பார்! உன்னையன்றி அவனது ஜீவனுக்கு ஆதாரமேது?" என்று இவ்வண்ணம் தனது ஜன்ம பூமியையும், தனது மித்திரர்களையும் வாயில் வந்தபடி நிந்தித்துச் சபித்தான்.

அமீனாவின் சுவாசங் குறைந்து கொண்டே வர, க்ஷீண ஸ்வரத்தில், "பிரியகரா! நடந்த காரியத்தைக் குறித்து இப்பொழுது சிந்திப்பதிற் பயனென்ன? நான் எனது கர்மத்தின் பலனை அனுபவிக்கின்றேன். தாயில்லாது தவிக்கும் குழந்தையை மாத்திரம் நீங்கள் சம்ரட்சிக்க வேண்டும். இக்குழந்தையைத் தமது சரணங்களில் விடுத்து நானிப்பொழுது பிராணனை விடுகின்றேன். என்னைக் குறித்த மட்டும் நான் பாக்கியசாலியே யென நினைக்கின்றேன்" எனப் பகர்ந்த வண்ணம் அமீனா அயாஸை அருகில் வரும்படி சமிக்ஞை செய்தனள். அயாஸும் மிக்கப் பிரேமையுடன் தனது முகத்தை அவளது முகத்தினருகிற் கொண்டு போனான். தனது பதியின் முகத்தோடு முகஞ் சேர்த்து, மிகவுந் தாழ்ந்த குரலில் "நாதா! இத்தாசியின் கடைசி விணந்தியை நிதமும் ஞாபகத்திலிருத்தி வையுங்கள்! இம்மணற்காட்டில் எனது பாக்கிய மற்ற பிரேதத்தை அடக்கஞ் செய்வீராகில் வனத்திலுள்ள பசுபட்சிகள் எனது தேகத்தைத் தீண்டாதிருக்கும். எனக்காக அழுது உட்கார வேண்டாம். எனது வேளையோ சமீபித்து விட்டது. இதோ நான் புறப்படுகின்றேன். எனது ஞாபகார்த்தமாக இக்குழவியை உம்மிடம் விடுத்துச் செல்லுகின்றேன். அவளை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளுங்கள். அவள் ராஜ அரண்மனையில் ராணியாயிருந்தாலும், அல்லது தரித்திரன் வீட்டில் நீர் நிரப்பிக் கொண்டிருந்தாலும் அவளைப் பார்த்து என்னை ஸ்மரித்து வாருங்கள்! பிராணபதி! இனிமேல் நாமிருவரும் தேவலோகத்திற் சந்திப்போம். அங்கே நமது பிரேமையைப் பங்கப்படுத்த ஒருவராலும் முடியாதென்பதை ஞாபகத்தி லிருத்தி வையும்! நான் வாஸ்தவத்திற் சௌபாக்கியவதியே! என்னை ஆசீர்வதிப்பீராகில் எனக்கு நற்கதியே கிடைக்கும்" என்ற மனதைப் பிளக்கும் வார்த்தைகளை அமீனா பகர்ந்து கொண்டிருக்க, அயாஸ் அவளது மூர்த்தியையே உற்று நோக்கியிருந்தனன். அவனது நேத்திரங்களினின்றும் நீர் தாரையாக ஓடிக் கொண்டிருந்தது. மிக்கப் பிரேமையுடன் அவளுக்குக் கடைசியாக முத்தமீந்து, முகத்தைத் தடவிக் கொடுக்க, அமீனாவின் முகத்திற் சந்தோஷக் குறிகள் உண்டாயின. ஆனால் அச்சந்தோஷம், ஆனந்தம், பிரேமை இவை யெல்லாம் ஒன்றின்



பின்னொன்றாகப் பறக்கவே, சதி அமீனா தனது பதியின் பவித்திர மடிமேல் தலையை வைத்த வண்ணம் சுவர்க்க லோகத்தின் வழியிற் செல்லலுற்றாள். தனது பிராரப்த கர்மம் முடிவு பெற்றதால் அல்லாவின் தர்பாருக்குத் திரும்பிச் செல்ல ஆரம்பித்தாள். அயாஸும் குழந்தையும் தத்தம் கர்மத்தின் பலனை அனுபவிக்கும் பொருட்டு உயிருடன் இருந்தார்கள். ஜ்வலித்துக்கொண்டிருந்த மாலைச் சூரியனது பிரகாசமும் அயாஸின் கண்களுக்கு அந்தகாரமயமாகவே தோன்றப் பின்னாற் செய்யவேண்டியது யாதென அறியாமல் தவித்தான். துக்க மேலீட்டால் தன்னை மறந்தான். அக்குழந்தையோ பிராணனற்ற தனது தாயின் சமீபத்தில் நித்திரை செய்து கொண்டிருந்தது.

(தொடரும்)

# காமக்ஷாதேவி.

## ஆஸாம்நாட்டின் அத்துவைத க்ஷேத்திரம்

ஸ்ரீமான் அற்புதானந்த ஸ்வாமி.

ஹிமாலய மலைத்தொடர்பில் பிரம்மபுத்திரா நதிப்பிரவாகத்தை ஒட்டிய சில குன்றுகளை நீலகிரிக் குன்றுகள் எனவும் சொல்வர்: வைதீகர்கள் இந்நாட்டில் இந்நீலகிரிக் குன்றுகளை காமக்ஷா குன்றுகள் என்பர். இக்குன்றுகளினருகில் ஓடும் பிரம்மபுத்திரா நதிக்கரையில் அமீன்காம் என்ற ஒரு சிறு ஸ்டேஷன் ஆஸாம் இருப்புப்பாதையில் உளது. இப்பிரம்மபுத்திராநதி ஹிமாலய மலையின்கீழுள்ள ஆஸாம் காடுகளில் ஊடுருவிச் செல்கின்றது. இக்காடுகள் பெரும்புலி யானை காடிகளைக் கொண்டில்லாவிடினும் மான்கள் ஓநாய்கள் நரிகளைக் கொண்டுள்ளன. இப்பிரம்ம புத்திரா நதியிற் சிறு நீராவி இயந்திரங்களும் ஓடுகின்றன. இந்நீராவி ஓடங்களில் அமீன்காமில் இறங்கும் யாத்திரிகர் பிரம்மபுத்திராவைக் கடந்து பாண்டு என்ற ஆஸாம் இருப்புப் பாதை ஸ்டேஷனைச் சேரவேண்டும். இந்நதி மிக்க அகண்டதாக ஓடுவதினால் பாலங்கள் ஏற்படுத்த சௌகரியங்களைக் கொண்டில்லாமலுள்ளது. பின்னர் இங்கிருந்து காமக்ஷா ஸ்டேஷன் செல்லலாகும்.

* * *

இந்த ஸ்டேஷன் மலைத்தொடர்பின் அருகில் உள்ளது. ஸ்டேஷனிலிருந்து வண்டி இறங்கியதும் இக்கோயிலுக்கு நேரான ஒரு ரோட்டுள்ளது. இந்நாட்டினர்கள் இப்பாதையைத் தம்நாட்டின் தலைவனாகிய நரகாசூரன் தயாரித்தனன் என்பர். இவன் தேவி உபாஸிகனாக இருந்தனனெனவும், உற்சவ சமயங்களில் யாத்திரிகர் இங்கு வருவதற்கு இப்பாட்டையைத் தயாரித்தனனெனவும் கூறுவர். இந்நரகாசூரனின் குமாரனாகிய பகதத்தன் என்பவன், சிங்க்பூர் என்ற நகரத்தில் மிக்க அழகிய தோட்டம் ஒன்றைத் தயாரித்துள்ளனன். இவ்வமயம் இந்நாட்டின் ஜில்லா இப்பெயரையே கொண்டுள்ளது. மகாபாரதத்தில் குருக்ஷேத்திர யுத்தத்தில் இப்பகதத்தன் பெரும் யானைப் படையுடன் வந்ததாகச் சொல்லப்பட்டுள்ளது. எனவே இச்சரிதைகளினால் இப்பாட்டை மிக்கப் பண்டையதெனவே காணப்படுகின்றது. இப்பாட்டை முடிவிலிருந்து காமக்ஷா தேவியின் ஆலயத்திற்குச் செல்லப் பெரும் படிகள் ஏற்பட்டுள்ளன. இப்படிக்கட்டுகளை கூச்பிஹாரின் அரசனாகிய ஷக்லத்துவஜ் ஏற்படுத்தினானெனவும், இக்கோயிலையும் சீர்திருத்தினானெனவும் கூறப்படுகின்றது. இப்படிக்கட்டுகள் மிக்க கரடு முரடானவையாகவே யுள்ளன. எனினும் இம்மலையின்மீது செல்வதற்கு மிக்க அனுகூலமானவையாகவே யுள்ளன. இக்கோயில்வாயில் ஒரு பெரும்

கணேசர் விக்கிரகமுள்ளது. இதற்கடுத்தாப்போல் பௌத்த விக்கிரகமும் பெரும் கல்லில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இங்கிருந்து ஸ்டேஷன் செல்லும் ரோட்டுவரை பல குகைகள் உள்ளன: இவைகளில் அனேகம் சாதுக்கள் வசிக்கின்றனர். இப்படிக்கட்டுகளில் ஏறிச் செல்வதற்கு வயோதிகர்களும் குழந்தைகளும் பெரும் கஷ்டமே அடைகின்றனர். இதன்றியில் இன்னுமொரு மார்க்கம் இக்கோயிலுக்கு உள்ளது. இம்மார்க்கம் பிரம்மபுத்திரா நதி ஸ்நான கட்டத்திலிருந்து ஆரம்பமாகின்றது. இக்கட்டத்தை ஹரிஸ்சந்திரகட் என்கின்றனர் இம்மார்க்கம் இக்கோயிலின் கீழ்ப்பாகத்திலுள்ளது. சாதாரணமாக யாத்திரிகர்கள் பிரம்மபுத்திராவில் ஸ்நானம் செய்து இம்மார்க்கமாகக் கோயிலுக்குச் செல்வர். இக்கட்டத்தை ஹரிஸ்சந்திரகட்டமெனக் கூறுவதற்கு மைமன் சிங்கின் அரசனாகிய இராஜா அரிச்சந்திரன் இக்கட்டத்தை இக்கோயிலுக்கெனத் தயாரித்தனன். இக்கட்டத்திக்கு அமீன்காமில் இறங்கியாவது அல்லது பாண்டு ஸ்டேஷனில் இறங்கியாவது படகிற் பிரயாணமாகி இக்கட்டத்திற்கு வந்து ஸ்நானபான முறையை முடித்துக்கொண்டு கோயிலுக்குச் செல்பவரும் பலருண்டு. இம்மலையில் இருக்கும் கோயிலை புவனேச்வரி அம்மன் கோயிலென்பர். இக்கோயில் இருக்கும் மலை சில வருடங்களுக்கு முன்னர் பூகம்பத்தால் பாதிக்கப்பட, தர்பங்கா மகாராஜா இப்பூகம்பத்தினால் இக்கோயிலுக்கு நேரிட்ட சீர்கேடுகளைச் செப்பனிட்டனர். இக்கோயிலின் பின்புறமிருந்து, கௌஹாத்தி நகரமும், பிரம்மபுத்திரா நதியும், ரெயில் ரோட்டும் பார்ப்பதற்கு மிக்க அழகாக இருக்கும். இங்கு பலர் வைதீகத்தை ஒட்டியும், பலர் நற்காலம் கழிக்க இதன் அக்கம்பக்கங்களில் உள்ள விநோத காட்சிக்கெனவும் செல்வர். இக்கோயிலுக்கு வருபவர்களின் சௌகரியங்களுக்கென அபயானந்த தீர்த்த ஸ்வாமிகள் ஒரு தரும சாலையை ஏற்படுத்தியுள்ளனர். இத்தர்ம சாலை காமக்ஷா கோயிலின் கீழ்ப்புரத்தில் ஒரு குன்றின்மீது உள்ளது. இக்கோயில் சிற்ப வைபவங்களைப் பலவெனவாகக் கொண்டில்லை. இக்கோயிலின் பண்டாக்களும் ஏனைய கோயில்களின் பண்டாக்களைப்போலப் பெருந்துன்பங்களை இழைக்கார். காசி, கயை முதலிய இடங்களில் யாத்திரிகர்கள் படுங் கஷ்டங்களைப்போல் இங்கு பாதிக்கப்படுவதில்லை. யாத்திரிகர்களைத் தம் வீட்டில் அமற்றியும், உணவுகளை அளித்தும், பின்னர் இவர்கள் கொடுத்ததை வாங்கிக்கொள்ளவும் சம்மதிக்கின்றனர். இக்கோயிலின் மகாத்மியங்களை அறிய விரும்பும் வைதீகர்களுக்குப் புராணங்களிலிருந்து மகாத்மியத்தையும் எடுத்துரைப்பர்.

கௌஹாத்தி நகரத்தின் சமீபத்தில் பிரம்மபுத்திராவில் ஒரு தீவு ஏற்பட்டுள்ளது. இத்தீவில் உமானந்தன் என்ற சிவன் கோயிலுள்ளது. இதற்குப் படகிற் செல்லவேண்டும். இது தூரத்திலிருந்து தெப்பம்போலவே காணப்படுகின்றது. இக்கோயிலுக்குத் தென் கரை ஓரத்தின் மலைத்தொடர்பில் அஷ்வக்லாந்தனென்ற ஒரு கோயிலுள்ளது. இக்கோயில் "அனந்த சேஷனு"க்கு ஏற்பட்டுள்ளது. இக்கோயிலை மிக்க பண்டையக் கோயிலென்பர். இங்கு ஒரு கருங்கல்லில் பெரும்பாம்பு சில்பம்கொண்ட விக்கிரகம் உள்ளது. இந்தியாவில் பாம்பு பூஜையெல்லாப் பாகங்களின் புத்துக்களிலும் அரசு வேம்பு அடிகளில் ஏற்பட்டிருப்பினும், பெரும் கோயில்களாக இரண்டுதான் உள்ளன. ஒன்று அலகபாத் தாருகஞ்ஜிலும் மற்றொன்று இங்கும்தான் காணப்பட்டது. இக்கோயிலுக்கு அடுத்தாப்போல் வசிஷ்ட ஆச்சிரமம் உள்ளது. இது காமக்ஷா கோயிலிலிருந்து 11 மைல் தூரத்திலுள்ளது. இதற்கு



கௌஹாத்தி நகரத்திலிருந்து மிக்க நல்ல பாதை ஒன்று ஏற்பட்டுள்ளது. இவ்வாச்சிரமத்திற்கு அடுத்தாப்போல் ஒரு நீர்வீழ்ச்சி உள்ளது. இதுவும் மிக்க அழகியது. எனவே இவைகள் காமக்ஷா தேவியின் யாத்திரையில் ஏற்படுகின்றன. இங்கு வங்கபாஷையும் ஆஸாமியும் பேசுகின்றனர். ஹிந்தி பாஷை மிக்க பிரயோஜனப்படும். ஆங்கிலம் இருப்புப் பாதைகளில் மிக்க உபயோகமாகும்.

# பொருட் செல்வம்.

ஸ்ரீமான் T. ராஜகோபாலன்.

"ஒல்லொழுக்கினரைத் தீயவொழுக்கரென்று
ரைக்கச் செய்யும்
புல்லொழுக்கினரைத் தூயகுலத்தாரொன்றுரைக்கச்
செய்யும்
நல்ல கற்புடைய மாதர் நலத்தை யஞ்சாமை செய்யும்
பல்வகைத் துயருஞ்செய்யும் பாழும் பொருள் பற்று
வார்க்கே."

"சிறியரே மதிக்கு மிந்தச் செல்வம் வந்துற்ற
ஞான்றே
வறியபுன் செருக்குமூடி வாயுளார் மூகராவர்
பறியணி செவியுளாரும் பயிறரு செவிடராவர்
குறிபெறு கண்ணுளாருங் குருடராய் முடிவரான்றே."

இவ்வாறு பொருட்செல்வத்தையும், செல்வத்தினரையும் வெறுத்துத் தூற்றி யொதுக்குதல் சகஜமாயிருந்து வருகின்றது. "உபயோகிக்கப்படும் வஸ்துவின் குணம் உபயோகிக்கும் தன்மையிலிருக்கின்றது" என்ற உண்மையை அறியாததினாலோ, அல்லது அறிந்தும் மறந்துவிடுவதினாலோ அத்தப்பபிப்பிராயம் கிளம்பிப் பரவி நிற்கின்றது.

செல்வம் மூவகைத்து; பொருட் செல்வம், கல்விச் செல்வம், அருட் செல்வம் என்பனவாம். கல்வி-அருட் செல்வங்களின் விளைநிலமாவது பொருட்செல்வமேயாம். மடி-டம்பம்-பெருந்தூர்க்கிருத்தியங்கள் முதலானவைகளுக்குப் பொருட் செல்வம் என்பது துணைக்கருவிபோலத் தோன்றினும், பலதிறப்பட்ட மெய்யான சாஸ்வத நன்மைகளுக்கும் மூலாதாரமாவது அப்பொருட் செல்வமே. மிடி, அல்லது இன்மை என்பது எல்லையற்ற கஷ்டங்கள்-இடையூறு இடுக்கண்களின் வாசஸ்தானமாகத் தோன்றிய போதிலும், அதுவே வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கும் தூண்டுகோலென்ற விஷயம் நிஷ்கபட மனத்துடன் இவ்வுலகசந்திகளின் போக்கையும், பயன்களையும், சம்பவங்களையும் ஆராய்ந்து நிதானித்துப் பார்ப்பவர்க்குத் தெளிவாக விளங்கும். கல்விக்கும் பொருட்செல்வம் இன்றியமையாத சாதனமாகும். எனினும், பொருட் செல்வத்தின் நன்மை, உபயோகம், மேன்மைகளைப் பிரஸ்தாபித்துப் பிரகாசிக்கச் செய்வது கல்வியேயாம். பொருட் செல்வத்தையும் அருட் செல்வத்தையும் பிணைக்கும் பாலம் கல்விச் செல்வமாம். கல்விச் செல்வத்துடன் கலந்திராத பொருட்செல்வம் அல்லது 'பணக்குவியல்' மாத்திரம் நிஷ்பிரயோஜனமானது, அபாயங்களின் உற்பத்தி, அடைக்கல ஸ்தானமானது. இதுபோலவே, கல்வியினால் திருத்திப் பெருக்கி உயர்த்திப் பலப்படுதெதப் படாத அருட்செல்வம் நம்பத்தக்கதல்ல; நீடித்து நிலைத்த நம்பிக்கையை ஊட்டுவிக்கக் கூடியதுமல்ல. சுதந்திரம் பொருட் செல்வத்தினாலும், சமத்துவம் கல்விப் பெருக்கினாலும், சகோதரத்துவம், அருள், ஆட்சி அல்லது ஓட்டத்தினாலுமே ஓங்கி உயர்ந்து வன்மையுற்று வியாபித்து நின்று ஜ்வலிப்பன ஒருவனுடைய மனோவளப்பத்தையும், தோச்சியையும் எவ்வாறு அவனுடைய சொற்செயல்கள் நிரூபிக்கின்றனவோ, அவ்வாறே

ஒருவனுடைய குண நடத்தைகளின் அமைப்பையும், போக்கையும், ஆகர்சத்தையும் வெளிப்படுத்துவது பொருட் செல்வமே. ஒருவனுடைய கூட்டுறவு அல்லது நண்பரின் தன்மையினின்று அவனுடைய சுபாவங்களையும், திறமையையும் அறிவதுபோல் ஒருவன் பொருள் சேர்த்துச் செலவிடும் வழியினின்று அவனுடைய குணாதிசயங்களையும், வாழ்க்கையைப்பற்றிய லக்ஷியத்தையும் நாம் அறியலாம்.

"அருளிலார்க் கவ்வுலக மில்லைப் பொருளிலார்க்
கிவ்வுலகமில்லாகி யாங்கு"

"அருளென்னு மன்பீன் குழவி பொருளென்னுஞ்
செல்வச் செவிலியா லுண்டு."

"ஒண்பொருள் காழ்ப்ப வியற்றியார்க் கெண்பொரு
ளேனை யிரண்டு மொருங்கு."

மானுடப் பிறப்பெய்தியவர் ஒவ்வொருவரும் தேகங்கெடாவண்ணம் அதைப் போஷித்துக் காப்பாற்றி வருவதற்கான பதார்த்தங்களையும், தீக்குண நடத்தைகளை யகற்றி நற்குணவொழுக்கங்களையே விருத்தி செய்வதற்கான மனப்பயிற்சி, அல்லது கல்வியையும், அவரவர் திறமைக்கேற்ற தொழில்களை மேற்கொண்டு, எவ்வித அநியாய நிபந்தனைகள், கட்டுப்பாடுகளால் அடக்கப்படாது செய்தற்கான உரிமையையும், வாழ்க்கைக்கு அநுகூலமான இவை போன்ற ஏனைய சாதனங்களையும் பெறவேண்டும். இதற்கு ஆட்சேபிக்கும் அல்லது எதிராக நிற்கும் 'சட்டம்' 'சம்பிரதாயம்' அல்லது 'தொன்று தொட்டுக் கையாளப்படும் பழக்க வழக்கங்கள்' என்பனவாதிகளைப் பூண்டோடு அழித்து விடல் அதர்மமல்ல. பொருட்செல்வமென்பது சிற்சில மூர்க்கரும் மௌட்டியருமே குவித்துப் பார்த்துக் குதூகலித்து அநுபவித்தற்காக ஏற்பட்டதல்ல. கூரையில்லாக் குடில்கள் நிரம்பியிருக்குமிடத்தில் மாடமாளிகைக் கோபுரங்கள் எவ்வாறு உயர்ந்து நிமிர்ந்து நிற்கும்? அரை வயிற்றுக் கஞ்சிக்குத் தவிக்கும் வறிஞர் பெருகி வருகையில் "கனதனவான்கள்" எவ்வாறு சுகபோகங்களிலுழன்று ரமித்து வாழ முடியும்? இப்பாதகரின் மாடமாளிகைகளெல்லாம் அவ்வேழைகளின் உதிரத்தாலும் நிணத்தாலும் என்புகளாலும் ஆக்கப்பட்டவை போலும்! அவ்வெளியரின் வலி, வருத்தம், நெட்டுயிர்ப்புமே 'இப்பெருமான்'களுக்கான இனிய சங்கீதம்! அத்துர்ப்பாக்கியர்களின் ஓய்வு, ஒழிவு, உல்லாசங்களில்லாது உழைத்து வாடி, வதங்கி, மடிந்து, உலர்ந்துபோன தேகங்களின் பொடிகளே இச் 'ஸ்ரீமான்'களுடைய ருசிகர, ரம்மியமான தின்பண்டங்கள் போலும்!

உழுது உஜ்ஜீவிப்பவன் முதல் மன்னவன் வரையிலும், சிற்றறிஞன் முதல் தேர்ந்து தெளிந்த ஞானியீறாகவும், சுயநலம் பாராட்டுபவன் முதல் பரோபகாரி வரையிலும், அவரவர்க்கான குணாதிசயங்களைப் பெருக்கி, அவரவருடைய கர்மங்களை அறிவித்து, ஒவ்வொருவரும் மற்றவர்க்குத் துணையாக நிற்கச் செய்து, கடைசியில் மானுடர்க்குள் ஐக்கியத்தை உண்டுபண்ணி, ஞானத்தை வளர்த்தி, அருளமுதை ஊட்டுவித்து மாந்தரை மேலேறச் செய்வதே செல்வம் என்பது. செல்வத்தின் முதலிரண்டு வகுப்புக்களும் நன்றியிற் செல்வம், தீதிற் செல்வம் எனப் பிரிக்கப்பட்டுள. தேகாரோக்கியத்திற்கும், மனவிரிவுக்கும், ஆன்ம ஞானத்திற்கும் அநுகூலமாக நிற்பதே நன்றியிற் செல்வம். சோம்பல், நல்குரவு, பிணிகளையும் இவற்றின் மக்களான நானாவித அவஸ்தைகளையும் விருத்திப்பதும், படாடம்பம், வாட்டமனம், மனமாசு, குவிந்த உள்ளம், கொலைகளவு கட்காமக் குரோதாதிகளைச் செழிப்புடன் வளர்த்துவதுமே தீதிற் செல்வம்.

"திரைகடலோடியுந் திரவியந்தேடு."

"கல்லானே யானாலுங் கைப்பொரு ளொன்றுண்டாயின்
எல்லாருஞ் சென்றங்கெதிர் கொள்வ—ரில்லானை
யில்லாளும் வேண்டாள் மற்றீன்றெடுத்த தாய் வேண்டாள்
செல்லாதவன் வாயிற்சொல்."

என்பனவைகளை ஆப்த மொழிகளாகக்கொண்டு, 'குறையுறப் புதைத்து வைத்துக் குதுகுதுப்படைந்து காத்துறவையுறு பணப்பேயென்னு நாமம்' படைத்து வரும் 'பணக்காரர், கோடீசுவரர்' என்றவரும் கள்வரும் ஓரே இனத்தைச் சேர்ந்த புன்மாக்கள். பின்னவர் பகிரங்கமாய்ப் பிறரை வருத்துகிறார்கள். முன்னவரோ கபடம், நடிப்பு, மதுர, சாதுர்ய வார்த்தைகளால் சாதுக்களைத் துன்பத்திற்குள்ளாக்குகிறார்கள்!

மனோவமைப்பையும், வளர்ச்சியையும், ஆத்மஞானத்தையும்பற்றிய வரையிலும் மாந்தர்க்குள் ஏற்றத் தாழ்வுகளிருந்து வருகின்றன. ஆனால், தேகபோஷணை, சரீரசுகத்தைச்சார்ந்த வரையிலும் யாதொரு பேதமுமில்லை. இவ்விஷயத்தில் பேதங் கற்பித்துப் பெருக்குபவர்களைப் பலாத்காரமாக அடக்கி, அவர்கள் செருக்கை யழித்துச் சத்தியக் கொடியை நாட்டுதலே சீர்திருத்தங்களிலெல்லாம் முதன்மையானது.

"மானங்குலங் கல்வி வண்மை யறிவுடைமை
தானந்தவமுயற்சி தாளாண்மை தேனின்
கசிவந்த சொல்லியற்மேற் காமுறுதல் பத்தும்
பசிவந்திடப் பறந்துபோம்"

"தரித்திரமிக்க வனப்பினை யொடுக்கிச் சரீரத்தை
யுலர்த்தவாட்டுந்
தரித்திரமனவாச் சோம்பலை யெழுப்புஞ் சாற்றரு
(முலோபத்தை மிகுக்குந்
தரித்திரந் தலைவன் தலைவியர்க்கிடையே தடுப்பருங்
(கலாம் பல விளைக்குந்
தரித்திர மவமானம் பொய் போராசை தருமிதிற்
(கொடிய தொன்றிலையே."

"பிறந்தகுலமாயும் பேராண்மைமாயுஞ்
சிறந்த தங்கல்வியுமாயுங் —கறங்கருவி
கன்மேற் கழுவுங்கணமலை நன்னா—
வின்மை தழுவப்பட்டார்க்கு."

இத்தகைய கொடிய பசியை யாற்றி, தரித்திரத்தினின்று விடுவித்துக்கொள்ள மாந்தரிற் பெரும்பாலாரும் "சேவித்துஞ் சென்றிரந்துந் தெண்ணீர் கடல் கடந்தும் பாவித்தும் பாராண்டும் பாட்டிசைத்தும்" தம் வாணாளைச் செலுத்தி வருகிறார்கள். இவ்வாறு, பசிப்பிணியால் வருந்தி, தரித்திர வலையிற் சிக்கி மாய்பவர் ஒரு பக்கத்திலும், பல இழிய விதங்களில் "பாடுபட்டுத்தேடிப் பணத்தைப் புதைத்து வைத்துக் கேடுகெட்ட மானுடர்" வேறொரு பக்கத்திலும், வருமானத்தை யெல்லாம் வாரி யிறைத்துக் கடன்பட்டு வாழும் புல்லறிஞர் வேறொரு பக்கத்திலுமாக இருந்து வருவதை யறியாதவரிலர்.

"ஆனமுதலிலதிகஞ் செலவானான்
மான மழிந்து மதிகெட்டுப்—போனதிசை
எல்லார்க்குங் கள்ளனா யேழ்பிறப்புந் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனானாடு"

என்பதை அறியாது குடி, சூது, வேசையின்பம், இன்னு மிவைபோன்ற இதர படாடோபங்களில் தலையிட்டுக் கைப்பொருளை யிழந்து, சரீர முடைந்து, மனம் பாழ்த்து, நெஞ்சு துடித்து, முறை பிழரிப் போகையில் கடன் வாங்கிப் பிழைக்க யத்தனிக்கிறார்கள் சில நூற்றுவர்! புலி வாயினின்று தப்பியோடி வேடன் வலையிற் சிக்குண்டு தவிக்கும் மான்போல், வறுமைக் குட்பட்டு அல்லற்படுபவரில் பெரும்பாலாரும் கடன் என்ற அகழியிற் குதித்து வருந்துகிறார்கள்! கடன்பட்டாரும் கடன்கொடுத்தாரும் உய்வதில்லையென்பது உலகப் பிரசித்தம். பாம்பின் விஷமானது ஏறிப் பரவி உடலைக் கெடுத்து உயிரைப் பறக்கச் செய்யும்; கடன் என்ற விஷமோ "அவலக் கவலை கையாறழுங்கல்" முதலானவைகளை விருத்தி செய்து, பாசங்களையெழுப்பி மனத்தை மடக்கி, உள்ளத்தை யுண்டு, பொறிகளை அல்லோல கல்லோலப்படுத்தி விடுகின்றது! கடன் மலைப்பாம்புபோன்றது. அப்பாம்பின் பார்வைக்குட்பட்ட பிராணிகள் பிழைக்கா. அப்பாம்பின் கோரப் பார்வையினால் வசீகரிக்கப்பட்ட பிராணிகள் நிலை தடுமாறி விடுகின்றன; அதனின்று விடுபட்டு ஓடுவதற்காகச் செய்யும் பிரயத்தனங்களெல்லாம்

அப்பாம்பின் வாய்க்குள்ளேயே நுழைதற்கான கருவிகளாகி விடுகின்றன! நெருங்கிச் செல்லச் செல்ல பாம்பின் விஷமூச்சு அப்பிராணிகளைத் திக்கு முக்காடச் செய்துவிடுகின்றது. பிடிப்போ? அம்மம்ம! தசை, நரம்பு, என்புகளை யெல்லாம் துகளாக்கி விடுகின்றது! வாயோ? அகண்ட, அகாத மாணக் கடலாம்!

பல்லோரிடஞ் சென்று உயர்த்துவது செல்வம்; மானுடராசியின் மேலேற்றத்திற்கான சன்மார்க்கங்களில் செலவழிக்கப்படுவதே செல்வம் என்பது. "கழனிகளில் பொன்னிறத்தை யொத்த செங்நெற்பயிர்கள் பொதிந்திருக்கும் கதிர்களோடு தமது கருவும் உட்படவாடாநிற்கையில் அங்கு மழையைப் பொழியாமல், சமுத்திரத்தினிடையில் நீரைச் சொரியும் மின்னல் விளங்கப்பெற்ற மேகங்கள்போல், தம்மிடம் அகப்பட்ட செல்வத்தைச் சற்பாத்திரத்தில் உபயோகிக்காமல் தகாதவர்க்கு உதவும் அறிவிலிகளின் வாழ்க்கை வாழ்க்கையாமோ? எட்டி பழுத்தென்ன? லோபியிருந்தென்ன? சூனியமேயாம்.

"கல்வி, மதம், ஞானம், அருள், கடவுள்" என்ற சொற்கள் முழங்கி வருகின்றன. வேண்டிய உணவு கிடைக்கப் பெறாது உடுக்கக் கந்தையுமில்லாது இடர்ப்படுபவர்கள் தம் மனத்தை எவ்வாறு அப்பெரும்பொருள்கள்மீது செலுத்தக்கூடும்? அவைகளைப்பற்றிய போதனை, அல்லது பிரசங்கங்களெல்லாம் அப்பேதையர் உள்ளத்தில் எவ்வாறு ஊன்றி அவர்களை உயர்த்தும்? மனோதிடமும் வளர்ச்சியும் அத்தியாவசியமாவன: இவைகள் தேகாரோக்கியத்தைப் பொருத்தன: தேகாரோக்கியம் நல்லுணவினின்று உண்டாகின்றது: இதற்குப் பொருட்செல்வம் வேண்டும். ஆதலால், பொருள் படைத்தோர் தம் பொருளை இவ்வழிகளிலல்லவோ உபயோகிக்கவேண்டும்.

ஏழைகளுக்கென ஏற்பட்ட தர்மாலயங்கள் உண்மையில், செல்வர் வம்சம் அல்லது இனத்தவராலேயே அநுபவிக்கப்பட்டு வருகின்றன! எளியர்களை இடுப்பொடிய, நாவுலற, கண் பஞ்சடைய, மனம் பதற, நெஞ்சு துடிக்க வருத்தி உழைக்கச் செய்து, பொருள் குவித்து, இப்பொருளின் சிறுபாகத்தைக் கோவில், குளம், மடம், அன்னசத்திரம், பாடசாலைகளெழுப்புவதில் செலவிடுகிறார்கள் சில "மகான்கள்." இவைகளின் வண்ணத்தையும், வனப்பையும், புதைந்து கிடக்கும் உள்ளக் கருத்தையும் ஓட்டியவரையிலும் புகழத் தக்கனவேயாம். ஆனால் அவைகள் வெளிவந்த விதத்தையும், நிர்வகிக்கப்படும் ஒழுங்கையும், யதார்த்தமாக அவைகளினின்றுண்டாகும் பலன்களையும் பார்க்குமிடத்து, ஐயமும், திகைப்பும், வருத்தமும் மேற்கிளம்பி, நம்மைச் சூழ்ந்து கலக்குகின்றன!

வீண் மனோபாவனைகளை யொழித்து, பகட்டுத் தொழில்களை விடுத்து, இழியழிபொருள்களினின்று மனத்தைத் திருப்புவோமாயின், "பார்ப்பதற்குச் சகியாத வறுமை," "வெறுத்தற்குறிய பொருட் செல்வம்" என்ற விபரீத வேற்றுமைகளற்று, யாவரையும் துன்புறுத்தும் பசி நோய் நீங்கி, கல்விச் செல்வம் செழித்துப் பரவி, அருட் செல்வம் உதித்து ஓங்கும். இதனால் பாம்பொருளையும், சன்மார்க்கத்தையும் ஒவ்வொருவரும் தமது இல்லத்திலும், உள்ளத்திலும் கண்டு உயரவே, அழிவிலின்பம், ஐக்கியம், அடக்கம், சமாதானம் என்பனவாதிகள் இப்புவியின்மீது நிலைத்து நீடித்து நிற்கும். இவைகளைப் பூரணமாகப் பெற்றுள்ளதே "தேவலோகம்" என்பது.

# குழந்தைகளின் பால் கட்டியும், சாந்தியும்.

ஜனாப் ஹக்கீம் ம. அ. ஷம்சுத்தீன் சாஹிப்.

(248-வது பக்கத்தொடர்ச்சி.)

முன் பக்கத்தில் வியாதியால் வரும் பால் கட்டி நோயைப் பற்றி விவரம் சொல்லி அதற்குச் செய்யும் சிகிச்சையும் ஒருவாறு இலகுவாய்ச் சொல்லி முடித்தோம். இச்சஞ்சிகையில் சாபத்தினால் வரும் வயிற்றுக் கட்டியைப்பற்றிச்சொல்லுவோம். சாபத்தினால்வரும் என்றால் சிலர் நம்புவதில்லை. கண்ணால் நேரே பார்ப்பதை மாத்திரம் ஒப்புக்கொள்வர் சிலர். வியாதியானது நோயால் மாத்திரம் வருமென்றும், சாபமாவது துக்கமாவது பிறரைப் பீடிக்கவாவது என்றும் வாதாடுவார் சிலர். இவ்வகைக் குதர்க்கம் பேசாதவர்கள் பலர் இல்லாமலில்லை. உதாரணமாக—கண்திருஷ்டி யென்பது உண்மை. அது பிறர்மேல் தாக்கி தாக்கினவர்களைக் கெடுக்கும் என்று சொல்லும்போது, அதைச் சில காலத்திற்குமுன் நம்பாமல் குதர்க்கம் பேசியவர்கள், இப்போது ஹிப்னாடிஸம், மெஸ்மரிசம் போன்ற கண்களின் பார்வையாற் பிறரைத் தூங்கவைப்பதும், மயங்க வைப்பதும், இன்னும் அநேக அற்புதங்களைப் பிரத்தியட்சமாய்ச் செய்வதைப் பார்த்த பிறகு, முற்காலத்து ஜனங்கள் சொல்லி வந்த கண் திருஷ்டி உண்டு என்று நம்புகிறார்கள். இப்படி இன்னும் பற்பல விஷயங்கள் நாம் தெரிந்து கொள்ளாமல் பெரியோர்களால் சொல்லப்பட்ட நீதி விஷயங்களையும் நிராகரித்து வருகிறோம். ஒவ்வொருவிஷயத்தின் அந்தரங்கம் நாம் தெரிந்து கொள்ளச்சக்தி யில்லாததனால் அவைகளைப் பொய்யென்று நீக்கித் தள்ளுகிறோம். உதாரணமாக—ஒருவன் தூங்குகிறான்; அவன் தூக்கத்தில் கனாக் காண்கிறான்; கனாக் காணும் சமயம் அது கனாவென்று அவன் நினையாமல், உண்மை நிகழ்ச்சியாகவே நம்புகிறான். பிறகு விழித்துக் கொள்ளவும், தான் முந்தி உண்மையென்று நினைத்ததெல்லாம் உண்மையல்லவென்றும், இப்பொழுதுதான் உண்மை விழிப்பு விழித்துக் கொண்டோமென்றும், முன் நிகழ்ந்தனவெல்லாம் தூக்கத்திற் கண்ட கனாவாக இருக்குமென்றும் தீர்மானித்து விடுகிறான். இவன் இப்போது விழித்ததனால்தான் இப்படித் தீர்மானித்தான். எப்போதும் தூங்கிக் கொண்டேயிருப்பானாகில், தன்னுடைய தூக்கத்தில் நிகழ்ந்த கனாவை, முன் உண்மையென்று நினைத்தபடியே உண்மையாகத் தான் நினைத்துக் கொண்டிருப்பான். இதைப்போல் முற்காலத்திற் சொல்லப்பட்ட அநேக விஷயங்களில் கண் திருஷ்டியும் உண்மையாகவே பிறரை தாக்கக்கூடியது என்று சொல்வதை நம்பாமல் தூக்கம் போயிருந்திருக்கிறார்கள். தற்காலம் வெவ்வேறு வழியாக மனோ சக்தியின் அம்சத்தில் சிலதைமாத்திரம், கண்களின் மூலமாய், ஹிப்னாடிஸம், மெஸ்மரிசம் முதலியவைகளால் வெளிப்படுத்தவே, இவ்விஷயத்தில் மாத்திரம், தூக்கத்திலிருந்து விழித்துக்கொண்டது போலும், முன் நிகழ்ந்ததும் தாம் நினைத்ததும் உண்மையல்லவென்றும், தீர்மானித்து நம்புகிறார்கள். இதைப்போல் கடவுளால் மனிதனுக்கு அளிக்கப்பட்ட அபூர்வ சக்தியை நாமே அறியாமலிருக்கிறோம். ஆக இதையே சொல்லிக்கொண்டு போனால் நாம் எடுத்த விஷயம் இன்னும் சொல்லமுடியாமல் அதிதூரம் நீண்டு கொண்டு போகிறபடியால் இன்னும்

ஒரு சிறு விஷயம் சொல்லிவிட்டு எடுத்த விஷயத்தை முடிப்போம். அதாவது முன் உதாரணத்திற் சொல்லியபடி சிலர் தூக்கத்தில் கனாக்கண்டு கொண்டிருக்கும்போது, தாம் காணுவது கனா தானோ என்றும் சந்தேகிப்பதும் உண்டு. சிலர் தான் காணுவதெல்லாம் கனாதான் என்றும், இவை பொய்யென்றும், விழித்த பிறகு இவையெல்லாம் இல்லாமல் வேறான உண்மை விஷயமிருக்குமென்றும் நினைத்துக்கொண்டே தாம் விழிக்க வேண்டுமென்று நினைத்து விழித்துக் கொள்வார்கள். இப்படிப் பெரும்பாலும் நல்ல மனமுடையவர்கள் காணுவது பழக்கம். இதைப்போல் அநேக பெரியோர்கள் இவ்வுலக விஷயங்களில் அநேக தீமைகளை இவ்வுலகிலிருந்து கொண்டே நீக்கிவிட்டு, நன்மையான விஷயத்தில் விழித்துக் கொண்டும், நல்வழியில் நடந்துகொண்டும், இன்னும் தமக்குப் பின்னால் வரும் ஜனங்களும் நன்மை தீமைகளை உணர்ந்து தர்ம வழியில் செல்ல வேண்டியும் அநேக கிரந்தங்களை இயற்றியுள்ளவர்கள். நாம் அதிலுள்ள வழிகளை உணர்ந்து அதன்படி நடக்கவேண்டும். அதில் வைத்திய சாஸ்திரமும் ஒன்றாகும். அதில் ஆகாராதிகளால்வரும் நோயை நீக்கிச் சாபத்தினால் வரும் நோயைப்பற்றி என்ன சொல்லப்பட்டுள்ளது என்பதையும், அதிலும் நாம் எடுத்துக்கொண்ட விஷயம் வயிற்றில் கட்டி உண்டாகக் கூடிய வியாதியானதனால், சாபத்தினால் வயிற்றில் வியாதி எவ்வண்ணம் சம்பவிக்கும் என்பதையும் மாத்திரம் ஆராய்வோம். வயிற்றுக் கட்டிகள், வயிற்றுவலி, குன்மம், எரிகுன்மம், தொண்டைக் கட்டிகள் முதலானவை வருவதன் காரணம், பிறர் பசியால் வருந்துவதைக் கண்ணுற்றும் அவர்களுக்கு எக்காரணத்தாலும் அன்னமிடாமல் தானும் அல்லது தன் உறவினர்களுடன் மாத்திரம் உண்ணுவதாலும், இன்னும் இவ்வகை பசித்தோர்க்கு ஒருவர் இரங்கி அன்னமளிக்க எத்தனிக்கும்போது அதை எக்காரணத்தாலாவது கொடுக்கவிடாமல் தடுத்து விடுவதனாலும், எந்த வகையினாலாவது பிறரைக் கெடுத்து வயிறு எரியும்படி செய்வதாலும், குடும்பத்தைக் கலைத்துத் திக்காலுக்குத் திக்கால் பிரிந்து விடும்படிச் செய்வதாலும் மேற்படி நோய்கள் சம்பவிக்குமென்று சாஸ்திரம் கூறுகிறது. இவைகள் இல்லையென்று ஆட்சேபம் செய்வதற்கு இல்லை. ஏனெனில் மனோ சக்தியால் ஒருவரை மயங்கவைக்கவோ, தூங்கவைக்கவோ ஹிப்னாடிஸம் போன்றதால் நாம் நினைத்தபடி பிறரைச் செய்து விடக்கூடிய நிலைமையை நன்கு அறிந்திருக்கிறோம். ஆனதனால் ஒருவன் பசியாயிருக்கும்போது அவனை விட்டு நாம் புசிக்கப் போவோமானால் (உடுக்கப் பார்த்திருப்பான், உண்ணப் பார்க்கமாட்டான் என்ற பழமொழிபோல), பசியால் வருந்துகிறவன், சாப்பிடச் சென்றவன்மேல் தன் எண்ணத்தைச் செலுத்தி 'அவன் வயிற்றில் கட்டி புறப்பட; மழுவைக்காய்ச்சி ஊற்ற; என்னைப் பசியோடிருக்கவிட்டுச் சாப்பிடச் செல்கிறானே' என்று கட்டாயம் மனம் எவ்விடமும் செல்லாமல் ஒரே எண்ணத்துடன் சாபமிட்டுக் கொண்டு தானிருப்பான். இந்த சாபம் அவனுக்குக் கட்டாயம் படாமலிராது. இப்படியே கொடுப்பதை விலக்கப்பட்டவனுக்கும், வயிறு எரியச் செய்பவனுக்கும், குடும்பம் கலைத்து விடுபவனுக்கும் இவ்வகை ஆத்ம பாணங்கள் போய்க் கட்டாயம் தைத்துக்கொள்ளும். ஆத்ம பாணங்களை வேர், பட்டை, மருந்து வகையறாக்களால் நீக்க சாத்தியமில்லை. வாய்ப்பேச்சாலும் நீக்க சாத்தியமில்லை. எப்படியென்றால், ஒரு பசிப்பவனுக்கு ஆகாரம் அளிக்காமல் தான் மாத்திரம் உண்டு, அவனுக்கு அநேக சமாதானம் செய்தாலும் அவனுக்கு ஆத்ம திருப்தியாகாது. ஆகையினால் ஏழைகளுக்கு



ஆத்ம திருப்தி செய்விக்க வேண்டியது எந்த மரபினருக்கும் அவசியமான காரியமாகும். வீட்டுக்கு ஒரு பிடி சோறாக, இரப்பவர்களுக்கு அன்புடனளித்தால் அதுதான் அவர்களின் பசிப்பிணியை நீக்கி வைத்ததாகும். இக்காரணம்பற்றியே "ஐயமிட்டுண்" என்று ஒரு வாக்கியமும் சொல்லப்பட்டுள்ளது. இப்படிச் சமைக்கும் ஆகாரத்தில் முதலில் பசியால் வருந்தும் ஏழைகளுக்குக் கொஞ்சம் அன்னமளித்துவிட்டால் மீதி சாதம் தர்மம் செய்த பாக்கியம் அடைந்துவிடுகிறது. ஆனதனால் அது தேவாமிர்தத்துக்கு ஒப்பாகக் கருதப்படுமென்று சாஸ்திரம் கூறுகின்றது. சிலர் இதற்கு மாறாகத் தமக்கு சமைத்த ஆகாரத்தைத் தம் வர்க்கத்தார் தவிர மற்றவருக்குக் கொஞ்சம் கொடுத்துவிட்டால் மீதிசாதம் தாங்கள் சாப்பிடுவதற்கு உரிமையாகாமற் கெட்டுப் போகின்றதென்று கருதுகிறார்கள். அப்படி சம்மதித்துக் கொடுக்கும் மனமுடையோர் கொடுத்தாலும், அவர் இனத்தார் தூஷிக்கிறார்கள். ஆகையால் அப்படிக் கொடுப்பவரும் எங்கே வர்க்கக் கட்டுப்பாடு செய்துவிடுவார்களோவென்று அஞ்சுகின்றனர். இதனால் தானும் கொடுப்பதில்லை, கொடுப்பவர்களையும் விடுகிறதில்லை என்று ஆகிவிடுகிறது. இன்னும் சில படித்த வகுப்பினர்களும் தனவந்தர்களும் அபாண்டப்பொய்களைச் சிருஷ்டித்தும், வயிறு எரியச் செய்தும், ஏழைகளைக் கலங்கவிட்டுப் பிரித்தும் விட்டுவிடுவார்கள். இவைகள் உண்மையாயின் வைத்திய சாஸ்திரம் கூறுகிறபடி ௸யார்களுக்கு ௸ நோய்கள் சம்பவிப்பது உண்மையேயாகும். 'இவைகளைப் பெரியவர்கள்தானே செய்வார்கள். சிசுக்களுக்கல்லவா வயிற்றுக் கட்டி சம்பவிக்கிறது. செய்யும் பெரியோர்களுக்கல்லவா இது சம்பவிக்கவேண்டும்' என்று இதைப் படிக்கிற நண்பர்கள் நினைக்கலாம். கடவுள் பெற்றோர்களாகிய தாய் தந்தையரைச் சோதிக்கவேண்டுமானால் அவர்கள் குழந்தையைக்கொல்ல விட்டுத்தான் பார்ப்பதுவழக்கம். சிறுத்தொண்ட நாயனாரைப் பரீக்ஷித்ததும் கவனிக்கத் தக்கது. தாய் தகப்பனின் மனதைச் சோதிக்கக் குழந்தையைக் கொல்வானேன்? குழந்தைமேல் குற்றம் உண்டு என்று சொல்வதற்கில்லை. அதைப்போலவே சாகும் குழந்தைகளுக்கு அன்றோடு கஷ்ட நிவர்த்தியாகிவிடுகிறது. பெற்றதாய் தந்தையருக்கோ சதா நினைத்து நினைத்து நரக வேதனைபோன்ற கஷ்டம் உண்டாகிறது. ஆகையால் மேற்கண்ட தர்ம சிந்தனையில்லாதவர்களின் குழந்தைகளை வியாதிக்குள்ளாக்கித் தாய் தந்தையரை சிக்ஷை செய்வதற்கென்றே அச்சாபம் வந்து பெற்றோர்களை துக்கப்படுத்துகிறது. ஆகையால் இவர்கள் நேர்வழியில் நடந்து தர்ம சிந்தனையைச் சரியாகக் கைக்கொள்வாராகில் குழந்தைகள் வியாதியிலிருந்தும் மரணத்திலிருந்தும் காக்கப்படும் என்று ௸ விஷயம் உணர்த்துகிறது. இதற்குச் சாந்தி மேற்கண்ட நோய் சம்பவிக்குமிடத்தில் மேற்கண்ட துர்க்குணங்கள் பழக்கத்திலிருந்தாலும் அதை மாற்றிக் தர்ம சிந்தனையுடன் நடக்கவேண்டும். தாம் தர்ம சிந்தனையுள்ளவர்கள்தான் என்று இருந்தாலும், மேற்கண்ட வியாதி சம்பவித்தால், ஒவ்வொரு வேளையும் தாம் ஆகாரம் புசிக்கு முன் தம் சக்திக்குத் தக்கவாறு பல ஏழைகளுக்கு வித்தியாசம் பாராட்டாமல் அன்னமளித்துப் பிறகு தாம் சாப்பிடவேண்டும். இதுவே இந் நோய் தீர்வதற்குத் தக்க சாந்தியாகும்

# மார்க்கோ போலோவின் யாத்திரைகள்.

ஸ்ரீமான் S. R. அனந்த நாராயண அய்யர்.

(294-ம் பக்கத் தொடர்ச்சி.)

பதினைன்காம் அத்தியாயம்.

எர்கினூல்—காட்டெருதுகள் — புனுகு — எக்ரிகேயா—தண்டாக்—பிரெஸ்பிடர் ஜான்—அர்கான்ஸ் — ஸின்டிவின்—இடிபா — ஜங்கமூர்—வியாண்டு.

இங்கிருந்து நாற்பது நாட் பயணத்துக் கப்பால் சமுத்திரமும் அதனருகில் ஒரு மலையுமிருக்கிறது. அங்கு கொக்குகளும், நேர்த்தியான வல்லூறுகளும் வளருகின்றன. அவை அங்கிருந்து சக்கரவர்த்தியின் அரண்மனைக்குக் கொண்டுபோகப்படுகின்றன.

இப்பொழுது நாம் காம்பியன் பட்டணத்துக்குத் திரும்பிச் செல்லவேண்டும். காம்பியன் பட்டணத்திலிருந்து ஐந்து நாள் கிழக்கு நோக்கிப் பிரயாணஞ் செய்தால் சக்கரவர்த்திக்குக் கீழ்ப்பட்ட டாங்கூட் மாகாணத்திலுள்ள எர்கினூல் இராஜ்யத்திற்கு வரலாம். இவ்விராஜ்யத்தில், அனேகம் விக்கிரகாராதனைக்காரரும் நெஸ்டோரியக் கிறிஸ்தவர் சிலரும், துருக்கர் சிலருமுண்டு. இங்குள்ள அனேகம் கோட்டைகளிலும் பட்டணங்களிலும் முக்கியமானது எர்கினூல் என்பது தான். இங்கிருந்து தென் கிழக்காக நெடுந்தூரஞ் சென்றால் கத்தேயைச் சேர்ந்த பிராந்தியங்களைச் சேரலாம். கத்தேயை நோக்கித் தென் கிழக்காகச் செல்லும் வழியில் 'சிங்கை' என்ற ஒரு பிரசித்தமான பட்டணமுண்டு. அதுவே டாங்கூட்டில் இருப்பதும் சக்கரவர்த்திக்குக் கீழ்ப்பட்டதுமான மாகாணத்திற்கும் பெயர். அங்குள்ள ஜனங்களிற் சிலர் கிறிஸ்தவர்கள், சிலர் மகமதியர்கள், மீந்தவர் விக்கிரகாராதனைக்காரர்கள்.

இங்கு யானைகளைப்போல் பெருத்த காட்டெருதுகள் உண்டு. அவை மிக அழகானவை. அவைகளின் ரோமம் வெள்ளையாயும் கருப்பாயுமிருக்கும். அவற்றின் தோளிலுள்ள மயிர்மாத்திரம் மூன்றுசாண் நீளமிருக்கும். மற்றைய இடங்களிலுள்ளது குட்டையாகவிருக்கும். அது நேர்த்தியாகவும், வெள்ளையாகவும் பட்டைவிட அதிக நயமுள்ளதாகவுமிருக்கும். அம்மயிர் அபூர்வமான வஸ்துவென்று கொஞ்சம் நான் வெனிஸ்ஸுக்குக் கொண்டுவந்தேன்.

இன்னாட்டார் அனேகம் காட்டெருதுகளைப் பழக்கி நாட்டுப் பசுக்களுடன் சேர்க்கின்றார்கள். இச்சேர்க்கையால் உண்டாகும் சேங்கன்றுகளும் எருதுகளும் சாதாரணமான எருதுகள் தூக்கும் சுமைகளைப்போல் இரண்டு பங்கு சுமைகளைத் தூக்கவும், அவைகளைப்போல் இரண்டு பங்கு நிலத்தை உழுவதற்கும் சக்தியுடையவையாயிருப்பதினால், அவைகளே உலகத்தில் வேறெந்த நாட்டிலுமுள்ள எருதுகளினும் சிறந்தவைகளாம்.

இந்த நாட்டில்தான் உலகத்திற் பிரசித்தி பெற்ற புனுகு உண்டாகின்றது. அது, ஆட்டைப்போல் பெருத்ததும், மானைப்போல் ரோமமுடையதும், அராபிய மானைப்போல் காலும் வாலுமுள்ளதும், கொம்பில்லாததுமான ஒரு மிருகத்தினிடத்தில் உண்டாகின்றது. அம்மிருகத்திற்கு மூன்று விரல் நீளமும், தந்தத்தைப்போல் வெண்மையாகவும் மேலே யிரண்டுங் கீழே இரண்டுமாக நான்கு பற்களுண்டு; அது பார்வைக்கு வெகு லக்ஷணமாயிருக்கும். பௌர்ணமி நெருங்கி வருஞ் சமயத்தில் இம்மிருகத்தின் அடிவயிற்றில், தொப்பிளுக்குக் கீழாக, புருடைபோன்ற இரத்தம் நிறைந்த ஒரு பை வளருகின்றது. பௌர்ணமி தினத்தன்று வேட்டைக்காரர்கள் இம்மிருகத்தை வேட்டையாடிக் கொன்று, அந்தப் புருடையை யறுத்து, வெயிலில் உலர்த்துவார்கள். இதுதான் புனுகெனப்படுவது. இம்மிருகத்தின் மாமிசம் சாப்பிட ருசியாயிருக்கும்; இதன் தலையையும் காலையும் உலர்த்தி நான் வெனிஸ்ஸுக்குக் கொண்டுவந்தேன்.



இன்னாட்டார் வியாபாரமும் கைத்தொழிலுஞ் செய்து ஜீவிக்கின்றனர். இங்கு தானியம் விசேஷமாக விளைகின்றது.

இவர்கள் விக்கிரகாராதனைக்காரர்கள்; இவர்களது உடல் பெருத்திருக்கும்; மூக்கு சிறுத்திருக்கும்; மயிர் கறுத்திருக்கும்; தாடியில்லை; முகவாய்க் கட்டையில் மாத்திரம் எண்ணிறைற்போல் நான்கு ரோமங்களிருக்கும்.

இங்குள்ள ஸ்திரீகள் அதியத்புதமான கட்டழகிகள்; ஆதலால் இன்னாட்டார் தங்களுக்குக் கலியாணஞ் செய்து கொள்ளப் பெண் தேடுகையில், அழகு மிக்க கன்னிகைகளைத் தேடுவார்களே யன்றி, உயர்ந்த குலத்திலாவது, பணக்காரர் வீட்டிலாவது பிறந்தவர்களைத் தேடுவதில்லை. இதனால், பெரிய பிரபுக்களெல்லாம், பெரும்பாலும், ஏழைக் குடும்பங்களிற் பிறந்த சுந்தரிகளையே கலியாணஞ் செய்துகொள்வது வழக்கமாயிருக்கிறது. அப்பொழுது அப்பெண்ணின் தாயாருக்கு இவர்கள் சீதனம் கொடுப்பார்கள்.

இம்மாகாணம் இருபத்தைந்துநாட் பயணம் விஸ்தீர்ணமுள்ளது; மிகவும் செழிப்பானது; இங்கு எட்டு அல்லது பத்துக் கை நீளமுள்ள இறகுகளையுடைய மிகப் பெரிய மயில்கள் உண்டு. பலவிதமான சிறந்த வர்ணங்களுடன் கூடிய மிக்க அழகான தோகைகளுடைய வேறு பலவகைப் பட்சிகளும் இங்குண்டு.

இங்குவிட்டுப் பின் [illegible] களைப் பயணத்திற்கப்பால் எக்ரிகேயா மாகாணமிருக்கிறது. அதில் அனேகம் கோட்டைகளும் நகரங்களுமுண்டு. இம்மாகாணமொழிந்த மற்றைய பிராந்தியங்களெல்லாம் டாங்கூட் பிரதேசத்திலேயே யிருக்கின்றன. இம்மாகாணத்திலுள்ள முக்கிய பட்டணத்திற்கு கால்லேஷியா என்று பெயர்; அங்குள்ள ஜனங்கள் விக்கிரகாராதனைக்காரர்கள்; நெஸ்டோரியக் கிறிஸ்தவர்களுக்கு இங்கு மூன்று கோவில்கள் உண்டு. இக்கிறிஸ்தவர்கள் சீனச் சக்கரவர்த்திக்குக் கீழ்ப்பட்டவர்கள்.

வெண்ணிறமான ஆட்டு ரோமத்தினாலும். ஒட்டகைகளின் ரோமத்தினாலும் இவ்வூரில் கம்பளிகள் நெய்யப்படுகின்றன. இவைகளை விடச் சிறந்தவை உலகத்தில் வேறெங்குங் கிடைப்பதில்லையென்றே சொல்லலாம்.

இந்த எக்ரிகேயா மாகாணத்திற்குக் கிழக்கில் தண்டாக்மாகாணம் இருக்கிறது. அங்கும் அனேகம் நகரங்களும் கோட்டைகளுமுண்டு. அங்கேதான் பிரஸ்பிடர்ஜான்வஸிக்கிறார். அவர் இப்போது சீனச் சக்கரவர்த்திக்குக் கப்பங் கட்டுகிறார். இப்போதிருக்கும் பிரஸ்பிடர்ஜானுக்கு ஜார்ஜ் என்று பெயர். அவன் ஒரு கிறிஸ்தவப் பாதிரி. அன்னாட்டு ஜனங்கள் அனேகர் கிறிஸ்தவர்கள். பிரஸ்பிடர் ஜான், செங்கிஸ்கானால் கொல்லப்பட்டார். அவரது சந்ததியாருக்குச் சீனச் சக்கரவர்த்திகள் தங்களது பெண்களைக் கலியாணஞ் செய்து கொடுக்கின்றார்கள். இப்போதிருக்கும் ஜார்ஜ் அரசர், பிரஸ்பிடர் ஜான் வம்சத்து நாலாவது அரசர். பிரஸ்பிடர் ஜான் ஆண்டுவந்த நாடுகளெல்லாம் இப்போது இவரது ஆளுகையிலில்லை. இங்கு அர்கான்ஸ் என்று ஒரு ஜாதியார் இருக்கின்றார்கள். அவர்கள் இன்னாட்டிலுள்ள மற்றையோரினும், அதிக லக்ஷணமும், வியாபாரத்தில்

190374

தேர்ச்சியும் பெற்றவர்கள். விக்கிரகாராதனைக் காரருக்கும் மகமதியர்களுக்கும் பிறந்தவர்கள். அவர்கள் வசிக்கும் இரண்டு நாடுகளுக்கும் ஆக்மொகாக் என்று பெயர்; ஆனால், அந்நாடுகளில் வசிப்போர் அவைகளுக்கு உங்மங்குல் என்று பெயரிட்டிருக்கின்றனர். உங் மாகாணத்தில் காக் ஜாதியாரும், மங்குவில் தார்த்தாரும் வசிக்கின்றனர்.

இங்கிருந்து கத்தேயை நோக்கி, ஏழுநாள் சவாரிபோகும் வழியில், விக்கிரகாராதனைக் காரரும், மகமதியரும், நெஸ்டோரியரும் வசிக்கும் பட்டணங்கள் அனேகமிருக்கின்றன. அவைகளிலொன்றான ஸிண்டிஸின் பட்டணத்தில் சைனியங்களுக் குதவக்கூடிய பலவிதமான சிறந்த ஆயுதங்கள் செய்யப்படுகின்றன. இப்பிராந்தியங்களிலுள்ள மலைகளில் பெரிய வெள்ளிச் சுரங்கங்களும் அனேகம் வேட்டை மிருகங்களும் இருக்கின்றன. அம் மலைப் பிராந்தியங்களுக்கு இடியா என்று பெயர்.

கடைசியாகச் சொன்ன நகரத்திற்கு மூன்று நாட்பிரயாணத்திற்கப்பால் ஜெங்கனூர் என்ற பெயருடைய வேறொரு நகரமிருக்கிறது. ஜெங்கனூர் என்றால் வெண்குளம் என்று அர்த்தம். அங்கு ஒரு அரண்மனையுண்டு. அதைச் சுற்றிலுமுள்ள எண்ணிறந்த ஏரிகளிலும் நதிகளிலும் அன்னப் பட்சிகளும், மைதானங்களில் கொக்குகளும், மயில்களும், கௌதாரிகளும், வேறு பறவைகளுமிருப்பதினால் அது சக்கரவர்த்திக்கு மிகப் பிரியமான வாசஸ்தானமாயிருக்கிறது. அங்கு ஐந்து விதமான கொக்குகள் உண்டு. சிலவற்றிற்குக் காக்கையைப்போன்ற கருத்த இறகுகள் இருக்கும். மற்றுஞ் சில வெண்ணிறமுடையனவாய்ப் பளபளவென்றிருக்கும்; அவைகளுக்கு, மயில்களைப்போல் பொன்னிறமான கண்கள் நிறைந்த இறகுகளுண்டு. அவைகளின் கழுத்து கருப்பும் வெளுப்புங் கலந்து வெகு அழகாகவிருக்கும். மூன்றாவதாக நமது நாட்டிலிருப்பவைகளை விடப் பன்மடங்கு பெரிதாயிருக்கும் ஜாதியைச் சொல்லலாம். நான்காவது, சிவப்பும் நீலமுங் கலந்த நிறமுடைய, அழகுள்ள ஒருசிறுராசி. சாம்பல் நிறமான உடலையும் சிவந்துங் கருத்துமுள்ள பெருத்த தலையையுமுடையவையே ஐந்தாவது ஜாதி.

இப்பட்டணத் தருகில் ஒரு பள்ளத்தாக்குண்டு. இப்பட்டணத்தில், அரசன் வருஷத்தில் சிலமாதங்கள் வாசம் செய்வதையுத் தேசித்து, அவனது உபயோகத்திற்காக, இப் பள்ளத்தாக்குகளிலுள்ள வீடுகளில், எண்ணிறந்த கௌதாரிகள் வளர்க்கப்படுகின்றன.

இங்கிருந்து வடகிழக்காக மூன்று நாட் பயணத்தில் ஸியாண்டு பட்டணமிருக்கிறது. அது இப்போது சீனாவை யாண்டுவரும் குப்ளேகான் சக்கரவர்த்தியால் கட்டப்பட்டுளது. அங்கு சலவைக் கல்லாலும், வேறு கற்களாலும் கட்டப்பட்ட அதியத்புதமான அரண்மனை யொன்றுண்டு. அவ்வரண்மனையின் ஒரு கோடி அவ்வூரின் மதிலைத் தொடுகின்றது; மறுகோடி ஊரின் மையத்தைத் தொடுகின்றது. மதிலைத் தொடும்பக்கத்தில், குப்ளேகான், பதினாறு மைல் சுற்றளவுள்ள பிரதேசத்தைச் சுவர்கொண்டு அடைத்து, அரண்மனையையே அக்கோட்டைக்கு வாயிலாகவு மமைத்தார். இவ்வாறு மதிலினால் வளைக்கப்பட்ட இவ்வுத்தியான வனத்தில் விநோதமான மைதானங்களும், ஊற்றுகளும், நதிகளுமுண்டு. ஆங்காங்கு செம்மான்களும் பொன்மான்களும் குதித்து விளையாடும். இங்கு இராஜாளிகளும் வளர்கின்றன. அவைகளில் சுமார் இருநூறு இராஜாளிகள் கூண்டுகளில் அடைபட்டுக் கிடக்கின்றன; அவைகளுக்கு இரையாக இள மான்களை இங்கு வளர்த்து வருகின்றார்கள். இவைகளெல்லாவற்றையும் பார்ப்பதற்காக அரசன் வாரமொருமுறை அங்கு செல்வார்; அப்பொழுது அவர் குதிரையின் மேலிருந்தபடியே ஒன்று அல்லது இரண்டு கழுதைப் புலிகளைக்கொண்டு கலைமான்களையும் புள்ளிமான்களையும் வேட்டையாடி அவற்றிற் சிறந்தவைகளைப் பிடித்து இராஜாளிகளிடம் கொண்டுவந்து விடுவார். இந்த வேட்டையில்தான் அவருக்கு அதிக சந்தோஷம்.



இங்கு அழகான ஒரு காட்டின் மத்தியில் இவ்வரசன் மெருகிட்டு வர்ணந்தீட்டிய கால்கள் நிறுத்தி, அவற்றின்மேல் ஒரு அரண்மனையைக் கட்டியிருக்கிறார். அக்கால்கள் ஒவ்வொன்றின் மீதும் அவற்றை வாலால் வளைத்துக்கொண்டும், தலையால் அரண்மனையின் கூரையைத் தாங்கிக் கொண்டும், இறகுகளை இருபுறமும் விரித்துக் கொண்டுமுள்ள மெருகிடப்பட்ட பிரதிமைகள் உண்டு. இவ்வரண்மனையின் கூரையும், மெருகிட்டு வர்ணந்தீட்டப்பட்ட நாணல்களால் பின்னப்பட்டிருப்பதனால் அதற்கு மழையினால் ஒரு விதமான கெடுதியு முண்டாவதில்லை. இந்நாணல்கள் கணுக்கணுவாக வெட்டப்பட்டு மூன்று பிடி பருமனும் பத்தடி நீளமுமுள்ளவை; ஆதலால் இவ்வரண்மனையைத் துண்டுதுண்டாக எடுத்து ஒரு கூடாரம்போல் மடக்கித் திரும்பவும் விரித்துக் கட்டிவிடலாம். இதைக் கட்டுவதற்கு இருநூறு பட்டுக் கயிறுகள் வேண்டியிருக்கின்றன. இவ்வரண்மனையில் சக்கரவர்த்தி வருஷா வருஷம் ஜூன், ஜூலை, ஆகஸ்டு ஆகியமூன்று மாதங்கள் வசிப்பது வழக்கம். ஆகஸ்டு மாதம் 28-ம் தேதி இவர் மிகுந்த பக்தியுடன் ஒரு பூஜை செய்யப் புறப்படுவார். இவரிடம் வெண்ணிறமான ஆண் குதிரைகளும் பெண் குதிரைகளும் சுமார் பதினாயிரமுண்டு. இக்குதிரைகளின் பாலை, செங்கிஸ்கான் வம்சத்தவரும், அவ்வரசனால் வீரரென்று மெச்சப் பெற்ற 'போரியாட்' வம்சத்தவருந் தவிர வேறொருவரும் பருகப் பெறார். இக்குதிரைகள் மேய்ந்து திரிகையில் கண்ணுறுவோரெல்லாம், வெகு மரியாதையுடன் இவற்றை விட்டு தூரமாக விலகிப் போவார்களே யன்றிப் பக்கத்தில் நெருங்கிச் செல்லவாவது, தடை செய்யவாவது துணியார்கள்.

தமது பிதுர்க்களையும் குலதெய்வங்களையும் தமது சகல சொத்துக்களையும் ஜாக்கிரதையாகக் காப்பாற்றி வரும்பொருட்டு அவர்களின் பிரீதியைக் கோறி, மேற் குறித்த பாலை, ஆகஸ்டு மாதம் இருபதாந்தேதி யன்று கண்டவிடங்களிலெல்லாம் தெளிக்கவேண்டுவது அவசியமென்று அந்நாட்டுச் சோதிடர்களும் மந்திரவாதிகளும் சக்கரவர்த்திக்குச் சொல்லுகிறார்கள்.

இந்நாட்டிலுள்ள விக்கிரகாராதனைக்காரர் இரண்டு வகுப்பினர். அவர்களுக்கு 'செபெத்' என்றும் 'கெஸ்மு' என்றும் பெயர். புயற்காற்றடிக்கும்பொழுது அவர்கள் அரண்மனையின்மீதேறி, அதன்மேல் ஒரு சொட்டு மழைத்தண்ணீரும் விழாமற்பண்ணி, இந்த விந்தை தங்களது மகிமையினாலாயிற்றென்று சாதாரண ஜனங்களுக்குச் சொல்வார்கள். அவர்களும் இப்பேச்சை நம்புவார்கள். அவர்களுக்கு இவ்வாறு கௌரவம் ஏற்படுகின்றதனால், அவர்கள், சரியான ஆடைகளன்றியும் ஒழுங்கில்லாமலும், ஸ்நான முதலியன செய்யாமலும், தலையை வாரி முடியாமலும் திரிவார்கள். அவர்களிடம் இன்னுமொரு கோரமான வழக்கமுண்டு. அதென்னவெனில், அவர்கள் மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களைக் கொன்று அவர்களின் மாமிசத்தைச்

சமைத்து உண்பார்கள் சாதாரணமாக மரணமடைவோரை இவர்கள் தகனம் பண்ணுவதில்லை. அவர்களது ஜாதிக்குப் பட்சி ஜாதியென்று பெயர். இவ்வகுப்பாரைப்போன்றவர்களுக்கு நமது நாட்டில் பைராகி, பிச்சைக்காரன், தவசிப்பிள்ளை என்ற பெயர்கள் வழங்குகின்றன. இவர்களுக்குத் தாங்கள் இஷ்டப்பட்ட காரியங்களைச் செய்யக்கூடிய மாயாசக்தி யிருப்பதாகத் தெரிகிறது. இதற்கு ஒரு உதாரணம் சொல்வோம். அரசன் சபாமண்டபத்தில் போஜனஞ் செய்ய உட்கார்ந்தால் இவர்கள் அவனது கலத்தை, எட்டு கஜம் உயரச் செய்து, அவனது ஆசனத்திற்கு வெகுதூரமும் மண்டபத்தின் மத்தியிலுமுள்ள அலமாரியில் வைக்கப்பட்டிருக்கும் பாத்திரங்களினின்று, சாராயமும் பாலும் தானே ஒருவரது கையும் படாமல் கலத்திலுள்ள கிண்ணங்களில் விழும்படி செய்வார்கள். இவ்வித்தையை இவர்கள் அரசனது ஆணைப்படி, யாரெதிரில் வேண்டுமானாலுஞ் செய்வார்கள்.

தங்களது விக்கிரகங்களுக்கு உத்ஸவங்கள் செய்யவேண்டுமென்று நினைத்தால், இவர்கள் அரசனிடஞ் சென்று, "ஐயா, நமது விக்கிரகங்களுக்கு சமஸ்தமான பலிகளுடன் பூஜைகள் நடக்காவிடில், தானிய தவசங்களுக்கும் கன்று காலிகளுக்கும் கெடுதி சம்பவிக்கும். இதைத் தங்களுக்கு நாங்கள் விசேஷமாகச் சொல்லவேண்டியதில்லை. ஆதலால், தாங்கள் பூஜைக்கு வேண்டிய கறுத்த தலையுடைய ஆட்டு மாமிசமும், வாசனைத் திரவியங்களும், அகிற்கட்டையும் கொடுத்தல்வேண்டும்" என்பார்கள். இவ்வார்த்தைகளை இவர்கள் அரசனுக்கு நேராகச் சொல்லாமல் அவனது காரியஸ்தர்மூலமாகத் தெரிவித்து, வேண்டிய சாமான்களைப் பெறுவார்கள், உத்ஸவதினத்தில், மேற்கண்ட மிருகங்களைப் பலிகொடுத்து, அவற்றின் இறைச்சியினாற் செய்த குழம்பைத் தங்களது விக்கிரகங்களின்முன் தெளிப்பார்கள்.

இங்கு பெரிய மடங்களுண்டு; அவற்றிற் சில பட்டணங்களைப்போல் விசாலமானவை. இம்மடங்களிற் பெரும் பான்மையானவைகளில், ஏறக்குறைய இரண்டாயிரம் முனிவர்கள் உண்டு. இவர்கள், சம்சாரத்தினின்றும் விலகி, விக்கிரகாராதனையே தொழிலாகக் காலங் கழிக்கின்றனர். இவர்கள் தங்களது தலையையும் மீசை தாடிகளையும் சிரைத்துக்கொண்டு காஷாய வஸ்திரத்தையும் தரிப்பார்கள். இதுவே இவர்களுக்கு அடையாளம்.

இவர்கள் தங்களது விக்கிரகங்களை ஆராதிக்கையில், வெகு பயபக்தியுடன் தீபங்காட்டி மனமுருகப் பாடுவார்கள். இவர்களிற் சிலர்க்குக் கலியாணஞ் செய்துகொள்ள அதிகாரமுண்டு. சுத்தத் துறவம் பூண்டு அதி வைராக்கியத்துடன் இருப்பவர்களுஞ் சிலருண்டு. இவர்கள் என்றுங் கலியாணஞ் செய்துகொள்வதில்லை. இவர்களுக்குச் சன்னியாசிகள் (ஸென்ஸிம்) என்றும் பெயர். இவர்கள், ஒரு பருக்கையுமில்லாத வெறுங்கஞ்சியைமாத்திரம் ருசியான வேறு பதார்த்தமின்றிக் குடித்துக் காலங்கழிக்கின்றார்கள். இவர்கள் அக்கினியைத் தொழுபவர்கள். இவர்கள் மற்றைய ஜனங்கள் கொண்டாடும் விக்கிரகங்களைக் கொண்டாடுவதில்லையாதலால், அவர்கள் இவர்களை ஜாதிகெட்டவர்களென்றுசொல்லுகின்றார்கள். இவ்விரு கட்சிக்காரர்களுக்கும் மத விஷயத்தில் அதிகபேதமுண்டு. இவர்களுக்குக் கலியாணமே கிடையாது. இவர்கள் தங்களது தலையையும் மீசை தாடிகளையும் க்ஷவரஞ் செய்துகொண்டு, கருப்போ அல்லது மஞ்சளோ நிறமுள்ள வஸ்திரங்களை யணிந்து தடித்த பாய்களின் மேலுறங்குவார்கள். இவர்களினும் கொடிய விரதம் பூண்டொழுகுபவர் இவ்வுலகில் வேறெவருமில்லை.

(தொடரும்.)

# சிசுக்கள் மகா நாடு.

(நமது சொந்த நிருபர் எழுதுகிறார்)

சிசுக்கள் மகா நாடு கோயம்புத்தூரிலிருக்கும் காரனேஷன் பார்க் மைதானத்தில் மாலை 5 மணிக்குக் கூடிற்று. அந்த சபையிலிருந்த அனைவரும் 5 வயதுக்குட்பட்ட ஸ்திரீ புருஷர்களாக யிருந்தார்கள். சுமார் 50—60 பேர்கள் இருந்தார்கள். முன்னாலேயே ஏற்பாடு செய்திருந்தபடி எல்லாரும் ஒரு பெரிய ஜமக்காளத்தின்மீது வரிசையாகவும் மிகவும் ஒழுங்காகவும்உட்கார்ந்தார்கள். மணி சரியாக 5-15 ஆனதும் அவர்களில் கொஞ்சம் பெரியவரும் மற்ற எல்லோரிலும் அதிக அத்தியட்சகராக விளங்கும் ஒருவர் எழுந்திருந்து பின் வருமாறு பேசலானார்:—

அத்தியட்சகர் :—சகோதர, சகோதரிகளே ! நாம் இன்று எதற்காகக் கூடியிருக்கிறோமென்பது உங்கள் எல்லோருக்கும் தெரியுமல்லவா. ஆகையால் தயவு செய்து தங்கள் தங்கள் குறைகளை விவரமாகச் சொல்வீர்களானால் முதலில் அதை அறிந்து கொண்டு பிறகு அதற்கு வேண்டிய பரிகாரங்களைப் பற்றி ஆலோசித்துத் தீர்மானிக்கலாம்

என்று சொல்லிவிட்டுத் தம் ஸ்தானத்தில் அமைதியாக உட்கார்ந்தார். பிறகு அங்கத்தினர்களில் சுமார் 10 பேர் பின் வருமாறு ஒவ்வொருவராக மிகச் சாந்தத்துடனும் தெளிவாகவும் பேசினார்கள்.

முதல்வர்:--நாம்எல்லோரும் இப்பிரபஞ்சத்தில் நமக்கு வேண்டிய சௌகரியங்களைப் பற்றி கவனித்துச் செய்துகொள்வதற்கு சக்தியற்றவர்களாக யிருக்கிறோம். ஆகையால் நமது பெற்றோர்களால் நாமடையும் சௌகரியங்களென்று கருதப்படும் அசௌகரியங்களைப்பற்றிச் சிறிது ஆராய்வோம். முதலில் நமக்கு வேண்டிய ஆகாராதிகளைப்பற்றிக் கவனிப்போம் நம்மில் அநேகருக்கு, அதாவது 1-வயதுக் குட்பட்டவர்களுக்கு, சரியான முறையில் ஆகாரங்கள் கொடுக்கப்பட்டு வரவில்லை. நமது தாய்மாரில் அநேகருக்கு நமக்குக் கொடுத்துப் போஷிக்கத் தக்கவாறு தாய்ப்பால் மிகுதியாக இருப்பதில்லை. இதற்காக வெளிநாடுகளிலிருந்து வரும் ஆகாரங்களைக் கொடுக்கிறார்கள். ஆனால் நம் வயிற்றுக்கு வேண்டிய அளவைச் சரிவர கவனியாமல் தங்களுக்குத் தோன்றியவாறு கொடுக்கிறார்கள். இதனால் நமக்கு அநேகவித வியாதிகள் வருகின்றன.

இரண்டாமவர் :—இந்த வியாதிகளில் முக்கியமானது கட்டி. இந்தக்கட்டி வாராத குழந்தைகள் மிகவும் அபூர்வம். இதை சௌக்கியப்படுத்த கும்பகோணத்திலிருக்கும் பிரபல வைத்தியரிடம் மருந்து வரவழைத்துக் கொடுக்காத பெற்றோர்கள் மிகச் சிலரே. இந்த வைத்தியத்தால் பிழைத்த குழந்தைகளின் தொகையும் மிகச் சொற்பமே! இது என்ன காரணத்தால் உண்டாகிறது என்பதைக் கவனிப்போரும் இந்தியாவில் இருக்கிறார்களோ என்னவோ, சந்தேகந்தான். தற்போது நானே அவ்வியாதியால் அதிகம் பேச முடியவில்லை.

மூன்றாமவர்:—மேற்சொன்ன நோய்க்குமுக்கிய காரணங்கள் பின் வருவன:—நாம் வயிற்று வலியால் அழும்போதும் மற்ற வேறு ஏதாவது அசௌகரியங்களால் அழும்போதும் நமக்கு மறுபடியும் மேல் மேல் ஆகாரத்தையே கொடுத்து வருகிறார்கள். அதற்கும்

நாம் சமாதானம் அடையாவிட்டால் பிஸ்கெட், பெப்பர்மெண்டு, சாக்லெட் முதலிய தின்பண்டங்களைக் கொடுக்கிறார்கள். இது மாத்திரமல்லாமல் நன்றாகமென்று தின்னத் தெரியும் முன்னமே முறுக்கு, சீடை முதலிய நாட்டுத் தின்பண்டங்களையும் விசேஷமாகக் கொடுக்கிறார்கள். இதனால் அஜீரணம், மந்தம் முதலியன உண்டாகி நாளடைவிற் கட்டியாகிறது. அதை உடனே கவனியாமல் மேன் மேலும் தண்ணீர் கலக்காத அசுத்தமான பால், பசுப் பால் கலந்த காப்பியென்று விற்கப்படும் காப்பி முதலியவைகளைக் கொடுத்து நோய் அதிகரிக்குமாறு செய்து விடுகிறார்கள். நாகரிகமென்று நினைத்துக் கொண்டிருக்கும் சிலர் குழந்தைகள் அழும்போது எவ்வாறு சமாதானம் செய்யவேண்டுமென்பதைக் கவனியாமல் 'கம்பர்டர்' என்னும் ஒரு மேனாட்டுக் கருவியை நம் வாயில் அடைத்து விடுகிறார்கள். பொய் மெய் என்னும் வித்தியாசத்தைக் அறியச் சக்தியற்றவர்களாகயிருக்கும் நாம் அவர்கள் கொடுப்பதை எல்லாம் தேவாமிர்தம் என்று எண்ணிப் பின்பு அதனால் உண்டாகும் கஷ்டங்களுக்கும் ஆளாகிறோம். நிப்பிள்களையும் கம்பர்டரையும் அடிக்கடி மெல்லுவதால் பல்கள் சொத்தையாகவும் பலஹீனமாகவும் முளைக்கின்றன என்று தற்போதைய வைத்திய நிபுணர்கள் கண்டுபிடித்திருக்கும் விஷயம் இன்னும் நம் தாய்மாரில் அநேகருக்குத் தெரியாது.

நான்காமவர்:—நம் தாய்மாரில் அநேகர் இன்னும் சிறு குழந்தைகளாகயிருப்பதால் தான் அவர்களுக்கு ஒன்றும் தெரிவதில்லை. "இந்தச் சனியன் தோன்றி நம் சௌக்கியத்தைக்கெடுக்கிறது" என்று நம்பெற்றோர்களிற் பலர் சொல்லுவதைப் பிரதிதினமும் நாம் கேட்கிறோம். ஆனால் தெய்வ சங்கல்பமாக நேர்ந்ததை மனிதராகிய நம்மால் என்ன செய்யக்கூடும். நமக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்வதற்குச்சக்தியற்றவர்களாகயிருப்பதாலோ அல்லது தெரியாத்தனத்தாலோ, கவனியாமல் இரவு முழுவதும் நாம் அழும்போதெல்லாம் தாமும் விழித்துக் கொண்டு சிரமப்படுகிறார்கள். இதற்காக நம்மை வைதோ அல்லது அடித்தோ தாமும் கஷ்டப்பட்டு நம்மையும் கஷ்டப்படுத்துகிறார்கள். தனவந்தர்களான தாய்மார்கள் தாம் பெற்ற குழந்தைகளுக்காகத் தாம் சிரமப்படாமல் வேலைக்காரிகளிடம் ஒப்பிவித்து விடுகிறார்கள். இப்பிரபஞ்சத்தில் தாயை விட நமக்குச் சிறந்த வஸ்து வேறொன்றுமில்லை. அதை அறியாமல் தங்கள் சௌகரியத்திற்காக நம்மைப் பிறரிடம் ஒப்பிவித்து விடுகிறார்கள். அந்த வேலையாட்களிடம் அகப்பட்டுக் கொண்டபோது நாம் படும்பாடு தெய்வத்திற்குத் தான் தெரியும். "அடி அப்பம், குத்துக் கொழுக்கட்டை" என்று நினைத்துக் கொண்டால் தான் பொழுதைப் போக்கலாம். இதற்கும் மிஞ்சித் தொந்திரவு செய்தால் கண்ட தின்பண்டங்களைக் கொடுத்து முன் சொன்ன மாதிரி கட்டி வந்து நம்மைத் தொந்திரவு செய்யும்படிச் செய்கிறார்கள். ஆகா! இந்தக் கட்டியால் வருந்துபவரின் கஷ்டத்தை எதற்கும் ஒப்பிடத்தரமன்று.

ஐந்தாமவர்:—ஐரோப்பிய ஸ்திரீகளைப்போல் தாமும் நடந்து கொள்ளவேண்டும் என்னும் எண்ணத்தால் இவ்வாறு செய்கிறார்கள். ஆனால் நம்மவரில் ஐரோப்பியர்களைப்போல் ஆயா, கவர்னெஸ் முதலிய வேலைகளுக்கு சிட்சை பெற்றுப் பெரிய வைத்திய சாலைக்கு வருபவர்கள் கிடையாது. இவ்வாறு ஒன்று மறியாதவர்களுக்குச் சுத்தமாக ஆகாரங்கள் தயார் செய்து கொடுக்கவும், துணிமணிகளைச் சுத்தமாக வைக்கவும், குழந்தைகளுக்கு நோய் நொடிகள் வாராமல் கவனிப்பதற்கும், காலதேச வர்த்தமானத்திற் கேற்றவாறு உணவு, உடை முதலியவைகளை மாற்றி உபயோகப்படுத்துவதற்கும் எவ்வாறு தெரியும்? எஜமானிகள் சொல்வதையே முழுவதும் கேட்காமல் தங்கள் சௌகரியம்போல் வெந்ததும் வேகாததுமான ஆகாரங்களைக் கொடுக்கிறார்கள். இதற்கிடையில் பலவித நோய்களுக்கு ஆளாய்க் கடவுள் திருவடியைச் சேரும் நம்மவரின் தொகை நாளதுவரை அதிகமாகவே யிருந்து வருகிறது.



ஆறாமவர்:—நானொரு ஸ்திரீயானதால் ஆண் பிள்ளைகளைப் போலவே நாங்களும் எல்லா விதத்திலிருந்த போதிலும் ஒரு விஷயத்தில் எங்களுக்கு அதிக சிரமமிருப்பதைச் சொல்லுகிறேன், கேளுங்கள். நாங்கள் பெரியவர்களானபோது விசேஷமாக ஆபரணங்கள் அணிந்துகொள்ள வேண்டியிருப்பதால் நாங்கள் சிறுவர்களாகயிருக்கும்போதே காது, மூக்குகளில் துவாரங்கள் செய்துவிடுகிறார்கள். ஆபரணங்களையும் பூட்டிவிடுகிறார்கள். கடவுள் இச்சரீரத்தில் உண்டாக்கி இருக்கும் ஒன்பது துவாரங்கள் போதாதா! நம்மவரின் செய்கைகளே மிகவும் விசித்திரமானது. மூக்கில் போட்டிருக்கும் ஆபரணங்களால் மூக்கைச் சுத்தம் செய்யும்போதெல்லாம் நாங்கள் படும்பாடு நாயும் படாது. காதுகளில் போட்டிருக்கும் "டோலக்" என்னும் புதுமாதிரியான ஆபரணம் நாங்கள் விளையாடும்போது எங்கேயாவது மாட்டிக்கொண்டால் சில சமயங்களில் காதை மூளியாகும்படி செய்து விடுகிறது. இன்னும் கைகால்களில் விசேஷமாக ஆபரணங்களைப்போட்டு எளிதில் வேலையாட்கள் முதலியவர்கள் திருடிக் கொள்வதற்கான சௌகரியங்களை ஏற்படுத்துகிறார்கள். அம்மட்டோ! இன்னும் சில சமயங்களில் இதனால் நம்மவரின் உயிருக்கே அபாயம் நேர்ந்துவிடுகிறது. இதைப்பற்றி அநேகமுறை பேப்பர்களில் படித்தும் பலர் கண்ணாரக் கண்டதைச் சொல்லியும் நம் தாய்மாருக்குப் புத்தி வாராதது மிகவும் விசனிக்கத் தக்கதாயிருக்கிறது.

ஏழாமவர்:—ஒரு வயதுக்குட்பட்ட ஆண் பெண் இருபாலருக்கும் கால், கை, இடுப்பு, கழுத்து முதலிய அவயவங்களில் விசேஷமாக ஆபரணங்கள் போட்டு நமமிஷ்டப்படி விளையாட முடியாதபடி கட்டிப்போட்டு, படுத்துப் புரளும்போதெல்லாம் உடம்பில் உறுத்தும்படி செய்கிறார்கள். இந்திய ஸ்திரீகளுக்குப் படிப்பில்லாததால் அறிவில்லையென்று சொல்லும் ஆண்பிள்ளைகளிலும், தம் வீட்டிலிருக்கும் ஸ்திரீகளுக்கு இவ்விஷயங்களைப்பற்றிச் சொல்லுவோர் மிகச் சிலரே.

எட்டாமவர்:— நம்மிற் பலர் ஐசுவர்யவந்தர்கள் வீட்டிற் பிறந்தும் சௌகரியமாகவும் சந்தோஷமாகவும் பொழுதைப் போக்க முடியாமற் கஷ்டப்படுகிறார்கள். கீழே தன்னிஷ்டப்படி சுயேச்சையாகவிளையாடுவதால் கைகால்கள் தேய்ந்துபோய் விடுமென்று நினைத்து ஒருவர் மாற்றி ஒருவர் தூக்கிச் சுமந்து கொண்டேயிருக்கிறார்கள். இதனால் தம்மிஷ்டப்படி சுயேச்சையாக விளையாடுவதற்குக்கூடத்தெரியாமல், மந்தசுபாவமுள்ளவர்களாக ஆவதுமல்லாமல், யாராவது சிறிது நேரம் கீழே விட்டாலும் ஒன்றும் செய்யத் தெரியாமல் அழுகிறோம். புஷ்பமும் குழந்தையும் ஒன்று என்பதை மறந்துவிடுகிறார்கள். அடிக்கடி தொடுவதால் புஷ்பம் எவ்வாறு கசங்கி வாடிப்போகிறதோ அவ்வாறே குழந்தைகளும் அடிக்கடி பிறர் எடுப்

பதால் இயற்கையாக உள்ள வளர்ச்சி குறைந்து சுறு சுறுப்பில்லாமல் வாடிய புஷ்பம்போலாகிறார்கள்.

ஒன்பதாமவர் :— மேற்சொல்லியவாறெல்லாம் நாம் பேசுவதால் நம் பெற்றோர்களை நிந்திப்பதாக நினைக்கக்கூடாது. பெற்றோர்களிடம் சண்டை போட்ட பிள்ளைகள் எக்காலத்திலும் நல்ல ஸ்திதியை அடையமாட்டார்கள். ஆனால் நம்முடைய அசௌகரியங்களைத் தெரியப்படுத்துவதால், பிறகு நாம் அதிக நன்மையை அடைய வழிஉண்டாகுமென்று உத்தேசித்துத்தான் இச்சபை கூடிற்று. கடைசியாக நான் சொல்லவேண்டியதென்னவென்றால் நம் பெற்றோர்களிற் சிலர் தாங்கள் மாத்திரம் விதவிதமான ஆடை ஆபரணாதிகளால் அலங்கரித்துக்கொண்டு, நம்மையும் சுத்தமாக வைக்கவேண்டுமென்பதை மறந்துவிடுகிறார்கள். இதனால் நம்மவரில் பலர் கண், மூக்குகளில் ஆபாசங்களை வைத்துக்கொண்டும், சரிவாரத் தலைமயிரை வாராததால் பேன், அழுக்கு முதலியவைகளைப் புழுத்துக்கொண்டும் இருக்கிறார்கள். பிரதி தினமும் சுத்தமாக ஸ்நானம்பண்ணி வைக்காததால் சொறி, சிரங்கு முதலிய தொத்து வியாதிகளுக்கு இடமாகிறது.

பத்தாமவர்:— நான் ஒரு ஸ்திரீயானதால் எங்களைச் சேர்ந்தவர் படும் பாட்டை இன்னும் கொஞ்சம் தெரிவிக்கிறேன். துணிமணிகள் போடும் விஷயத்தில் எங்களை நாகரிகமாக அலங்கரிப்பதாக நினைத்துக்கொண்டு காலதேசவர்த்தமானத்தைக் கவனியாமல் குளிர்காலத்தில் மெல்லிய துணிகளையும் வெயிற்காலத்தில் தலைக்குக் கம்பளிக் குல்லாக்களையும் கால்களுக்கு மேஜோடுகளையும் போட்டு அலங்கரிக்கிறார்கள். பட்டுத் துணிகளையே விசேஷமாக உபயோகப்படுத்துவதால் உஷ்ணம் அதிகமாவதால் சரீரத்தில் ஒருவித எரிச்சல் உண்டாகிறது. இதனால் சில சமயங்களில் அதிகக் குளிராலும், மற்றுஞ்சில சமயங்களில் வியர்வையாலும் கஷ்டப்படும்படி செய்கிறார்கள். ஏழைகள் பாடு மிகவும் சிலாக்கியமானதாக விருக்கிறது. சில வேளைகளில் உடம்பை மூடியும் சில சமயங்களிற் திறந்தும் வைப்பதால் ஜலதோஷம் முதலிய சில்லரை நோய்களுக்கு இடமுண்டாகிறது. ஏழைகளாக எப்போதும் விசேஷமாகத் துணிமணிகள் உபயோகப்படுத்தாமலிருப்பது மிகவும் சிலாக்கியமானது. நம்மிற் பலருக்குப் பேசத் தெரியாததாலும், மற்றுஞ் சிலருக்குப் பேசத் தெரிந்தபோதிலும் ஒழுங்காகச் சொல்லத் தெரியாததாலும் சரீரத்தில்உண்டாகும்பாதைகளைத் தீர்த்துக் கொள்வதற்காக எல்லாவற்றிற்கும் ஒரே மந்திரமாகிய அழுகையை ஆரம்பிக்கவேண்டியிருக்கிறது. (எல்லோரும் பலத்த கரகோஷம் செய்து சிரித்தார்கள்.) நாம் இதுவரை நம் தாய்மாரைப்பற்றி மாத்திரமே சொன்னோம். ஏனென்றால், நாம் இப்பிரபஞ்சத்தில் ஜனித்ததுமுதல் தாயாரிடமே அதிகமாகப் பொழுதைப் போக்குகிறோம். கொஞ்சம் பெரியவர்களான பிறகுதான் தகப்பனார் சகவாசம் கிடைக்கிறது. இதனால் நம்மை முக்கியமாகக் கவனிக்கவேண்டியது நமது தாய்மார்கள்தான். இதற்காகத்தான் "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்று பெரியோர்கள் தாயைத்தான் முதலிற் சொல்லி யிருக்கிறார்கள். நாம் அதிகமாகத் தாயாரின் உதவியை எதிர்பார்ப்பதால், தாயாருக்கு முதலில் நாம் வணங்க வேண்டியது எவ்வாறு அவசியமோ அவ்வாறே அவரிடம்தான் நம் குறைகளைச் சொல்லச் சௌகரியப்படும். அவர்கள் செய்யும் பிழைகள்தான் நமக்கு முதலிற் தென்படுகிறது.



அத்தியட்சகர் :— இன்று நீங்கள் ஒவ்வொருவரும் வெகு முக்கியமான விஷயத்தையே சொன்னீர்கள். நாம் இப்பொழுது பேசி முடித்த விஷயத்தை நமது தாயைப்போலவும் தேவலோக வஸ்துவாகவும் இருக்கும் "சிந்தாமணி" யில் பிரசுரிக்கும்படி செய்கிறேன். பொது ஜனங்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்துகொண்டு பிறகு நாம் செய்யவேண்டியதைத் தீர்மானம் செய்யலாம். இன்று மணி 6-45 க்கு மேல் ஆய்விட்டதால் இத்துடன் சபையைக் கலையும்படி வேண்டிக் கொள்ளுகிறேன்.

என்று சொன்னதும் எல்லோரும் எழுந்திருந்து அத்தியட்சகருக்கு வந்தனம் செய்துவிட்டுத் தம் தம் வீடுகளுக்குச் சென்றார்கள். இவர்கள் எல்லோரும் போன பிறகு சிறிது தூரத்தில் நின்றுகொண்டிருந்த என்னை அத்தியட்சகர் கூப்பிட்டு "நண்பரே! தயவு செய்து தாங்கள் இதுவரைகேட்டுக்கொண்டிருந்த விஷயங்களை அவ்வாறே "சிந்தாமணி"ப் பத்திரிகைக்கு எழுதி அனுப்பவேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன். எங்களில் ஒருவருக்கும் நன்றாக எழுதத் தெரியாததால் தங்களை வேண்டிக்கொள்ளுகிறேன். எங்கள்மீது கிருபை வைத்து இதைச் செய்வீர்களென்று நம்புகிறேன்" என்று சொல்லிவிட்டு விடைபெற்றுக்கொண்டு போனார். அவ்வாறே நானும் இதை எழுதி அனுப்பி யிருக்கிறேன்.

## சிந்தாமணி யபிமானிகளுக்கு.

உள்நாட்டுச் சந்தாதாரில் சிலர் இதுவரை முதல் வருஷ சந்தாவையும் அனுப்பாம
லும் இது விஷயமாகப் பல கடிதங்கள் கிடைத்தும் சற்றும் கவனியாது இருப்பதாலும் இண்டி
மேஷன் பெற்றும் வி. பி. யைத் திருப்பி விடுவதாலும் ஏற்படும் நஷ்டமும் பத்திரிகையின்
நிர்வாகத்தில் சிரமமும் ஏற்படுகின்றது. அயல் நாட்டிலுள்ள சந்தாதார்களுக்குக் கடித
மெழுதுவதற்கு அதிகச் செலவும் வி. பி. யனுப்புவதற்கு சிறிதும் சாத்தியமில்லாமையுமாக
இருப்பதால் இதுவரை யனுப்பாத அயல்நாட்டு சந்தாதாரர்கள் தாமதப்படுத்தாது தங்கள் சந்
தாவை யனுப்பிவிடுவார்களென்று நம்பி யிருக்கிறேன். ஆகையால் உள்நாடு வெளிநாடு சந்தா
தார் அனைவரும் தயவுசெய்து இனியும் சிறிதும் தாமதப்படுத்தாது தம் சந்தாவை மணியார்டர்
செய்யவேண்டுமாயும் இதுவரை முதல் வருஷ சந்தாவையுமனுப்பாமலிருப்பவர்கள் அத்துடன்
இரண்டாவது வருஷ சந்தாவையும் சேர்த்து அனுப்பினால் மெத்த சமயோபகாரமாயிருக்கு
மென்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். சந்தா பாக்கியைப்பற்றிக் கடிதமூலமும் பத்திரிகையில்
அறிக்கைகள் மூலமும் பிரஸ்தாபிக்கவேண்டிய சிரமத்தை 'சிந்தாமணி' யபிமானிகள் இனிமே
லாயினும் எனக்கு ஏற்படுத்தாமலிருக்கவேண்டுமாயும் கேட்டுக்கொள்ளுகிறேன். சந்தா
பாக்கி, பலகடிதங்கள் எழுதுதல், அனுப்பும் வி. பி. திரும்பி வருவது இவைகளினால் எனக்
கேற்படக்கூடிய வீண் சிரமத்தையும் பெருத்த நஷ்டத்தையும் இனிமேலும் எனக்கு ஏற்படுத்
தாமல் மறு தபாலில் சந்தாவை மணியார்டர் செய்து சிந்தாமணி செவ்வனே நடைபெறுவ
தற்கு உதவி புரிவார்களென நம்புகின்றேன்.

இங்ஙனம்,

சகோதரி வி. பாலம்மாள்.

# சம்சார சன்னியாசியின் விசாரம்.

By Zero.

(291-ம் பக்கத்தொடர்ச்சி.)

## புக்கக வாசம்.

விவாக தடபுடல்கள் முடிந்தன. பஞ்ச பக்குவான்னத்துடன் ஐந்து நாட்களிலும் சாப்பாடு நடந்தது. சீராய்ப் பெறப்பட்ட பாத்திரங்கள், கூடை கூடையாய்ப் பட்சணங்கள், மற்றும் சாமான்களுடனும் மாப்பிள்ளை தன் வீடு போய்ச் சேர்ந்தான். பெண்ணின் தந்தையினது பாரம் நீங்கியது. ஆனாற் கொஞ்ச மிளைப்பாறுவதற்குக் கூட இவருக்குச் சமயங் கிடைப்பது கஷ்டமாயிருக்கிறது. ஆடி, ஆறு மாதம், தீபாவளி, இரண்டு குளி, சாந்தி முகூர்த்தம் இவைகள் ஒன்றன்பின்னொன்றாக வந்து இவரைக் கஷ்டத்திற்குள்ளாக்குகின்றன

மாமியார்வீட்டிற்குச் செல்லப்பெண்களுக்கு ஏன் இஷ்டமிருப்பதில்லை? இஷ்டமுண்டு! ஆனால் எப்பொழுது? மாமியாரது வீட்டார் பெற்றோரைப் போல் பிரேமையுடனிருந்தால். பிரேமையிருக்கும் பக்ஷத்தில், மாமியாரையும் நாத்தனாரையும்பற்றி எண்ணிறந்த கதைகள் உலகிலுண்டாகக் காரணமில்லை. பாவம்! பெண்ணுக்கோ ப்ரொசிஜர் கோடைப்பற்றி (Procedure Code) யாதொன்றுந் தெரியாதலால், யார் யாருக்கு என்னென்ன அதிகாரமென்று இவளெப்படி யறிவாள்? ஆனால் அனுபவத்திலேயே இவைகளை நன்றாயறிந்துகொள்ளவேண்டியிருக்கிறது. இந்தக் கோடுப்படி மாமியாருக்கு செஷன்ஸ் ஜட்ஜின் அதிகாரமும், நாத்தனாருக்கு முதல் கிளாஸ் (First Class) மாஜிஸ்டிரேட்டின் அதிகாரமும் உண்டு. நாத்தனார்களிலொருத்தி பெற்றோரே கதியெனப் பர்மனெண்டாய் வீடு வந்து சேர்ந்து விட்டாலோ சொல்லவேண்டியதில்லை. இவ்விருவர்களது பவர்களை யெல்லாம் இவளுக்கும் கொடுக்கவேண்டியிருக்கிறது. பிறகு மூன்று அதிகாரிகள்! தங்கள் பவர்களுக்கேற்ற வண்ணம் செகண்ட் கிளாஸ், தேர்ட் கிளாஸ் ஆகிவிடுகிறார்கள். (மாமி நாத்திகளை சந்தியிலிழுக்கும் மருமக்களும் உண்டென்பதை மறுக்க முடியாது.) விவாகமானபின் பெண் முதல் தடவை மாமியார் வீடு செல்லுஞ் சமயம், பெற்றோர்களின் நேத்திரங்கள் நீரால் நிறைகின்றன. இன்றுவரை எவ்வளவோ சிரமப்பட்டு வளர்த்துவந்த 'குழந்தை' இன்று அன்னியர் வீட்டிற்குப் போகவேண்டியிருக்கிறது! பேசுவதற்கும் இனி வாயில்லை, அதிகாரமில்லை, முதல்தடவை செல்லும்பொழுது, யாராவது அழைத்துச் சென்று அங்கே விட்டுவர வேண்டியிருக்கிறது. பெண்ணுக்கு மாமியார் வீடு தன் வீடாகயிருந்தபோதிலும் முதலிற் பயந்தே இருக்கவேண்டும். மாமியார் கோபித்துக்கொள்வாள், நாத்தனார் அதிகப் பிரசங்கமாய்ப் பேசுவாள், மாமனார் நேத்திரங்களை அகற்றி நோக்குவார், மைத்துனர் சிரிப்பார் என்ற இந்த விசாரத்தால் பயப்படவேண்டியிருக்கிறது. முதலில் மருமக்களை 'அம்மா! தாயே' என்று மாமிமார் ஆதரவுடன் கவனிக்கிறார்கள். ஆனாற் கொஞ்சங் கொஞ்சமாய் தங்கள் அதிகாரத்தை அமுலுக்குக் கொண்டு வர ஆரம்பிக்கின்றனர். கிரிமினல் ப்ரொஸிஜர் கோடுப்படி ஒரு குற்றவாளியின்மேல் அநேகக் குற்றங்களிருந்தபோதிலும் ஒரு சமயத்தில் ஒரு குற்றத்தைப்பற்றியே விசாரணை செய்ய முடியும். ஆனால் இந்த ப்ரோசிஜர் கோடுப்படியோ என்னவேண்டுமானாலுஞ் செய்யலாம். ஆபீஸ்களில் ஹெட் கிளார்க்கு எவ்விதந் தன் கைக்கீழிருக்கும் குமாஸ்தாவிடம் தன் பவர்களைச் செலுத்தி, அவனைத் தொந்தரவு செய்து வேலை வாங்குகிறானோ, அவ்வண்ணமே மாமியாருஞ் செய்கின்றாள். மருமகள் மெதுவாகப் பேசினால், "இன்றென்ன சாப்பிடவில்லையோ!" என்பாள். கொஞ்சம் உரக்கப் பேசினால், 'அடியம்மா. ரொம்பவும் தைரியம் வந்துவிட்டதுபோலிருக்கிறதே!' என்பாள், எதிரில் உட்கார்ந்தால் 'என்ன தடித்தனமிது? மானம் மரியாதை ஏதாயினுமிருந்தாலல்லவோ? இந்தக் காலத்துப் பெண்கள் பெரியவர்களுக்கு மரியாதை எங்கே வைத்திருக்கிறார்கள்?' என்பாள், பயத்துடன் நடந்து வந்தாலோ, 'என்ன இவ்வளவு பயம்? நாங்கள் என்ன தின்றுவிடுகிறோமா?' என்று சொல்லிக் காட்டுவாள். இவ்விதமாய் இருபக்கத்திலும் மிருதங்கத்தைப் போல் அடிபடவேண்டியிருக்கிறது. இவள் தானென்ன செய்வாள்? இருதலைக் கொள்ளி எறும்புபோல் கஷ்டத்திற்குள்ளாகின்றனள் என்பது வாஸ்தவமே. மாமியார், நாத்தனார் வைரக் கம்மல்களுடனிருந்து, மருமகள் வைரக் கம்மலுடனிராவிடில், நடக்கும் சங்கதி வேறு. அதைப்பற்றிச் சொல்லுவது அசாத்தியமே.

பணக்காரப் புக்ககத்தில் அவர்கள் மனதிற்கேற்றவாறே, பெண்ணுமிருக்கவேண்டியிருக்கிறது. மாமனார், மாமியார், நாத்தனார், ஓர்ப்படிகள், மைத்துனர் முதலான ஒவ்வொருவரையும் சந்தோஷப்படுத்தி, அவர்கள் மனதிற்குத் தகுந்தவண்ணமிருக்கவேண்டும். இவைகளைச் செய்யவேண்டுமாயின் கல்வி யிருக்கவேண்டியதவசியம். தாயும் தன் பெண்ணுக்கு நல்வழியிற் போதிப்பதவசியம்.

மருமகள் ஏதாயினும் பிசகைச் செய்துவிடில், முதலிற் பெண்ணின் பெற்றோரே தூஷணைக்குள்ளாகின்றார்கள். ஆனால் புருஷன் வீட்டைச் சேர்ந்தோர் செய்துவரும் அக்கிரமத்தைப்பற்றி மருமகள் ஏதாவது வெளியிற் சொல்லிவிடில், 'பதிலுக்குப் பதில் பேசுவதைப் பார்!' என்று சொல்லிக்கொண்டே, அவளைத் தருக்கமட்டும் தூஷிக்கிறார்கள். நியாயாதிபதி மாமியாரும், பிராது செய்பவள் நாத்தனாருமாயிருக்கும்பொழுது, பிறகு கேட்பானேன்! அபராதியெனத் தீர்ப்பாகி, உபவாசமிருக்கும்படி தண்டனை விதிக்கப்படுகிறது. இவ்வளவுதான். மாமியாரின் தண்டனை ஒவ்வொன்றாக வெளிவரும். உபவாசம், உப்பின்றி உணவு, ஒரு வேளைச் சாப்பாடு, கன்னத்திலிடிப்பு, அறைக்குள் விடுத்துப் பூட்டி வைப்பது முதலிய சிட்சைகள் ஒவ்வொன்றாகத் தொடர்ந்துவரும். நன்றாய் மலர்ந்து வந்த புஷ்பம் உடனே வாடி வதங்குகிறது. மனோ வேதனையால் மருமகள் மெலிவடைகின்றாள். இவ்வளவு கஷ்டங்களுக்குமுள்ளாகுஞ் சிலர் இவ்வுலகையே விடுத்துஞ் செல்லுகின்றார்கள். இந்த நாத்தனாரோ தான் மாமியார் வீட்டில் கஷ்டப்படுவதை மறந்து தனது அதிகாரத்தைத் தன் வீட்டிற் செலுத்துகிறாள்.

மாமியாருக்கு வயதானபின், மருமகள் வீட்டிற் கதிகாரியானால், தானிதுவரை சகித்து வந்த அநுபவத்தைக் கொஞ்சங் கொஞ்சமாய் மாமியாரிடங் காட்டுகிறாள். அப்பொழுதே கிழட்டு மாமியாருக்குத் தான் செய்த தெல்லாம் பிசகெனத் தெரியவருகிறது. வேதாந்தமெல்லாம் அப்பொழுதே வெளிவரும்! பிரிய சகோதரிகாள்! நீங்களெல்லோரும் 'எப்பொழுதாவது மருமகளாகவும் பிறகு மாமியாராகவும் இருந்து தீரவேண்டியிருக்கிறது. கொட்டு மேளத்துடன் தடபுடலாய் உங்கள் வீட்டிற்

கழைத்துச் சென்ற லக்ஷ்மிபோன்ற மருமகளிடம் பிரீதி வைத்து, பிறகு அவளது பிரீதியையுஞ் சம்பாதியுங்கள்! மாமியார் என்னும் பதத்தில் இந்நாள்வரை கிடைத்துள்ள மகிமையை மறக்கும்படிச் செய்யக்கூடாதா? உங்கள் மகளைப்போல் மருமகளையும் பாதுகாப்பது நியாயமல்லவா?

இன்னமொரு அதிகாரத்தைப்பற்றிச் சொல்ல வேண்டியது பாக்கியிருக்கிறது. மாமியார் இறந்தபின் வீட்டு அதிகாரமெல்லாம் பெரிய மருமகளது ஆதீனத்திற்கு வந்துவிடுகிறது. இவளோ தானடைந்த கஷ்டத்தை அடியோடு மறந்து, தன்னதிகாரத்தைத் தன் சிறிய ஓர்ப்படிகளிடம் காட்ட ஆரம்பிக்கிறாள். இவர்களுக்கு அதிகாரம் ஒரேமாதிரியாக இருந்தபோதிலும், வெவ்வேறு வீடுகளிலிருந்து வந்துள்ளபடியால், இவர்களுக்குள் பெரிய யுத்தந் தொடங்குகிறது. சகோதரர்கள் ஒருவரையொருவர் பகைப்பதற்கு இவர்களே விதை விதைக்கிறார்கள். பத்தினிக்கடங்கிய பதிகள், அவரவர்கள் பத்தினியின் கட்சியிற் சேராமலிருக்க முடியாது. கல்வி வாசனையே யில்லாத ஸ்திரீகளது நேத்திரங்களுக்குச் சுயநலமொன்றைத் தவிர வேறொன்றுந்தென்படுவதில்லை. தங்கள் வயிற்றை நிரப்பிக்கொள்ளவே வழி தேடுகின்றார்கள். பிறர் சுகமாயிருப்பதையுங் காணச் சகியார். இந்தபுத்தியே இவர்களது பெண்களின் மனதிற் பதிவதுமன்றி, மற்றும் வம்ச பரம்பரையாகச் செல்லுகின்றது. பிரிய சகோதரிகளே! கல்வியால் உங்கள் மனதைச் செம்மைப்படுத்துங்கள்! மத்ஸராக்கினியின் பாசத்திற்குட்பட்டு, உங்களையும், உங்களுக்குப் பிறக்கும் பெண்களையும், மற்று மெல்லோரையும் நாசமாக்கவேண்டாம். கெட்ட குணங்களை அடியோடு ஒழித்து, நல்வழியில் உங்களது பெண்களுக்குப் போதியுங்கள்! அவர்கள் சுகமாயிருக்கவேண்டுமாயின், நீங்களே அவர்களுக்கு நற்குணங்களைக் கற்பித்து வரவேண்டும். இதுவே உமது கடமை!

(தொடரும்.)

# பார்வத குமாரி.

## இரண்டாம் பாகம்.

ஸ்ரீமான் மகேசகுமார சர்மா.

(274-ம் பக்கத் தொடர்ச்சி.)

### ஏழாம் அத்தியாயம்.

### பாட்டியம்மையின் பிரசங்கம்.

பூபேந்திர நாதன் பாட்டியம்மையின் சமீபம் சென்று வணங்கி ஒரு புறமாய் உட்கார்ந்தான். இராஜ குமாரனுடைய முகம் இறக்கமாயிருந்ததைக் கண்டு பாட்டியம்மை கவலையுடன் கேட்டாள்.

"கொழந்தே, நீயேன் இன்னிக்கி ஒரு மாதிரியாக இருக்கே? இப்போதெல்லாம் நீ எங்கே இருக்கே, எங்கே போறே, என்ன சாப்படறே—ஒன்னுமே தெரியறதில்லே. அந்தப்புரத்துக்குள்ளேயோ நீ பெருசா வறதேயில்லே இப்போ ஒன்னெப் பாத்து எத்தனையோ நாள் ஆச்சே."

பூபேந்திர நாதன்—"பாட்டி, எனக்குச் சாப்பாடு முதலானதுகளில் ஒருகஷ்டமும் இல்லை. இதற்காக நீ விசாரப்படவேண்டாம். உன்னிடத்தில் ஒரு சங்கதியைப் பற்றிக் கலந்து



பேச வேண்டுமென்று கொஞ்ச நாளாக எண்ணித்தானிருந்தேன். ஆனால் எண்ணி எண்ணியும் இன்று தான் உன்னிடம் வர முடிந்தது."

"என்ன சங்கதி, சொல்லப்பா!"

"வேறொன்றுமில்லை. உன்பேரன் அகமுடையாளை இப்பொழுது சீக்கிரத்தில் அகத்துக்கு அழைத்துவரவேண்டுமே என்கிறது தான்."

"கொழந்தே, நீ என்ன இப்படி சொல்றயே. என் பேரனும், பேரன் ஆம்படையாளும் சுகமா வாழறதைப் பார்த்துட்டுப் போம்படியான அவ்வளவு பாக்கியமும் நேக்கு வாய்ப்போறதா?" என்று சொல்லிக் கொண்டிருக்கையிலேயே கிழவிக்குத் துக்கத்தால் தொண்டை அடைத்துக் கொண்டது. இறந்துபோன தன் மகனையும் நாட்டுப் பெண்ணையும் நினைத்துக் கொண்டு கண்ணீர் விடலானாள். சற்று நேரங் கழித்து துக்கத்தை அடக்கிக்கொண்டு அவள் பேசத் தொடங்கினாள்—"ஐயோ தெய்வமே! அவள் மனக் கொறையோடேயே போயிட்டாளே. பிள்ளெயெயும் நாட்டுப் பெண்ணெயும் கலியாண கோலத்தில் ஒன்றாய்ப் பார்க்கணுமென்று அவள் ஒத்தைக்காலாலெ நின்னு, பாவம். கடேசியில் அல்பாயுசா மாண்டாளே! தெய்வமே, நீ இப்படியும் சோதிக்கணுமா? பாவி நான் போகாமெ இன்னும் பொழச்சிருக்கேன்! அவாளுக்கு இதுக்குள்ளே காலம் வந்துட்டதே! இந்தக் கண்ராவியே யெல்லாம் பார்க்கணுமென்னு என்தலேலெ எழுதியிருக்கே; ஸ்வாமீ, என்னெ இனிமே ஒன் பாதாரவிந்தத்திலே சேத்துக்கக் கூடாதா?"

கிழவியின் பிரலாபத்தைக் கேட்டு இராஜ குமாரன் நெஞ்சமும் பதைபதைத்தது. ஆனால் அவன் துக்கத்தை அடக்கிக்கொண்டு சாவதானமாய்ச் சொன்னான்—"பாட்டி, நடக்க வேண்டிய தென்னவோ நடந்து விட்டது. இனி நடந்துபோன காரியத்தைப் பற்றிச் சிந்திப்பதனால் என்ன லாபம்? அவ்வளவுதான் நாம் கொடுத்து வைத்தது. அம்மாவுக்குத்தான் நாட்டுப் பெண் அகத்துக்கு வந்து வாழ்வதைப் பார்க்க முடியாமற் போய்விட்டது. நீயாவது பேரன் பெண்டாட்டியின் முகத்தைப் பார்ப்பதற்கு வேண்டிய ஏற்பாடு செய்கிறது தானே?"

"அப்பா, நாட்டுப் பெண் மொகத்தெப் பார்க்க நேக்கு மாத்திரம் ஆசெயில்லெயா? நான் ஒன் தோப்பனாரிடத்திலே, 'அப்பா, பூபேந்திரனுக்குக் கலியாணத்தெப் பண்ணிவிடு. அப்படிச் செய்தெயானா, நான் கண்ணெ மூடிக்கிறதுக்கு மின்னே பேரன் பொண்டாட்டியெ ஒரு தரமாவது பாத்துட்டுப்போவேன்' என்னு எத்தனெ தடவெ சொன்னேன்! ஒன் தாயாரெப் பத்தியோ சொல்ல வேண்டியதேயில்லெ. அவ நாட்டுப் பொண்ணுக்காக எவ்வளவு தொண்டெயெக் கிழிச்சுக்கிண்டாள். பிரதிபெயெ எப்படியாவது நாட்டுப் பொண்ணாக் கொள்ளணுமென்னு ஒரே பயித்தியமா இருந்தாளே. ஆகா! அவ எனக்கு எப்பேர்ப்பட்ட தங்கமான நாட்டுப் பொண்ணு யிருந்தாளோ, அப்பேர்ப்பட்ட நாட்டுப் பொண்ணையே தனக்கும் தேடினாள். பிரதிபெக்கி என்ன கொறவு, தங்கச் செலெயாட்டமா இருந்துதே. அப்போ அவளுக்கு பதினொன்னு தான் வயசு. கலியாணத்துக்கு ஒத்த பிராயம். ஆனால் அவளோடெ தோப்பனார் இவ்வளவு சின்னப் பொண்ணுக்கு இப்போதே கலியாணம் செய்யப் போறதில்லேன்னு சொன்னார். அட பாவமே! இப்படியும் இருக்குமா ஒலகம்! அவர் சொன்னதெக் கேக்க நேக்கு மகா அதிசயமாயிருந்தது. அப்போதே பண்டிதாளெல்லாம் என்ன யோசித்தாளோ தெரியலெ, கலியாணம் பண்ணுட்டா, நிச்சிதார்த்தம் பண்ணிடுன்னு சொன்னா. நிச்சிதார்த்தமும்

கிச்சிதார்த்தமும் நான் என்னைத்தெக் கண்டேன். கலியாணம் ஒண்ணுதான் எனக்குத் தெரிஞ்சது. இந்தக் காலத்து ஜனங்கள் மாறியிருக்கிறப்பலெ சாஸ்திரமும் மாறியிருக்கு. அதிலும் இதுக்கு மின்னெ கேட்டறியாத நிச்சிதார்த்தமெல்லாம் இப்பொ பொறப்படறது. நான் ஒன் தோப்பனாரிடத்திலே—'அப்பா, கலியாணம் பண்றதானா பண்ணு; ஒங்க நிச்சிதார்த்தம் கிச்சிதார்த்தம் ஒன்றும் நேக்குத் தெரியாது' என்னு சொன்னேன். ஒங்கப்பா சொன்னான், 'அம்மா, இதுவும் ஒருவிதமான கலியாணமே; ஆனா ஒன் போன் பொண்டாட்டி இப்பவே ஆத்துக்கு வறத்துக்குப் பதிலா மூணு நாலு வருஷம் கழிச்சு வருவாள்—இவ்வளவுதான் இந்த ரண்டுக்கும் பேதம்' என்றான். அதுக்கு நான்—'அப்பா இதெல்லாம் எனக்கென்ன தெரியும்? ஒனக்குச் சரியாத் தோன்றபடியே செய்' என்னேன். பூபேந்திரா, அந்த நிச்சிதார்த்தம் நடந்து இப்போ ஆறு வருஷம் ஆயிட்டது. நாட்டுப் பொண்ணா இன்னம் ஆத்துக்கு வந்தபாடில்லெ. பின்னே நிச்சிதார்த்த மென்னுக்கெ கல்யாணமென்னு எப்படி எண்ணிக்கிவேன்? அம்மிமேலெ ஏழடி (ஸப்தபதி) எடுத்து வெச்சாத்தானே கல்யாணமென்னு சொல்வா. பிரதிபெயெ அப்பவே ஆத்துக்கு அழெச்சுக்கிண்டிருந்தா, அவ இந்த சமயத்திலே கல்கத்தாவுலெ தொரசாணியாட்டமா குதரெ சாரட்டேறி தானே ஓட்டிக்கிண்டு காத்து வாங்கப் போய் வருவளா? புருஷப் பிள்ளெகளோடே சேந்து இஸ்கோல்லெ வாசிக்கத்தான் போவளா? பிரதிபெயெப்பத்தி இன்னம் என்னென்னமோ என் காதிலெ விழறது! அப்பா! அதெயெல்லாம் ஒன் எதிரெ நான் என்னுன்னு எடுத்துச் சொல்றது. அப்போதே அந்த ஏழு அடியும் எடுத்து வெக்கும்படியா பண்ணிட்டிருந்தா, இன்னிக்கி இந்த வம்சத்துக்கு இப்பேர்ப்பட்ட களங்கம் உண்டாக எடமிராதே. நிச்சிதார்த்தம் நடந்தபோதே என் நெஞ்சு திடுக்குத் திடுக்குன்னு அடிச்சுண்டுது."

பாட்டியம்மையின் பிரசங்கத்தை இடையே தடுத்துப் பூபேந்திரநாதன் பேசலுற்றான்—"பாட்டி, நீ என்ன இப்படி சொல்லுகிறாயே. பிரதிபை கல்கத்தாவில்துரைசாணியைப்போல் உலாவப் போகிறாள் என்றும் ஆண்பிள்ளைகளோடு பள்ளிக்கூடத்துக்கு வாசிக்கப்போகிறாள் என்றும் உனக்கு யார் சொன்னது? இதெல்லாம் சுத்தப் பொய். நான் எப்போதாவது கல்கத்தாவுக்குப் போகச்சே அவளை என் கண்ணாலேயே பார்த்து வருவதுண்டு. அவள் ஆண்பிள்ளைகளின் பள்ளிக்கூடத்தில் எதுக்காக வாசிக்கவேண்டும்? அவள் வாசித்ததெல்லாம் பெண்கள் பாடசாலையிலேயே. இப்போதோ அவள் பள்ளிக்கூடம் போவதையும் நிறுத்திவிட்டாள்; தன் வீட்டிலேயே படித்துக் கொள்ளுகிறாள்."

"அப்படியானா, நீ சொல்றபடியேஇருக்குமோ என்னமோ எனக்கு அதிகமா ஒன்னும் தெரியாது ஆனா பிரதிபெக்குப் பிராயம் இப்போ கிட்டத்தட்டபதினேழுவயசாறது. இத்தனெபெரிய பொண்ணெ இன்னம் கல்யாணமில்லாதெ வெச்சிருப்பாளோ? ராம! ராம! காதாலெ கேக்றத்துக்கே லெஜ்ஜெயாயிருக்கே. பொண்ணுக்குத் தாயார் தோப்பனார் இல்லாட்டா என்ன, தமயன் இருக்கானா இல்லெயோ? தன் தங்கெ கல்யாணத்தை அவன் இதுவரெயிலே ஏன் பண்ணி வெக்கலே?"

"அவன் முன்னமேயே கலியாணம் பண்ணிக் கொடுத்திருப்பான். நாம்தான் பிடி கொடுக்காமல் காலஹரணம் பண்ணிவருகிறோம்."

"பண்டிதாளெல்லாம் ஆட்சேபிக்கச்சே நாம்ப எப்படி சம்மதிக்கிறது? அவா ஆட்சேபிக்காட்டாலும், ஒரு பதினேழு வயசான பொண்ணெ



என் போனுக்கு நான் எப்படி பண்ணிக்கிவேன்? இந்த சங்கதியெ இது வரெயிலெ நீ ஏன் பிரதிபெ தமயனுக்குச் சொல்லலே?"

"எந்த சங்கதியை?"

"பண்டிதாள் அபிப்பிராயத்தெ. "இந்த லோக விரோதமான காரியத்தெ பண்ணாதே; அப்படிப் பண்ணினெயானா, ஏதாவது விபரீதம் சம்பவிக்கும். ஊரடங்கலும் பழிக்கும். நம்ம வம்சத்திலே எப்பவும் நிச்சிதார்த்தமும் நடந்ததில்லெ, கிச்சிதார்த்தமும் நடந்ததில்லெ. பிறத்தியார் ஆங்களிலும் நடந்தது கிடையாது. ஆகச்சே, கல்யாணம் பண்றதானா பண்ணு, இல்லாட்டா ஒண்ணும் பண்ணாதே' என்னு ஒங்கப்பாகிண்டை அப்பவே முட்டிக்கிண்டேன், அவன் ஒண்ணும் காதுலெ போட்டுக்காதே பூட்டான். இப்போ இந்த லோக நிந்தெயெ கேக்கவேண்டிய காலம் வந்திருக்கு."

பூபேந்திரன் கேட்டான்—"பண்டிதாள் அபிப்பிராயமென்ன?

"அது என்னா, நீ கேட்டதில்லையா? இப்பொ கொஞ்சநாளாக எங்கே பாத்தாலும் இந்தப் பேச்சுதான் பேசிக்கொள்றாள். பிரதிபெயெயும் அவளோட தமயனெயும் நிந்திச்சு சொல்றவார்த்தெகளெக் கேட்டுக் கேட்டு என் காதும் புளிச்சுப்போச்சு. அவா ரெண்டுபேரும் பிரம்ம சமாஜியாப் பொய்ட்டாளோ, கிறிஸ்த மதத்திலெ விழுந்துட்டாளோ தெரியல்லெ. அவா ஜாதிமதங்களெ தொலெச்சுட்டதாகக் காதிலெ விழறது. குதிருபோலெ இத்தனெ வயசான பொண்ணெ கல்யாணமில்லாதெ வீட்டிலே வெச்சிருந்தா, எங்கேயாவது ஜாதி தக்குமா? நம்ம குடும்பத்தெச் சேந்தவாளும் ஜாதிக்காராளும் எல்லாம் இதெப்பத்தி பேசினபடியே இருக்கா. அப்பா, நீயோ ஒருபோதும் ஒரு நாழியாவது வீட்டிலே தங்கற பாவத்திலே போறதில்லே. வெளிலென்னா வெளிலெதான் எப்பவும் நோக்கு திரிச்சல். நோக்கு கல்யாணம் பண்றத்துக் குன்னுட்டே நான் கொஞ்சநாளா பிரயத்னப் பட்டுண்டிருக்கிறேன். திவான்ஜி என்னண்டெ வந்து, 'பிரதிபெயெப் பத்தி எல்லாரும் இவ்வளவு பேசிக்கொள்றாளே. அது விஷயமா நாம் என்ன செய்யணும்?' என்னு கேட்டார். அதுக்கு நான், 'அய்யா, நான் என்ன கண்டேன், பண்டிதாளெக் கேளுங்கோ' என்னேன். 'பண்டிதாள் அவாள் அபிப்பிராயத்தே ஏற்கெனவே சொல்லியாச்சே' என்றார் திவான்ஜி. அதுக்கு மேலே நான், 'ஒமக்கு நியாயமாத் தோண்றமாதிரி செய்யும். நமக்கு நிந்தெமட்டும் வராதிருக்கணும், தோஷமும் வரலாகாது,' என்னேன். திவான்ஜி மொதல்லேயே பண்டிதாள் அபிப்பிராயத்தே வாங்கியிருந்தபடியாலே அவர்—'அப்படியன்னா, இப்பொ பிரதிபெயெக் கொள்ள முடியாது; அப்படிக் கொண்டால், சமூகம் நம்மெ பகிஷ்காரம் பண்ணாதெ லேசில் விடாது,' என்றார். இதெக் கேட்டவொடனேயே நேக்கு ரத்தம் சுண்டிப் போய்விட்டது. திவான்ஜி சொன்னார், 'அம்மா,நம்மபாடு மகாகஷ்டத்தில் வந்திருக்கு. நான் என்ன செய்யணுமோ தாங்கள்தான் சொல்லணும் இப்பொ.' நான் சொன்னேன்—'அய்யா, நீர் அந்தக் கல்யாண வார்த்தெயெ விட்டுத் தள்ளும். இப்போ பூபேந்திரனுக்காக எங்கேயாவது நல்ல வம்சத்திலே வேறெ ஏதாவதொரு பொண்ணெத் தேடும்.' இப்படி நான் சொன்ன நாளிலிருந்து பொண் தேடத்தலைப்பட்டார். நேத்து திவான்ஜி ஒரு பொண்ணெக் கொண்டுவந்தார். ஆகா! பொண்ணுன்னாலும் பொண்ணு! மல்லிப்பூவாட்டமா இருக்கு! நான் அந்தப் பெண்ணெத்தான் நோக்கு நிச்சயம் பண்ணி யிருக்கேன். அவளெத்தான் நீ கல்யாணம் பண்ணிக்கொள்ளணும். அவள்தான் என் போன் பொண்டாட்டியா வரணும்

என் இஷ்டப்படியே அந்தப் பொண் வாய்ச்சிருக்கு. அவளெ நீ பாத்தெயானு, பிரதிபெயெக் கூட மறந்துடுவே."

பூபேந்திரன் வியப்புற்று வினவினான்— "அவள் யார்? நானும் அவளைப் பார்க்கவேண்டும்."

"அவசியம் பார்க்கறது. நீ பார்க்கணுமென்னு தானெ அவளெ அவா ஊர்லேந்து இங்கே வரவழெச்சிருக்கு. இன்னெக்கி சாயங்காலமெ நான் அந்தப் பொண்ணெ இங்கே வரும்படியா சொல்லி யனுப்பறேன். நீ அப்பொ வந்து பாரு."

பூபேந்திரன் வாயிலிருந்து 'சரி' என்பதைத் தவிர வேறொரு வார்த்தையும் வரவில்லை! அவன் என்னென்னவோ எண்ணமெல்லாம் எண்ணிக்கொண்டே அங்கிருந்து புறப்பட்டுப் போனான்.

(தொடரும்)

# நான் கண்ட விந்தை.

(ஸ்ரீமதி ரங்கநாயகி.)

நான் ஒரு நாள் சாயங்காலம் என்னுடைய சிநேகிதியைக் காணச் சென்றிருந்தேன். அவள் கர்ப்பமாய் இருந்தமையால் பிரசவிக்கத் தாய் வீடு செல்லவேண்டி மூட்டைகளை யெல்லாம் கட்டிக்கொண்டு இருந்தாள். வீட்டில் சாமான்கள் எல்லாம் ஒழுங்கில்லாமல் இருந்ததுடன் பக்கத்தில் சில புத்தகங்களும் எறியப்பட்டுக் கிடந்தன. நான் மெள்ளச் சென்று அப்புத்தகத்தை எல்லாம் பார்த்து அவைகளை ஒழுங்காய் வைத்துக் கொண்டு வந்தேன். அவைகளில் சிறுவர்களுக்கான சில இங்கிலீஷ் புத்தகங்களும் இன்னும் ஹிந்தி எழுதி வாசிக்கவும் பேசவும் கற்றுக்கொள்ளும் புத்தகங்கள் தமிழிலும் மலையாளத்திலும், இன்னும் பல புத்தகங்களுடன் நமது அரிய சிந்தாமணியும் குந்து மணியைப் போல் குப்பையில் விளங்கி நின்றது. நான் உடனே அவ்விதழ்களை ஒன்று சேர்த்து வைத்து அவற்றில் உள்ளவற்றைக் கொஞ்சம் கிரகித்து என் சிநேகிதியை நோக்கி இப்புத்தகம் எங்கிருந்து வெளியாகிறது என்றும் எவ்வளவு நாளாய் வருகிறது என்றும் கேட்டேன். அவள் 'ஒரு வருஷந்தான் ஆகின்றது. நீங்கள் எடுத்துப்போய் வாசியுங்கள். மிக நன்றாய் இருக்கின்றது' என்று விடை பகர்ந்தாள். நான் மிகவும் சந்தோஷத்துடன் அவைகளை எடுத்துக் கொண்டுவந்து வாசித்தேன். சிந்தாமணியானது ஊக்கமில்லாத என் மனதிற்கு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் அளித்தது. நான் எது உத்தமமாய்த் தோன்றுகிறதோ அதன் பிரகாரம் நடக்க முயற்சி செய்பவளானதனால் சிந்தாமணி என்னை ஆனந்தக் கடலில் ஆழ்த்திவிட்டது. வீணிற் பலவிதப் புத்தகங்களை வாங்கிப் பொய்யாகிய கதைகளை வாசிப்பதை விட இதைப்போன்ற புத்தகங்களை வாங்கி வாசித்தால் நமக்கு ஒரு ஆஸ்திபோல் உதவுகின்றது என்பதில் சந்தேகமில்லையன்றோ! இதில் உள்ள விஷயங்கள் எல்லாம் உண்மையே தவிர வேறு இல்லை. ஆனதனால் இது நமது அரிய சகோதரிகளுக்கும், உற்சாகமற்றவர்களுக்கும், சந்தோஷத்தை இழந்தவர்களுக்கும் மிகவும் உபயோகப்படுவதுடன் நமது தேசத்தின் நிலைமையையும், இப்பொழுது நடக்கும் பலவிவகாரங்களையும் நன்றாய்த் தெரிந்துகொள்ளவும், இத்துடன் நமது முன்னோரின் வாழ்க்கையில் அப்பொழுது இருந்த சாந்



தம், அது இப்பொழுது மாறும் அதிசயம் இவைகளைக் கவனித்து, அப்படித் தலை கீழாய்ப் போகாமல் இருக்கவேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டிய நமது கடமையை நன்குணரவும், இப்புத்தகம் மிகவும் துணையாய் இருக்கின்றது. சகோதரிகளே! நாம் இவ்வின்பம் தரும் மணியை அவசியம் வாங்கி வாசித்து நம் மனதில் அணிந்துகொண்டால் இதைத் திருட ஒருவராலும் முடியாது. வீணில் ஆயிரக் கணக்காய்ப் பணத்தைக் கொட்டிப் பலபேர் கண்டு பொறாமை கொள்ளவும், 'தான்' என்ற கருவம் புதிதாய் உதிக்கவும், நம்மைப் பார்த்து இல்லாதவர்களும் பலவிதம் கடன் வாங்கியேனும் தாமும் அணிந்துகொள்ள முயற்சி செய்யவும், இதற்கிடையில் திருடர்கள் பயம் நேரவும், கொஞ்சம் அஜாக்கிரதையாய் இருந்துவிட்டாற் போய்விடவும் கூடிய இவ்வளவு ஆபத்தான மணிகளை அணிந்துகொள்வதில் என்ன பிரயோஜனம்? நான் இந்த நன்மணியாகிய சிந்தாமணியைக் கண்டதும் அதை வாசித்தேன். வாசித்ததும் உடனே சந்தாதாராய்ச் சேர ஆவல் கொண்டதுடன் சில வியாசங்களும் எழுதி அனுப்ப ஆசை கொண்டேன். இத்துடன் நிற்காமல் இன்னும் பலரை அதை வாசிக்கச் செய்து அவர்களையும் சந்தோஷப்படுத்த உத்தேசித்து என்னுடைய மற்ற சிநேகிதர் வீடு சென்றிருந்தேன். அவர்களிற் சிலர் சந்தோஷமடைந்து சந்தாதாராக ஒப்புக்கொண்டார்கள். மற்றொருவர் வீட்டில் நான் கண்டதே விந்தையிலும் விந்தை. நான் காணச் சென்ற வீட்டில் அவள் தாயார் வந்திருந்தாள். அந்த வீட்டில் மற்றொருத்தியும் இருந்தாள். அந்தம்மாள் நல்ல உயரமும் அதற்குத் தக்க பெருமனும் வாய்ந்தவள். இரண்டு மூன்று குழந்தைகள் விளையாடிக்கொண்டு இருந்தன. அவர்கள் முகத்தில் இருக்கவேண்டிய களைகள் எல்லாம் கிளையாய் மாத்திரம் தோன்றிவிட்டன போலும்! அக்குழந்தைகளுக்கு வியாதி என்பது அவைகளின் முகத்தில் நன்றாய் விளங்கிற்று. நான் கொஞ்சநேரம் பேசிவிட்டுத் திரும்பும்பொழுது 'சிந்தாமணி என்னும் மாதப் பத்திரிகை மிகவும் நன்றாய் இருக்கின்றது. அதை நீங்கள் வரவழைத்து வாசித்தால் சகலமும் தெரியவரும்' என்று சொன்னேன். அதற்குள் தாயானவள் சொல்லுகிறாள். 'நான் எல்லாப்புஸ்தகமும் வாசித்திருக்கிறேன். எனக்குள் எல்லாமையும் தெரியும். ஊரில் மாதப்பத்திரிகை, வாரப்பத்திரிகை, தினபத்திரிகை எல்லாம் வருகிறது. எல்லாரும் என்னத்தை சொல்லுகின்றார்கள். காதில் வைரம் அணியக்கூடாது. கல்லிழைத்த ராக்கோடியை (இதுவும் தலையில் அணியும் ஒரு நகை)வைத்துக்கொள்ளக்கூடாது. பட்டுப் பட்டாய் புடவைகள் இருக்க அதை எல்லாம் உடுத்தக்கூடாதாம். இதுவும் ஒரு புத்தகமா. பெண்களுக்கு நகை, புடவை என்றால் அதிக ஆசை. கருங்கல்லில் தங்கமுலாம் இருந்தாலும் அந்தபாரத்தைச் சகித்துகொண்டேனும் அதை அணிவார்களே. அதை மாற்ற யாரால் முடியும். இப்படி இருக்க வீணில் இந்த கன்று பின்று புஸ்தகங்களிற் காசைப் போடுவதில் என்ன பிரயோஜனம். குழந்தைகளுக்கு பட்சணம் பண்ணிக் கொடுத்தாலும் பிரயோஜனம் உண்டு" என்று, என்னை எங்கே அடிக்க வந்துவிடுவாளோ என்ற விதமாய், மழையும் இடியும் ஏககாலத்திற் தோன்றி மறைந்ததுபோல் பேசி முடித்தாள். எனக்குச் சிரிப்புத்தாங்காமல் வந்தாலும் அதை அடக்கிக்கொண்டு மௌனமாய் இருந்தேன். இதற்குள் அத்துஷ்டக்குழந்தைகளில் ஒன்று மின்சார விளக்கு ஒன்றை மேஜையினின்றும் கீழே தள்ளி உடைத்துவிட்டது. வந்துவிட்டது கோபம் அந்தம்மாளுக்கு. பாவம்! நான் போனபிறகு அது உடைந்து இருந்தால் இவ்வளவு கோபமும் குழந்தைகளுக்கு அடியும் திட்டும் அதிகமாய் இருந்திராது. நான்

உடனே மனதில் நினைத்துக் கொண்டதாவது: "அம்மா, தாங்கள் கோபித்து என்ன பிரயோஜனம். ஒருவித லாபம் பார்த்தால் மறுவிதம் ஒன்றுக்கிரண்டு நஷ்டம் வந்து விடுகிறது. இது புதிய விஷயம் அல்லவே! முன்னோர்களும் இதற்கு 'இஞ்சி லாபம் மஞ்சளிற் போம்' என்று சொல்லியும் இருக்கிறார்கள். ஆனதனால் நாம் எது முக்கியமான விஷயமோ அதில் லாபம் என்றும் நஷ்டம் என்றும் கவனிக்கக்கூடாது. நன்மார்க்கத்தைக் கைப்பிடித்துச்செய்யவேண்டியதே நமதுகடமை. அதினில் லாபம் நஷ்டம் இவ்விரண்டையும் விதியின்மூலமாய் ஈசன் அளிக்கின்றார். இதை அறியாமற் கேவலம் மூடர்கள், நஷ்டம் வந்துவிட்டால் பிறரைத் தூறுவதும், லாபம் வந்தவிடத்துத் தம்மை கொண்டாடிகொள்வதுமாய் இருப்பார்கள். ஒரு குடும்பத்தில், அதிலும் பெரிய மனிதர்கள் வீட்டில், எவ்வளவு பதார்த்தம் வீணாய் ஒருவருக்கும் உபயோகமில்லாமற் போகின்றன; இதன் விலையை நாம் கணக்கிட்டால் குறைந்தபட்சம் நூற்றுக்குப் பத்து வீணாகாமல் இருப்பதில்லை. இதை அவர்களும் கவனிப்பதில்லை. நாம் ஏதேனும் ஒரு தர்ம விஷயமாய்ச் செலவு செய் என்றால் அவர்களுக்கு அதுதான் வீண் செலவாய்த் தோன்றுகிறது. இவர்களுக்குக் கடவுள்தான் நல்லறிவு போதிக்கவேண்டும்." மற்றவளை பார்த்து 'நீங்கள் ஏதாவது வாசிக்கும் வழக்கமுண்டா?' என்று வினவினேன். அவள் காதில் உள்ளங்கை அகலம் ஒரு வைரக் கம்பல், இன்னும் எல்லாம்வைரத்திலேயே அணிந்திருந்தாள். இதைக் கொண்டு அவள் பொன்னைத் தவிர வேறு ஒன்றையும்பூசைசெய்வதில்லை என்று அவளுடைய தோற்றம் இருந்தது. அச்சமயம் பட்டணத்தார், அருளிய 'பொன்னாற் பிரயோஜனம் பொன் படைத்தார் குண்டு' என்ற பாடல் நினைவுக்கு வந்தது. பொன்னைப் படைத்தவர்கள் அதை தருமத்துடன் தக்க வழியிற் செலவு செய்தால் பொன்னிற்குப் பிரயோஜனம் உண்டு. அதில்லாமல் வீணில் மனம் வந்தவாறு செலவு செய்தால் வீணே. நிற்க, நான் கேட்டதற்கு அவ்வம்மை பதிற் சொல்லவில்லை. வேறு சில விஷயம் கேட்டேன். அதற்கும்அந்தம்மாள் வாய் திறக்கவில்லை. காது கேழ்க்கவில்லைபோல் இருக்கிறது என்று நினைத்தேன். இதற்குள் முன் சொன்ன தாயானவள் பேரிடி இடிப்பதுபோல் மேல் விழுந்துகொண்டு சொன்னதாவது: 'அந்தம்மாள் என்ன உங்களைப் போல் இருப்பவளா வேண்டியதைச் செய்துகொள்ள. அவள் ஒரு வீட்டுக்கு நாட்டுப் பெண். அவர்கள் ஒருவரும் இங்கு இல்லாதிருந்தாலும் என் பெண் அவர்கள் வார்த்தையைத் தட்டமாட்டாள். பயந்தமாதிரி. அவளுக்குச் சங்கோசம் அதிகம். அவர்கள் உத்தரவன்னியில் ஒரு காரியமும் அவள் செய்யவே மாட்டாள். அப்படியிருக்கப் பேப்பர் வாசிக்க அவர்கள் ஒப்பமாட்டார்கள். வீட்டில் நாத்தி, மாமி, மாமனார், மைத்துனன், கொழுனன் ஒத்தாள், ஓர்ப்படி, புக்காத்துமனுஷாள் இவ்வளவு பேர் இருக்க இவள் புஸ்தகம் வாசித்தால் எல்லாரும் சிரிப்பார்கள். இக்காலத்தில்தான் எல்லாம் போய்விட்டது. என்றாலும் இப்படியும் சிலபேர் அடங்கி இருக்கின்றார்கள். அதுதான் நன்றாயும் இருக்கு. வாசித்து விட்டு அழியவேண்டாம். அவர்கள் வீணாய்ப் பணத்தைச் செலவு செய்ய ஒப்பமாட்டார்கள். அப்படி இவள் வாசிக்கவேண்டுமானால் எல்லாரிடமும் உத்திரவு பெற்றுப் புருஷனையும் கேட்டு அவர்கள் சம்மதிக்கவேண்டும், இல்லாவிட்டால் இவளே செய்ய என்ன அதிகாரம் உண்டு?" என்றாள். எனக்கு இதைக்கேட்டமாத்திரத்தில் மிகவும் விசனம் உண்டாய்விட்டது. பொன் பூத்தமரம்போல் அந்தம்மாள் பேசினால் எங்கு தன் உடமைகள் கலைந்து



போமோ என்று இருப்பதும், பிசாசைப்போல் இவள் பேச்சும் ஆச்சரியமாகவே இருந்தது. நான் உடனே எழுந்து அந்தப் பொன்மரம் ஜடமாய் இருந்தாலும் அதைப் பார்த்து என்மனம் தாளாமற் சொன்னதாவது, 'சகோதரியே, தாங்கள் அதிக செல்வவந்தராய் இருந்தும் குழந்தைகளைப் பெற்றவராய் இருந்தும் உங்களுக்கு இஷ்டமானதை வாங்கவேண்டும் வாசிக்கவேண்டும் என்கிற அதிகாரம் இல்லை என்பதைக்கேட்க மிகவும் கேவலமாய் இருக்கின்றதே. உங்களுக்குச் சுதந்திரமில்லாமலா இவ்வளவு நகைகள் அணிந்திருக்கிறீர்கள்? அதிலும் இக்காலத்திற் கல்வியையும் நியாயமானவழியில் சுதந்திரத்தையும் பெண்களுக்குக்கொடுக்கவேண்டும் என்று வாதித்துவரும்பொழுது, நீங்கள் இப்படி இருப்பது எனக்கு மிகவும் வருத்தமாய் இருக்கின்றது. என்ன பாக்கியமிருந்தாலும், எவ்வளவு நகைகள் வைரம் வைடூரியமயமாய் அணிந்தாலும் நற்பொழுது போக்காவிடில் என்ன பயன்? காலமெல்லாம் வீணிற் கழிப்பது என்றால் அதை விட நாக வேதனை வேறுஎன்ன இருக்கிறது?" என்று கூறி வீடுவந்து சேர்ந்தேன். எனக்கு இப்படிப்பட்ட மூடர்களைக் கண்டு பேசி அவர் குணங்களை மாற்றவேண்டும் என்னும் ஆசை அதிகமாய் உதித்தது. நேரமில்லாததினால் வந்துவிட்டேன். இவ்விஷயத்தை நமது அரிய மணியில் வெளியிட்டு நமது சகோதரிகள் இனியேனும் கல்வியை இழக்காமல் சந்தோஷமாய்ப் புருஷனுடன் வாழ்கவென்றுவெளியிட்டேன். அருமைச் சகோதரிகளே, மகாத்மாவும், 'யங் இந்தியா' என்று வெளியிடுகின்றார். அதில் அவர் சொல்வது மனதை உருக்கி மெய்மறக்கச் செய்கின்றதே அதில் 'ஓ! பாரதவாசிகளே, பரோபகாரத்தையும் சகோதராஞ்சையையும் ஒருபோதும் கைவிடவேண்டாம். வீண் டம்பம் செய்துகொண்டு அகப்பாவம், கர்வம்கொள்ளாமல் சுதேசிகளாய் இருங்கள். உங்களால் அதிகம் செய்யமுடியாவிட்டால் உங்கள் வீட்டில் உங்களுக்கு சுதந்திரத்தின் பொருட்டு சுதேசியாய் இருங்கள். ஒவ்வொருவனும் இப்படி டம்பம் செய்யாமல் இருந்தால் நமது தேசம் பஞ்சம் நீங்கிக் கீர்த்தியையும் அடையும்' என்று சொல்லுகிறார்.

இனியேனும் நாம் நமது வீட்டளவில் சீர்திருத்தஞ்செய்துகொண்டு, வம்பு பேசி வீண்பொழுது போக்காது, நமக்குரிய கல்வித்துறையில் முன்னேற்றமடைவோமாக.

சுபம்.

# நசிகேதஸ்.

(உபநிஷத்திலுள்ள கதை.)

(ஸ்ரீமதி கௌரி அம்மாள்.)

மூன்னம் உத்தாலகர் என்னும் ரிஷி ஒருவர் 'விச்வஜித்' யாகத்தை நடத்தினார். அதில் அவர் பிராம்மணர்களுக்குச் சில கிழடும், மலடும், உபயோகமற்றவைகளுமான பசுக்களைத் தானம் செய்தார். அதுகண்டு அவருடைய புத்திரனான நசிகேதஸ் சிறுவனாயிருந்தபோதிலும் புத்தி தீட்சண்யமுள்ளவனாதலால் பின்வருமாறு ஆலோசனை செய்வானாயினன். 'இந்த யாகத்தைச் செய்பவன் பரலோகத்தில் இன்பமடையவேண்டுமாகின் தன் சிறந்த சொத்துக்கள் யாவையும் தான் செய்த வாக்கின்படி தானம் செய்துவிடல்வேண்டும். ஆனால் நம் தந்தையோ அங்ஙனம் செய்ய மனமின்றி இவ்வுபயோகமற்ற பசுக்களைக் கொடுக்கிறார்.

தந்தையைப் பாபத்தினின்று நிவர்த்திப்பது புத்திரனின் கடமையாகும். புத்திரனும் தந்தையின் சொத்தேயன்றோ?"

இவ்வாறு எண்ணி வருந்தி, தன் தந்தையை நோக்கி "தந்தையே! என்னை யாருக்குக் கொடுக்கப்போகிறீர்கள்?" என்று வினவினான். அதற்கு அவர் பதிலொன்றும் கூறாமையால், பின்னும் இருமுறை அப்படியே திரும்பத் திரும்பக் கேட்டான். புத்திரனுடைய பிடிவாதத்தைக் கண்ட உத்தாலகர் சினந்து, "உன்னை யமனுக்குக் கொடுக்கிறேன், போ" என மொழிந்தார். அதைக் கேட்ட நசிகேதஸ் தன் தந்தையின் வாக்கு அசத்தியமாகாவண்ணம், அவரிடம் உத்திரவு பெற்று, யமபுரியை நோக்கிச் சென்று, யமதர்மராஜனுடைய கிருகத்தை அடைந்தான். அச்சமயம் யமதர்மராஜன் அங்கில்லாமையால், நசிகேதஸ் அங்கு மூன்று நாட்கள் அன்னாகாரமின்றிப் பட்டினியாய்க் காத்திருந்தான். நான்காம் நாள் தர்மராஜன் வந்ததும் அவரைப் பார்த்து, வணங்கி நசிகேதஸ் "ஸ்வாமி, என் தந்தை என்னைத் தங்களிடமனுப்பினார், வந்திருக்கிறேன்" என்றான்.

தர்ம.:— நீ இங்கு வந்து எத்தனை நாட்களாயின?

நசி.:— மூன்று நாட்களாயின.

தர்ம.:— முதல் நாளில் என்ன சாப்பிட்டாய்?

நசி.:— தங்களுடைய சந்ததிகளை

தர்ம.:— இரண்டாம் நாளில்?

நசி.:— தங்களுடைய ஆடுமாடுகளை.

தர்ம.:— மூன்றாம் நாள்?

நசிகேதஸ் "தங்களுடைய தர்மங்களை" என விடை பகர்ந்தான். ஏனெனில், ஒரு கிருகஸ்தனுடைய கிருகத்திற்கு வந்த அதிதியானவன் அவனால் நன்கு உபசரிக்கப்படாமல், பட்டினியா யிருப்பானேயாகில், அக்கிருகஸ்தனது சந்ததியும், ஆடு மாடுகளும், அவன் செய்த தர்மங்களின் பலனும் அழிவையடையும் என்று சொல்லப்படுகிறது.

இதைக் கேட்ட தர்மராஜன், "நீ என் கிருகத்தில் ஆகாரமில்லாமல் பட்டினியாய் மூன்று நாட்களிருந்தமையால், உனக்கு இஷ்டமான மூன்று வரங்களைக் கேள். தருகிறேன்," என்றார்.

நசி.:— ஸ்வாமி! நான் திரும்பவும் ஜீவனோடு என் தந்தையிருப்பிடம் செல்லவேண்டும். அவரும் என்னை அறிந்து ஏற்றுக்கொள்ள வேண்டும். இதுதான் முதல் வரம்.

தர்ம.:— சரி, அப்படியே. இரண்டாவது?

நசி.:— சுவர்க்கத்தையடையும் மார்க்கத்தை எனக்கு அறிவிக்கவேண்டும்.

தர்மராஜன் "அப்படியே ஆகட்டும்" என்று சுவர்க்கத்தை யடைவதற்காகச் செய்யப்படும் ஒரு யாகத்தின் முறையை நசிகேதஸுக்கு நன்றாக அறிவித்தான். நசிகேதஸ் அதை வெகு சிரத்தையோடு கேட்டு க்ஷணத்தில் கிரகித்துக்கொள்ளவே, தர்மராஜன் அகமகிழ்ந்து "இந்த யாகம் இனி உன் பெயரால் 'நசிகேதாக்னி' என வழங்கப்படட்டும்" என்றருளி, "இனி மூன்றாம் வரம் என்ன?" என்று கேட்டார்.

நசி.:— ஸ்வாமி! மனிதன் இறந்தபின், அவனுக்கு வாழ்வு உண்டென்று சிலரும், இல்லையென்று சிலரும் கூறுகின்றனரே. அதன் உண்மை என்ன? மாணத்தை ஜயிப்பது எப்படி? கிருபைகூர்ந்து கூறவேண்டும்.

தர்ம.:— மாணத்தைப்பற்றி மாத்திரம் கேட்காதே. அது தேவர்களும் அறியாதது. வெகு கஷ்டமானது. அதற்கு சமமான வேறு எதை வேண்டினும் கேள். பூலோகத்தில் ஏக சக்காதிபத்தியம் வேண்டுமோ, தேவலோகத்தில் நீண்ட ஆயுளும் மற்றெவ்விதமான போகங்கள் வேண்டுமோ கேள். ஒருவருக்கும் கிட்டாத சுகங்களை உனக்களிக்கத் தயார்.



நசி.:— ஸ்வாமி! தங்களைத் தரிசிக்கும் பாக்கியத்தைப் பெற்ற பின், எனக்கு நீண்ட ஆயுளுக்கும், ஐசுவர்யத்திற்கும் குறைவேது. நசிகேதாக்னியின் முறையையும் எனக்கு போதித்திருக்கிறீர்கள். மேலும் எவ்வித போகமாயினும் எல்லாம் காலவளவில் முடிவடையும் தன்மையுடையன, ஆதலின் அவை யொன்றையும் வேண்டேன். நான் கேட்ட அசாசுவதமான வாத்தையே வேண்டுகிறேன். வாழ்வின் இருபுறத்தையுமறிந்த தாங்கள்தான் அதை உபதேசிக்கத் தக்கவர்.

தர்ம.:— குழந்தாய்! நீயே மேலானவன். உன் சிரத்தைக்கும், போகங்களால் மயங்காத அறிவுக்கும் மெச்சினேன். உன்னையொத்த பிரம்மசாரிக்கே அவ்வுண்மை உபதேசித்தற்குரியது என்று,

न सांपरायः प्रतिभाति बाल प्रमाद्यन्तं वित्तमोहेन मूढं ।
अयं लोको नास्ति पर इति मानी पुनः पुनर्वशमापद्यते मे॥

(அர்த்தம்) செல்வத்தின் மாயையினால் அறிவுமழுங்கின மூடாத்மாவுக்குப் பாலோக வாழ்வு உண்டென்பது புலப்படுவதில்லை. இகலோக வாழ்வு ஒன்றுதான்; இதற்குப் பின் வேறு லோகமில்லை என்றெண்ணுபவன் திரும்பத் திரும்ப என் கையில் சிக்கிக்கொள்ளுகிறான்.

सर्वे वेदा यत्पदमामनन्ति तपांसि सर्वाणि च यद्वदन्ति ।
यदिच्छन्तो ब्रह्मचर्यं चरन्ति तत्ते पदं संग्रहेण ब्रवीम्यो
मित्येतत् ॥

(அர்த்தம்) எந்தப் பதத்தை எல்லா வேதங்களும் விளம்புகின்றனவோ, எல்லா தபசுகளும் எதைக் கூறுகின்றனவோ, எதை இச்சித்துப் பிரம்மசர்யத்தை யனுஷ்டிக்கின்றனரோ, அதை உனக்குச் சுருக்கமாகக் கூறுகிறேன். அதுதான் 'ஓம்'

अशब्दमस्पर्शमरूपमव्ययं तथाऽरसन्नित्यमगन्धवच्चयत्
अनाद्यनन्तम्महतः परं ध्रुवं निचाय्य तन्मृत्युमुखात्प्रमुच्यते.

(அர்த்தம்) சப்தம், ஸ்பர்சம், ரூபம், ருசி, வாசனை, அழிவு ஒன்று மில்லாததும், நித்தியமானதும். அனாதியந்தமானதும், மகத்துக்கப் புறமுள்ளதும், நிர்விகாரமாயுள்ளதும் எதுவோ அந்த ஆத்மாவை யறிந்தவனே யமன் வாயிலிருந்து விடுபடுகிறான்

என்று இன்னும் அதிவிஸ்தாரமாய்ப் பிரும்மத்தையடையும் யோக மார்க்கத்தை நசிகேதஸுக்கு உபதேசித்தார். யமபுரியினின்று திரும்பிப்போய்நசிகேதஸ் அதைக் கடைப் பிடித்து நிர்மலனாய், மாணத்திலிருந்து விடுபட்டவனாய்ப் பிரும்மத்தை யடைந்தான்,

இவ்வாறு சிஷ்யன் பிரம்மசாரியாயும், போகங்களிற் பற்றில்லாதவனாயும், திட சித்தத்தோடு உண்மை நிலையை நாடுபவனாயுமிருந்து மிருத்யுவை யொத்த முக்காலமுமுணர்ந்த ஞானியை குருவாயடைந்து, யோக மார்க்கத்தை உபதேசிக்கப் பெற்றால், அவன் பிரும்மத்தை யடைவதிற் சந்தேகமில்லை.

ओं शान्तिः! शान्तिः!! शान्तिः!!!

# அம்மை குத்தல்.

ஒரு சம்பாஷணை.

(ஸ்ரீமதி வைதேகி.)

சில நாட்களுக்கு முன் நான் என்னுடைய பந்துக்களில் ஒருவரைப் பார்ப்பதற்காக இராமநாதபுரம் ஜில்லாவைச்சேர்ந்த ஸ்ரீவில்லிபுத்தூர் என்னும் ஊருக்குப் போயிருந்தேன். ஒருநாள் 5, 6 பேர்கள் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தபோது கீழ்க்கண்ட சம்பாஷணை நடந்தது.

கோமதி:— என்னடீ சாலாக்ஷி! இன்று காலையில் உன் புருஷர் குழந்தையைக் கூட்டிக்கொண்டு ஆஸ்பத்திரிக்குப் போனாரே! குழந்தைக்கு என்ன உடம்பு?

விசாலாக்ஷி:— உடம்பு ஒன்று மில்லை, மாமி. அவனுக்கு இன்னும் அம்மை குத்தவில்லை. அவர்கள் வந்து பார்த்துவிட்டுப்போய் ஒரு மாதத்திற்கு மேலாய்விட்டது; ஏதோ சாக்குப் போக்குச் சொல்லி இத்தனை நாட்களை கழித்தோம். நேற்று மறுபடியும் வந்து கேட்கவே, அதற்குத்தான் இன்றைக்குக் காலையில் போய் இன்னும் 10 நாளில் வருவதாகச் சொல்லிவிட்டுவந்தார்.

ஒருபாட்டி:—என்னடியம்மா செய்யறது மழைகாலமாகயிருக்கு. காச்சல் குளிர் வந்தால் யாரால் முடியும். வெய்யற்காலம் வந்த பிறகு பார்த்துக்கொள்ளலாமென்றிருக்கிறோம்.

நான்:— ஏன் பாட்டி, உங்கள் பேரன் நடராஜனுக்கு 4 வயது இருக்கும்போலிருக்கிறதே. இன்னும் அம்மைகுத்தவில்லையா? எங்கள் ஊரில் மூன்றுமாதக் குழந்தைக்கே அம்மை வைத்துவிடுகிறார்களே.

பாட்டி:— அதென்னமோம்மா. எங்களுக்குப் பயம்தான். உங்கள் ஊர் குளிர்ச்சியாகயிருக்குமென்று சொல்லுகிறாயே. ஒன்றும் செய்யாதா?

கோமதி:—இவர்களுக்கு இதற்குத்தான் பயம்! காய்ச்சல் அடிப்பதைக்கூட கவனிக்காமல் புளித்த பழையதைப் போட்டு நிமிஷத்தில் மாந்தம் வரும்படி செய்து குழந்தைகளைக் கொன்றுவிடுகிறார்கள். போன வாரம் நாகலக்ஷ்மியின் குழந்தை அவ்வாறுதானே இறந்துபோயிற்று.

பாட்டி:— என்னடியம்மா, உன்னைப்போல் நாங்கள் படித்திருக்கிறோமா? ஏதோ பெரியவர்கள் செய்தபடி செய்து வருகிறோம். பகவான் விட்ட வழிதான்.

கோமதி:— அது இல்லை என்று யார் சொல்லுகிறார்கள். அவனில்லாமல் அணுவும் அசையாது. என் பேரனுக்கு 5 மாதத்திலேயே அம்மை குத்திவிட்டோம். ஒரு நாள் காய்ச்சல் வந்தது. அப்புறம் சௌக்கியமாய்விட்டது.

கமலம்:— மாமி! என்ன சொன்னாலும் அம்மை குத்துவதென்றால் எங்களுக்குப் பயம்தான். நேற்றைக்குக்கூட என் பெண் சரஸ்வதியை வந்து பார்த்துவிட்டுப் போனான். இன்னும் ஒருமாதம் சாவகாசம் கேட்டிருக்கிறோம்.

விசாலாக்ஷி:— 5 வயதுக்குமேற்பட்ட குழந்தைகளுக்கு அம்மை குத்தாவிட்டால் அபாரதம் போடுவார்களாம். அதை வேண்டுமானாலும் கொடுத்துவிட்டால் போகிறது.

கோமதி:— உன் பணக்கொழுப்பு அப்படி பேசச் சொல்லுகிறது.



நான்:— பணத்திற்காகத்தானா இவ்வளவும்! யாருடைய சௌகரியத்திற்காகவோ தெரியவில்லையே?

பாட்டி:— அது என்ன சௌகரியம்? இந்த ஊரில் அம்மை குத்திக்கொண்டவர்களுக்குக்கூட வைசூரி கண்டதே.

கோமதி:— நீங்கள் சொன்னதையே சொல்லுகிறீர்களே. அவர்கள் இரண்டுபேரும் பிழைத்துவிடவில்லையா? அது ஒரு உபகாரமல்லவா?

பாட்டி:— என்னமோ பிழைத்தார்கள். விதியின்படிதானே நடக்கும்.

நான்:— ஆனால் நாம் கவனிப்பதால் ஒன்றும் பிரயோஜனமில்லையா? அவ்வாறிருந்தால் எதற்காக எல்லா ஊர்களிலும் வைத்திய சாலைகளை ஏற்படுத்தி யிருக்கிறார்கள்?

கோமதி:—இந்த ஊரில் ஒன்றையும் கவனிக்க மாட்டார்கள். ஆணும் பெண்ணும் ஒரே மாதிரியான முட்டாள்கள்தான். பெரியவர்கள் தேடி வைத்த சொத்தை உட்கார்ந்துகொண்டு சாப்பிட்டுவிட்டு ஊர் வம்பளந்து பொழுதைப் போக்குவார்கள். இதுமாத்திரம்தானா? இந்த ஊரில் கர்ப்பிணிகள் சௌகரியமாகப் பிரசவித்துப்பிழைத்தார்களென்பதே கிடையாது. 10 பேரில் குறைந்தது 6 பேர்களாவது கவனக் குறைவால் இறந்துபோனார்கள். பிராணன் போய்விடுமோவென்று சந்தேகம் உண்டாகும்வரை வைத்தியனைக் கூப்பிடமாட்டார்கள். அப்புறமும் பணத் தகரார் நடக்கும். இதற்கிடையே அதிர்ஷ்டமிருந்தால்தான் பிழைப்பது. ஆனால் புதுமாதிரியான ஆபரணங்களும் பட்டுப் புடவைகளும் இந்த ஊரில்தான் அதிகமாகச் செலவாகிறதென்று சொல்லலாம்.

இந்த சம்பாஷணையைக் கேட்க எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. நம் தேசத்து ஸ்திரீகளின் அறிவீனத்தை நினைக்க நினைக்க அதிக வருத்தமுண்டாயிற்று. ஒவ்வொருவரும் தம்முடைய சுகாதாரத்தைப்பற்றித் தாமே கவனித்துக்கொண்டால்தான் சுகமாக வாழலாம். அவ்வாறின்றிச் சர்க்காரால் ஜனங்களுக்காக அநேகவித சௌகரியங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தும் நம்மவர் நம்முடைய அறிவீனத்தால் யாதொருவித உதவியையும் பெறாமல் அநேகவிதக் கஷ்டத்திற்கு ஆளாகிறார்கள். அந்தோ! பரிதாபம். நம் தேசத்து ஜனத்தொகுதியில் பெரும்பாலோர்கள் (அதாவது ஸ்திரீகள்மாத்திரமல்லாது புருஷர்களும்) குழந்தைகளை கவனிக்கும் விஷயத்திலும் டாக்டர்கள் செய்யும் வைத்திய விஷயத்திலும் தங்களுடைய கவனத்தைச் சிறிதேனும் செலுத்தாமல் அலட்சியமாக யிருப்பது மிகவும் விசனிக்கத் தக்கதாக யிருக்கிறது. ஸர்வாந்தர்யாமியாகிய பகவான் இவர்களுக்கு நல்ல அறிவு உண்டாகும்படி கருணை புரிவாராக!

---

## சந்தாநேயர்களுக்கு அறிவிப்பு.

சில எதிர்பாராத அசௌகரியங்களால் இம்மாதம் பத்திரிகை காலதாமதமாகி வெளிவந்ததற்கு மன்னிக்க வேண்டுகிறேன், இனி அப்படி நேராவண்ணம் ஏற்பாடு செய்கிறேன்.

வி. பாலம்மாள்.

# மாதுருத் துரோகி.

(சிறு கதை.)

(ஸ்ரீமதி பாகீரதி அம்மாள்.)

ஏழெட்டு நாட்களாய்ப் பதியின் நிருபமே வாராததால், கமலா யாது செய்வதென்றறியாமல் திகைத்தனள். கமலா நல்ல பணக்காரக் குடும்பத்திற் பிறந்தவள். இவளுடைய மாமனாரும் ஒரு பெரிய வக்கீல் சென்னை சட்ட கலாசாலையிற் படித்து வந்த இவளது கணவன் விசுவநாதன் சென்ற ஈஸ்டர் லீவுக்கு மதுரை வருவதாக முன்னாலேயே கமலாவுக்குச் சொல்லியிருந்ததால், அவளும் மிக்க உற்சாகத்துடன் அவனை எதிர் நோக்கியிருந்தனள். ஆனால் ஈஸ்டர் லீவுக்கு விசுவநாதன் வரவுமில்லை, ஏழெட்டு நாட்களாய்க் காகிதமு மெழுதவில்லை.

அச்சமயம் மதுரையிலேயே கமலாளின் பெற்றோர்களு மிருந்தபடியால், கமலா தன் பிறந்தகத்திலிருந்தனள், இத்தருணியினது பதியின் நிருபங்களை நிதமும் கொடுத்துக் கொடுத்து அவ்வூர் போஸ்டு சேவகனுக்குக் கால்கள் விழுந்துபோய் விட்டன. நிதமும் இவர்கள் என்ன தான் எழுதுவார்களோ என்று அடிக்கடி அவன் நினைப்பான். ஒரு நாளாவது நிருபம் வராமலிருக்கவில்லை. ஆனால் இந்த ஏழெட்டு நாட்களாகப் போஸ்டு பியூன் கமலாளின் வீட்டிற்கு வாராததால், கமலா போஸ்ட் ஆபீசுக்குச் சேவகனை அனுப்பி விசாரித்தனள். ஆனால் சென்னையிலிருந்த விசுவநாதன் எழுதாமலிருக்கும்பொழுது, பாவம், போஸ்டு பியூன்தான் என்ன செய்வான்! போஸ்டு மாஸ்டர் தானென்ன செய்வார்! நம் கமலாளின் மனம் என்ன பாடு பட்டிருக்குமென்று ஈச்வரனுக்கே தெரியும்!

நமது கமலா பணக்காரப் பெற்றோர்களுக்கு ஓரே புத்திரியானதால் மிக்க செல்வமாக வளர்ந்து வந்தனள். அவ்விதமாகவே இவள் மாமனாரது வீட்டிலும் ஒரே மருமகளானதால் எல்லோரும் இவளைப் பட்சமாகப் பார்த்து வந்தார்கள். தன் பதிக்கு நிருபங்களெழுதுவதற்கும், பதியினிடமிருந்து வரும் நிருபங்களை மிக்க இஷ்டமுடன் வாசிப்பதற்கும் மிக்க நேரம் வேண்டியிருந்ததால், கமலா சம்சாரத்தில் வேறொரு காரியத்தையுங் கவனிப்பது வழக்கமில்லை. சில நேரங்களில் நாடகங்கள், நாவல்கள் முதலிய புஸ்தகங்களை வாசிப்பாள். சில நேரங்களில் நூல் வஸ்திரங்களும் கழுத்துப் பட்டைகளும் பின்னிக்கொண்டிருப்பாள். ஒரு வேலையு மில்லாவிட்டால் விளையாடுதல், அறட்டையடித்தல், தூங்குதல் முதலிய மகத்தான காரியங்களில் மனதைச் செலுத்தியிருப்பாள். ஓகோ! மறந்து விட்டேன்! இன்னமொரு காரியத்தை இவள் அடிக்கடி செய்து வந்ததுண்டு. நிதமும் டாக்டரது மிக்ஸர்குடித்துக்கொண்டே வந்தனள். மாதத்தில் முப்பத்தொரு நாட்களிலும் அசௌக்கியமே! கணவனது காகிதம் எட்டு நாட்களாக வாராததால், கமலாளின் அசௌக்கியம் அதிகமாயிற்றெனச் சொல்ல வேண்டியது அனுவசியமே. இந்த சங்கதி அவ்வூரிலுள்ள எல்லோருக்கும் சீக்கிரம் பரவிற்று. அந்த வீட்டிலிருந்த எலிகள் பூனைகளுக்குக்கூட கமலாளின் அசௌக்கியத்தைப் பற்றித் தெரிந்தது.

மாலை மணி நான்கிருக்கும். கமலா மாடியறையிலுட்கார்ந்து சவுக்கம் பின்னிக்கொண்டிருந்தனள். அப்பொழுது வேலைக்காரி அவசரமாக வந்து கமலாளிடம் ஒரு நிருபத்தைக் கொடுத்தனள். கையிலிருந்த சவுக்கத்தை வீசியெறிந்துவிட்டு நிருபத்தை வாங்கித் தன்ன



றைக்குட் சென்றாள். மிக்க உற்சாகத்தோடு கவரைக்கிழித்து வாசிக்க ஆரம்பிப்பதற்கு முன்னால், அவள் தலைசுழன்றது. காகிதத்திலே பின் வருமாறு எழுதியிருந்தது.

நெம்பர் 25, தம்பு செட்டித் தெருவு,
சென்னை,
27—3—1925.

கமலா!

இப்பொழுது எந்த முகத்தை வைத்துக்கொண்டு உன்னைப் பார்ப்பேன், உன்னெதிரில் வருவேன்? எட்டு நாட்களாயும் எனது மனம் என்னை அல்லும் பகலும் வருத்திக் கொண்டேயிருக்கிறது. படிப்பில் புத்தி செல்வதில்லை. சாப்பாட்டிலும் புத்தி செல்லவில்லை. யாதொன்றுந் தோன்றாது பித்தம் பிடித்தவனைப்போல் அவஸ்தைப்பட்டுக்கொண்டிருக்கிறேன். ஆகா! எந்த வேளையில் எனக்கு இக்கெடு புத்தி வந்தது! என் கையால் இப்பயங்கரமான பாதகத்தைச் செய்யவேண்டி வந்ததே! இனிமேலாவது இவ்விதஞ் செய்யாமலிருப்பேனா? மறுபடியும் அவ்விதமான தரிசனங் கிடைக்கக்கூடாதென எவ்வளவோ ஜாக்கிரதையாயிருக்கிறேன். நான் செல்லமய்யர் வீட்டிற்குக் கொஞ்ச நாட்களாய் போகாமலிருந்தேன். ஆனால் ஈஸ்டர் லீவுக்கு மதுரை போகப்போகிறேனெனத் தெரிந்து, புறப்படுவதற்கு முன்னால் ஒரு நாள் சாப்பாட்டிற்கு வரவேண்டுமெனச் செல்லமய்யரது தாயார் கட்டாயப்படுத்தி வேண்டிக் கொண்டதால் நான் போக வேண்டி வந்தது. அவர் வீட்டில் அந்தப் பீடையைத் தரிசிக்கக் கூடாதென்றும் எதிரிற் காணும் பட்சத்தில் நேத்திரங்களை இறுக மூடிக்கொள்ள வேண்டுமென்றும், தலையை நிமிர்த்தும் பார்க்கக் கூடாதென்றும் நிச்சயித்துக்கொண்டே நானங்கே சென்றேன். ஆனால் எனது நிச்சயமெல்லாம் மண்ணிற் கவிழ்ந்து விட்டது. அந்த ஸ்வரூபத்தைக்கண்டு அதற்குப் பலியானேன்! எனது கரத்தை அந்தப் பீடை ஸ்பரிசஞ் செய்ததால் அந்தக் கரத்தை வெட்டி யெறிந்தாலும் எனக்குப் பாப விமோசனமுண்டாகாது. நான் ஈஸ்டர் லீவுக்குவாராத காரணம் எனது கரத்தாற் செய்த இப்பாதகத்தாலேயே. கமலா! என்ன செய்தாலும் இப்பாவிக்கு உன்னெதிரில்வர தைரிய முண்டாகாது. உனக்கு நான் நிதமும் நிருபமெழுதும் பொருட்டு உட்கார்ந்தது வாஸ்தவமே. ஆனால் இப்பாதகனது கையாலெழுதிய நிருபத்தை உன் பவித்திர கரத்தால் தீண்டினாற் பாபமுண்டென என் கரம் நடுங்குகிறது. பேனா நழுவிக் கீழே விழுகின்றது. மனதிலோ பற்பல எண்ணங்கள் உதிக்கின்றன. மௌன விரதத்தை அனுசரித்து இன்னு மெவ்வளவு நாட்கள் தான் உட்கார்ந்திருக்க முடியும்? செய்துள்ள கோரபாதகத்தை உன்னிடம் வெளியிட்டுச் சொல்லி, மன்னிப்புக்கேட்டுக் கொள்ளவேண்டுமென்ற உத்தேசத்துடன் இன்று பேனாவை எடுத்திருக்கிறேன். இப்பாதகச் செயலுக்கு நீ யென்னை க்ஷமிப்பாயா? நான் விசுவாசகாதகஞ் செய்துள்ளேன். உன்னிடஞ் செய்துள்ள பிரதிக்ஞையைப் பங்கஞ்செய்துள்ளேன். துஷ்டர்களின் சகவாசத்தால் நிந்தைக்கிடமான காரியத்தைச் செய்துவிட்டேன். உன்னிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்ள எனக்கு யாதொரு அதிகாரமுமில்லையென நன்றாய்த் தெரியும். நீ தயையே ஸ்வரூபமாயிருப்பதாலும், அன்புகொண்டு என்னை ஆதரித்து வருவதாலும் நான் செய்துள்ள அபராதத்தை மறந்து க்ஷமிப்பாயென்று நம்புகிறேன். இனி லஜ்ஜைக்கிடமான இக்காரியத்தை ஜன்மமுள்ளவரை செய்யேன். சங்கதிகளை எதிரிற் சொல்லவேண்டுமென இச்சை கொண்டுள்ளேன். க்ஷமித்ததாக உன் கைப்பட எனக்கொருவரி எழுதும் பட்சத்தில், அன்றே உன்னைத் தரிசிக்க வருகின்றேன்.

மறு தபாலிற் பதிலெழுதவும். பதிலையே எதிர் பார்த்து நிற்கும்

உனது துஷ்டக் கணவன், விசுவநாதன்.

தனவந்தர்களது வீடுகளிலுள்ள எழுதப் படிக்கத் தெரிந்த ஸ்திரீகள் ஏறக்குறைய எல்லோரும் தினமும் நமது கமலாவைப்போலவே இருந்து வருகின்றார்கள். நாடகங்கள் வாசிப்பதிலும், அரட்டையடிப்பதிலும், வீண் வம்பு பேசுவதிலும், பாக்கி நேரங்களிலெல்லாம் தூங்குவதிலும் உலக முன்னேற்றத்திற்கு உபயோகமில்லாமற் கழித்து வருகின்றார்களென்பது எல்லோருமறிந்த விஷயமே. ஆனால் அந்த தோஷத்திற்காக அவர்களை நாம் திரஸ்கரிக்கின்றோம். பாபம், அப்பேதைகளை நாம் திரஸ்கரிப்பது நியாயமா என்று யோசித்துப் பார்ப்பது அவசியமே. பெரிய பதவியிலுள்ளவர்கள், வித்வான்கள், கல்விமான்கள் முதலிய புருஷ வர்க்கத்தை சேர்ந்தோர்கள் வயிற்றை வளர்க்க உத்தியோகஞ் செய்யும் நேரத்தை நல்லவிதமாய் உபயோகித்து வருகின்றார்களா? நான்கு பேர்கள் கூடிக் கிளப்புகளிலுட்கார்ந்து சீட்டாடியும் அறட்டையடித்தும் காலத்தைக் கழித்து, தாம் தம் ஆயுள் நாட்களில் எவ்வளவு வருஷங்களை ஒரு பலனுமின்றிக் கழித்திருக்கின்றோம் என்று ஆழ்ந்து யோசித்துப் பார்த்திருந்தால், வாஸ்தவமாய்த் தாங்கள் செய்யவேண்டியது யாதென அவர்களுக்குத் தெரியவரும். அவர்களது ஸ்திதியே கேவலமாயிருக்கும்பொழுது அவர்களைச் சேர்ந்த ஸ்திரீகளிடமுள்ள குற்றத்தைச் சொல்ல அவர்களுக்கென்ன அதிகாரமிருக்கிறது? இதுவுமன்றி தங்கள் ஸ்திரீகளிடமுள்ள தோஷத்தை அகற்ற இவர்கள் என்ன வழி தேடியுள்ளார்? ஸ்திரீகளாற் சுகமுண்டென அவர்களைப் போற்றுவதற்கும், துக்கமேயென அவர்களைத் தூற்றுவதற்கு முன்னால், அவர்களுக்குச் சன்மார்க்கத்தைக் காட்ட புருஷர்கள் யாதொரு பிரயத்தனமுஞ் செய்யாமலிருப்பதைக் கவனிக்குங்கால், மிக்க துக்கத்தையே கொடுக்கின்றது.

நமது கமலா தன் கணவனிடங் கொண்டுள்ள பக்தி குறைவற்றதெனச் சொல்லவேண்டியது அனாவசியமே. விசுவநாதனும் தன் பத்தினியிடம் அன்போடும், ஆதரவோடுமிருந்தான். ஈஸ்டர் லீவுக்குத் தன் கணவன் வாராததால் தான் கொண்டிருந்த ஆசைக்குப் பங்கமுண்டாகவே, கமலா முதலில் மிக்கக் கோபங் கொண்டாள். எட்டு நாட்கள் காகிதமே வாராமலிருந்தால் பிறகு கேட்பானேன்? அவளது மனதில் அநேக சந்தேகங்கள் தோன்றிவந்த அச்சமயத்தில் இவ்விதமாய்க் காகிதமும் வந்தால் அவளது ஸ்திதி எப்படியிருந்திருக்குமென யாரால்தான் வர்ணிக்க முடியும்? கமலா மறுபடியும் ஒரு முறை நிருபத்தை வாசித்தாள். தலை சுழன்றது, மயக்கமுண்டாகக் கீழே படுத்தாள். கொஞ்ச நேரங் கழித்து எழுந்து மறுபடியுமொருமுறை நிருபத்தை வாசித்தாள். கோபங்கொண்டு அக்காகிதத்தைக் கசக்கி எறிந்தாள்.

இருக்க இருக்க தேகத்தில் உஷ்ணமதிகரித்துக் கொண்டே வந்தது. தலைவலியுங் குறைந்தபாடில்லை. நேத்திரங்களினின்றும் நீர் தாரை தாரையாகப் பெருகிக்கொண்டேயிருக்கத் தன்னறையில் மிக்கநேரம் படுத்திருந்தாள்.

கொஞ்ச நேரத்திற்குப் பிறகு அவளது சிநேகிதி ராதை உள்ளுக்குள் நுழைந்து, அகாலத்தில் சயனித்திருந்த கமலாவைப் பார்த்து, “கமலா! தேக சௌக்கியமில்லையா?” என்று தலையிற் கையை வைத்துப் பார்த்துக் கேட்டனள். அவளது நேத்திரங்களினின்றும் நீர் தாரை தாரையாகப் பெருகிக் கன்னங்களில் ஓடிக்கொண்டிருக்கக் கண்ட ராதை, “என்ன சங்கதி? அழக் காரணமென்ன? விசுவநாத அண்ணா சௌக்கியந்தானே?” என்றனள்.



திடீரென முகத்தை மூடிக்கொண்டு “சௌக்கியந்தான்” என்றனள் கமலா.

“ஆனால் இந்த வேளையில் நீ எதை நினைத்துக்கொண்டாய்? ஏனழுகிறாய்?”

“நானெப்பொழுது அழுதேன்?”

“ஓகோ! அப்படியா சங்கதி! இருக்க வேண்டியதுதான். ஆனாலும் நீ என்னிடம் கூட சொல்லக்கூடாதோ?”

“சொல்வதற்கென்ன இருக்கிறது?”

இவர்களிருவரும் ஒருவரையொருவர் நேசித்துவந்ததால், எப்படிப்பட்ட சங்கதியையும் கமலா ராதையிடஞ் சொல்லாது மறைத்து வைத்தவளல்ல. ஆகவே ராதை கோபத்துடன் ‘சரிதான்’ என்று சொல்லிக்கொண்டே அவ்வறையை விடுத்துக் கீழே சென்று சங்கதிகளனைத்தையும் கமலாவின் தாயிடஞ் சாற்றினாள்.

கமலாவின் தாய் உடனே அவளிடம்சென்று, “மறுபடியும் ஜுரம் வந்துவிட்டதா? எல்லாம் நீயே வருவித்துக் கொள்ளுகிறாய். இன்று காலை அந்த ஆரஞ்சிப் பழத்தை ஏன் தின்றாய்? உடம்பு சூடாய்த்தானிருக்கிறது. தலை வலியிருக்கிறதா? குளிரிருக்கிறதா?” என்று சொல்லிக்கொண்டே நெற்றியிலும் கன்னங்களிலுங் கையை வைத்துப் பார்த்துவிட்டு வைத்தியருக்குச் சொல்லியனுப்பக் கீழே சென்றாள்.

கமலாவின் மனமோ அநேக எண்ணங்களுக்கிடங் கொடுத்தது. “அவள் யாராயிருக்கக் கூடும்; அந்தச் சண்டாளி என் சம்சாரத்திலல்லவோ மண்ணைக் கவிழ்த்தாள். எனது சுகத்தையல்லவோ நாசஞ் செய்தாள். அப்பீடை என்னெதிரிலிருக்கும்பட்சத்தில் கண்களைக் குத்திவிடுவேன். இருக்கட்டும்! அந்த செல்லமையர் பெண் லீலாளாய்த்தானிருக்கும்! ஒருநாள் என்னை இவர் அங்கே அழைத்துச் சென்றிருந்தபொழுது, அங்கேயிருந்த போட்டோக்களில் அவளைக் காண்பித்திருக்கிறார். இன்னும் அவள் என்னெதிரில் நிற்பதாகவே தோன்றுகிறது. வாஸ்தவந்தான். அவள் என்னைவிட அழகுதான்! அவள் அழகாயில்லாவிடில் அவர் இப்பாப கர்மத்தைச் செய்திருப்பாரா? நானேன் அவளைவிட அழகாய்ப் பிறந்திருக்கக்கூடாது? அவள் அழகாயிருப்பதாலல்லவோ என்னை மறந்தனர். அழகிருக்குமிடத்தில்தான் ஞாபகமும்! புருஷர்களது சுபாவமே அதுதான்! என்ன நான் ஆசைகொண்டிருந்தும் பலனென்ன? சென்னை அமராபுரி என்பதிற் சந்தேகமில்லை. அங்கு தருணர்கள் யோகிக்கும்படி எவ்வளவோ வஸ்துக்கவிருப்பதாக எல்லோருஞ் சொல்லுகிறார்கள். ஆனால் அவர் சுபாவத்தைப்பற்றிப் பூர்ண நம்பிக்கைகொண்டிருந்தேனே. அங்கே அவர் யாரையும் இச்சியாரென்றும், என்னைத் தவிர யாரையும் அவர் ஏறிட்டுப் பாராரென்றும் நான் என் சிநேகிதிகளிடம் பிரமாதமாய்ப் பேசிக் கொண்டேனே. ‘செல்லமய்யர் பெண் லீலா என் தங்கையைவிட மேலென்பதிற் சந்தேகமில்லை’ என்று சொல்லியுள்ளார். நானும் அவர் வார்த்தையில் நம்பிக்கை வைத்திருந்தேனே. லீலா தங்கையைவிட அதிகமாய்த்தானிருக்கிறாள்! பேச்சில் எவ்வளவு கபடம்! உலகத்தோர் சொல்லுவது வாஸ்தவமாய் விட்டதே. ஐயோ” என்று தேம்பினாள்.

கமலா மிக்க விசாரத்திற்குள்ளானாள். மெய் மறந்தாள். மிக்க நேரங் கழித்துக் கண்களைத் திறந்து பார்க்க, எதிரில் டாக்டர், தந்தை முதலியவர்கள் அவளைச் சூழ்ந்து கொண்டிருந்தார்கள். “பயப்படக் காரணமில்லை. இப்பொழுது இந்த மருந்தைச் சாப்பிட்டதும், இன்னும் ஒரு மணி நேரங் கழித்து

வேறு மருந்து அனுப்புகின்றேன். காலை மறுபடியும் வந்து பார்க்கின்றேன்" என்று சொல்லிவிட்டு வைத்தியர் மருந்துப் பெட்டியை எடுத்துக்கொண்டு போய்விட்டார். வைத்தியர் சென்றபின் அவளது தாய் "கமலா, இப்பொழுது உடம்பு எப்படி யிருக்கிறது?" என்று கேட்க, "தலைவலி கொஞ்சங் குறைந்திருக்கிறது" என்று உத்தர முரைத்தனள் கமலா.

மூன்று நாட்கள் கமலா தன்னை மறந்து படுக்கையிலிருந்தாள். நாலாவது நாள் எல்லோரும் ஆனந்தங் கொண்டார்கள். அவளது தாய் அவளருகிலுட்கார்ந்து கொண்டு "இன்று காலை வண்டியில் மாப்பிள்ளை சென்னையிலிருந்து வந்தாராம். அவாத்துக்குப் போயிருக்கிறார். இன்னுங் கொஞ்சநேரத்தில் இங்கே வருவார்" என்றனள்.

தன் மாமனாரிடமிருந்து தந்தி வரவே, விசுவநாதன் அன்று ரயிலில் வந்தபின் தன் பெற்றோரைப் பார்த்து விட்டு ஆகாரத்தை முடித்துக்கொண்டு கமலாவைப் பார்க்க வந்து சேர்ந்தான். விசுவநாதன் தன் பத்தினியின் நெற்றியிற் கையை வைத்துப் பார்த்து, இப்பொழுது உடம்பு எப்படி இருக்கிறது?" என்று கேட்டான்.

"தேவலை."

"நான்கு நாட்களுக்கு முன் எழுதிய கடிதம் வந்து சேர்ந்ததா?"

"ஆமாம், வாஸ்தவமா—"

"என்ன?"

"நான்தான் உங்களுக்கிஷ்டமில்லையே."

ஜுரத்தால் உளருவதாக நினைத்து விசுவநாதன் மௌனமாயிருந்தான்.

"அவள் அதிக அழகாயிருக்கிறாளல்லவா!"

விசுவநாதன் திடுக்கிட்டு, "என்ன! அவள் யார்!"

"உங்களுக்கென்ன ஒன்றுமே தெரியாதோ."

"கமலா! நீ என்ன ஞாபகத்தோடே பேசுகின்றாய்; வாயில் வந்தபடி உளறுகின்றாயே."

"ஈசுவரன் எனக்கு மரணத்தைக் கொடுத்திருந்தால் நன்றாயிருந்திருக்கும். நான் நல்ல ஞாபகத்துடன்தான் பேசுகிறேன். எனது ஜன்மம் இப்படியுமா ஆகவேண்டும்?"

பத்தினியின் கன்னங்களில் வழிந்து ஓடிக்கொண்டிருந்த நீரைத் துடைத்து விசுவநாதன் "கமலா, சங்கதி யாதெனச் சொல். நீ நல்ல நினைவுடனிருக்கிறாயா?" என்றான்.

"பாதகஞ் செய்த இக்கரத்தால் என்னை ஸ்பரிசிக்கவேண்டாம். தூரச் செல்லுங்கள். எனக்கு இந்த ஸ்திதியை வருவித்த அவளிடமேயே செல்லுங்கள்."

விசுவநாதனுக்கு இதன் அந்தரங்கம் இப்பொழுதுதான் தெரிய வந்தது. தனது நிருபமே இவளது அவஸ்தைக்குக் காரணமென அறிந்து சிரித்துக்கொண்டே "பைத்தியக்காரி! பைத்தியக்காரி!! இவ்வளவுதானா சங்கதி?" என்றனன்.

கமலா ஆச்சரியமுற்று, "ஏன்? இல்லையா?" என்றனள். "பேஷ் பேஷ்! நீ யிவ்வளவு பைத்தியக்காரியா! எனக்குத் தெரியவில்லையே இதுவரையிலும்" என்று சொல்லிக்கொண்டே சிரித்தான். கமலாவுக்குக் கொஞ்சம் உயிர் வந்தது. தன் பதியை உற்று நோக்கினாள்.

"அடி பைத்தியமே! இந்த சந்தேகமுண்டாகக் காரணமென்ன? நான் காகிதத்திலெழுதியிருந்தது முதலிலிருந்து கடைசிவரை வாஸ்தவமே. நம் தேசத்தில் இப்பொழுது எங்கும் சுதேசிப் பேச்சே வியாபித்திருக்கிறது. பரதேச வஸ்துவை ஸ்பரிசஞ் செய்யும் பட்சத்தில் மாதுருஹத்தியைக் காட்டிலும் அகோர பாதகமென எல்லோரு மறிந்துள்ளார்கள். போன



மாதம் நானிங்கு வந்திருந்தபோது பரதேசி வஸ்துக்களை ஸ்பரிசஞ் செய்யேனெனவும், பரதேசித் துணிகளைக் கட்டுவதில்லை யெனவும் சபதஞ் செய்தது உனக்கு ஞாபகமிருக்கும். ஆனால் இந்த ஈஸ்டர் லீவில் செல்லமய்யர் வீட்டிற்குப் போயிருந்தபொழுது, என் சிநேகர்கள் என்னைக்கட்டாயப்படுத்தியதால் உன்னிடஞ் செய்துள்ள சபதத்தை விருத்தஞ்செய்து பரதேசி சிகரெட்டு ஒன்றைக் குடித்தேன். பிறகு நான் செய்த குற்றத்தை நினைத்து நினைத்து மனஞ் சகியாது, உனக்கு ஒரு கடிதமெழுதினேன். நீயோ இதைப்பற்றி வேறு விதமாய் எண்ணிவிட்டாய்! இனி நான் புகையூதும் துஷ்ட வழக்கத்தையே கட்டோடு ஒழித்துவிட்டேன். செல்லமய்யாது பெண் லீலா என் தங்கைக்குச் சமானம் என உன்னிடம் நான் பகர்ந்துள்ளதை மறந்து விட்டாயா? சமுசயிப்பது பெண்கள் சுபாவமே!" என்றான் விசுவநாதன்.

கமலா கொண்டிருந்த சமுசயமெல்லாம் தூரவிலகிற்று. "ஸ்திரீகளது சமுசய சுபாவத்தைப் பற்றித் தோஷமாகச் சொல்லுவது வாஸ்தவமே. என்னவானாலும் நாங்கள் அபலைகளே! எங்கள் சுகத்தில் கல்லைப்போட வேறொருவர் வரும் பட்சத்தில் எங்களுக்கு சமுசயமுண்டாகாதிருக்குமா? நாங்கள் இத்தோஷத்திற்குப் பாத்திரமாகின்றோம். நீங்களோ திட மனதுடைய புருஷர்கள். பரதேச சாமான்கள் எங்கும் வியாபிக்க, தேசமாதா தற்சமயமடைந்துள்ள ஸ்திதியை நீங்கள் கண்ணாரப் பார்த்திருந்தும் மறுபடியும் பரதேசப்பொருள்களை உபயோகப்படுத்த ஆசைகொள்ளும் உங்கள் சுபாவத்திற்குத்தோஷமில்லையோ?" என்றனள்.

"கமலா, நீ சொல்லுவது நியாயமே. வாஸ்தவமாகவே நாங்கள் மாதுருத் துரோகிகள், மாதுரு காதகர்கள், பாதகர்கள் தான். ஒரு முறை தவறிவிட்டேன். இனிமேல் இப்பாதகத்தை ஒருபோதுஞ் செய்யேன். இப்படியே, எல்லோருக்கும் உபதேசமுஞ் செய்வேன்," என்று கூறி அவளைச் சமாதானப்படுத்தினான்.

# பெண் கல்வி—ஒரு சம்பாஷணை.

(256-வது பக்கத் தொடர்ச்சி.).

கமலம்:—வெகு நன்றாயிருக்கிறது உன் வார்த்தை! ஆணும் பெண்ணும் பெற்றுச் சம்பந்தம் பண்ணினாற் போதுமா? சதிபதிகள் மனமொத்து சந்தோஷமாய் வாழ்க்கை நடத்த வேண்டாமா? ஒருவர்க்கொருவர் அன்புகொள்ளாது, மக்களைப் பெற்று விட்டால் சரிதானா? பிள்ளை பெறுவதுதானா பெரிது? சதிபதிகளுக்குக் காதல் வேண்டாமா? ஒரு வண்டியில் கட்டிய இரண்டு எருதுகளும் சரியாக இழுத்தாலல்லவா வண்டி நகரும். அப்படி யின்றி ஒன்று ஒரு புறமும், மற்றொன்று மற்றொரு புறமுமிழுத்தால் வண்டி நகருவதெப்படி? அதுபோலச் சம்சாரம்என்ற இல்லற வாழ்க்கையில் கணவன் மனைவி இருவரும் அன்பால் கட்டுப்பட்டவராய், ஒரேவிதக் கருத்தும், நோக்கமுங்கொண்டு ஒற்றுமையுடன் நடக்கவேண்டும். படித்தவனுக்குப்படியாதவள் வாய்த்தால் ஏறுமாறாகவே இருக்கும். சதா அக்குடும்பத்தில் கலகமும், சஞ்சலமுமே குடிகொள்ளும். உன் பெண் படித்தது குறையென்கிறாய். அவள் படித்திருந்ததினாலேயன்றோ உன் வார்த்தையையும் மீறி நல்ல கணவனுக்கு வாழ்க்கைப்பட்டாள். அன்று இராமேசுவரத்திற்கு நாம்

போய் வந்தபோது, மதுரையில் ரயில் தவறி, பணமின்றி, புருஷாள் துணையில்லாமல் அவதிப்பட்டபோது அவள் படித்திருந்ததினாலல்லவா உடனே ஊருக்குத் தந்தியடித்துப் பணம் வரவழைத்துக் கொண்டு ஊர் வந்து சேர்ந்தோம். அதற்குப்பின்னாலல்லவோ நானும் கொஞ்சம்படித்துக்கொள்ள ஆரம்பித்தேன். பெற்றோர் வார்த்தைக்கு உட்பட்டு இஷ்டமில்லாத கணவனுக்கு வாழ்க்கைப் பட்டுத் தன் காலமுழுதும் விசனப்படுவதைவிடப்பெற்றோருக்குஎடுத்துக் கூறி, இஷ்டமான வரனை யடைவது உனக்கு விரோதமாகவா இருக்கிறது? சம்பந்தம் பண்ணுவதற்குச் சொந்தம் வேண்டு மென்கிறாயே. நமது சொந்த விளக்கென்று முத்த மிட்டால் நம்மைச் சுடாமலிருக்குமா? அதுபோல் சொந்தமென்று உபயோகமற்ற மடையனைக் கட்டிக்கொண்டு கஷ்டப்படுவதா? மேலும் நெருங்கிய இரத்த சம்பந்தமுள்ளவர்கள் விவாகம் செய்து கொள்ளலாகாதென்றும், அவ்விதம் செய்து கொள்ளுவதால் பிறக்கும் குழந்தைகள் பலவீனமாயிருக்குமென்றும், ஆதலின் தூர சம்பந்தமே நல்லதென்றும் நேற்று மீனாக்ஷி பத்திரிகையில் படித்துச் சொல்லக் கேட்டேன். ஆகையால், சொந்தத்தை எதிர் பார்க்காமல் போக்கியமுள்ள நல்ல வரனைத் தேடுவதே நியாயம்.

ஜானகி:—என்னடி, சாமாரியாய்ப் பொழிகிறாயே. படித்தவனுக்குப் படித்தவளே வேண்டுமென்கிறாய். என் அகமுடையான் படித்தவராயிருக்கிறார். என்னோடு சதா எந்த விஷயத்திற்கும் ஏறு மாறிட்டு வாது புரிவதுதான் சரியாயிருக்கிறது. எதற்கும் என் கருத்துப்படி ஒத்துவருவதில்லை. இதுதான் படித்ததற்கழகோ? நான் ஒன்று சொன்னால் அவரொன்று சொல்லுகிறார். இந்த வழக்குத்தான் என் ஆயுசுக்கும் தொல்லையாயிருக்கிறது. என் பேச்சின்படி பெரிய மகனுக்குக் கலியாணம் பண்ணினாராம். அந்தப் பெண் படித்தவளல்லவாம். மகனோடு ஏறுமாறாக விருக்கிறாளாம். தினமும் இதை யெடுத்துக்கூறி என் மண்டையை உருட்டுகிறார்.

கமலம்:—பார்த்தாயா ஜானகி! உன் வாயாலேயே நிஜம் வந்து விட்டது. முன்னால் ‘நான் படிக்காமலிருந்தென்ன, குடித்தனம் செய்யவில்லையா?’ என்றாயே. அவர் படித்திருந்து, நீ படிக்காதிருந்ததின் பயனைக் கண்டாயா? அவர் உன் கருத்துக்கு ஒத்து வரவில்லை யென்கிறாய். உன் கருத்து அவ்வளவு சிறந்ததா? அவர் படித்தவர்; மேலும் உத்தியோகத்திலிருந்து கற்றவர்கள் பலரோடு பழகி அதிக அனுபவம் பெற்றவர். உன்னிலும் வயதில் மூத்தவர். அப்படிப்பட்டவருக்கா படிப்பில்லாமல் அடுப்பூதியாயிருக்கும் நீ யோசனை சொல்வது! அதன்படி அவர் ஒத்துவாராதது அவரது குற்றம்! பேஷ்! வெகு நேர்த்தி! உன் மகளுக்குத் தக்க வரனைப் பார்த்துக் குறிப்பிட்டாயே. அதுவே உன் விசாலமான அனுபவ புத்தியை விளக்குகிறது! அதோ மீனாக்ஷியும் வருகிறாள். அவளிடத்தில் சொல்லுவோம் இந்த நியாயத்தை.

(மீனாக்ஷியைப் பார்த்து) வாடி மீனாக்ஷி! நல்ல சமயத்திற்கு நீயும் வந்தாய். உன் சிநேகிதி சுந்தரியின் தாயார் சொல்லும் வார்த்தையைக் கேள்.

ஜானகி:— ஆமாம். அந்த சிறுக்கி சுந்தரிக்கு மீனாக்ஷி ஒத்துக்கு மத்தளமடிப்பவளல்லவோ? இவள் உனக்குத்தான் சாதகமாகப் பேசுவாள்.

மீனாக்ஷி:—அம்மா! அப்படிச் சொல்லாதேயுங்கள். யோசிக்காமல் யார் கட்சியை யொட்டியும் பேசக்கூடாது. யார் சொல்லுகிறது நியாயமாக எனக்குப் படுகிறதோ அதைத்தான் ஆ



தரித்துப் பேசுவேன். நியாயமாகப் பேசுவதில் இன்னாருக்குச் சாதகமென்றும், இன்னாருக்குப் பாதகமென்றும் பார்க்கமாட்டேன். நீங்களேயல்ல. இன்னும் யார் சொன்னாலும் நியாயத்தை நான் மறுக்கமாட்டேன். இது கிடக்கட்டும். நீங்கள் பேசின விஷயமென்ன? நல்ல சந்தர்ப்பத்தில் நான் வந்து கெடுத்துவிட்டேன். மன்னியுங்கள்.

கமலம்:—மன்னிப்பதென்ன? நீ வந்ததுதான் நல்லதாயிற்றே. இந்த அம்மாள் பெண்கல்வி கூடாதென்று வெறுக்கிறாள். தன் மகள் படித்தது கெடுதியாம். அதனாலேதான் சுந்தரி அப்பாஜியை வேண்டாமென்று சுந்தரனை மணந்தாளாம். இந்த அம்மாளின் இஷ்டப்படி மூத்தமகனுக்கு வந்த மனைவி படிக்காதவளாயிருப்பதால், சதா கணவனோடு கலகம் செய்கிறாளென்று, வீட்டுக்காரர் படித்தவராயிருந்தும் இந்த அம்மாளின் வார்த்தையைக் கேட்டு ஒத்து நடப்பதில்லையாம். இவ்விதமெல்லாம் முறையிடுகிறாள்.

ஜானகி:—ஆமாம், நான்முறையிடுவதென்ன? உள்ளதைத்தானே சொன்னேன். பெண்கள் படித்து உத்தியோகம் செய்யப்போகிறார்களா? ‘அடுப்பூதிக்குப் படிப்பேன்?’ என்று பெரியோர் சொல்லுவார்கள். படிக்கத் தெரிந்தால் பெண்கள் கள்ளக் கடிதங்கள் எழுதவும், சுதந்திரமாய் நடக்கவும், பெரியோர்களை அலட்சியம் செய்யவும், படிக்காத கணவனாயின் அவனை மதிக்காமலிருக்கவும் தலைப்பட்டுவிடுவார்கள். அதிகம் சொல்லுவானேன்? எங்களுக்கு விவாகமாகி இத்தனை வருஷங்களாயின. புருஷன் மனைவி நேர் நின்று பேசியறியோம். நேற்றுப் பிறந்த சிறுக்கி சுந்தரி, கலியாணமாகி ஆறு மாதங்கூட ஆகவில்லை, கணவனுக்குக் கடிதங்களெழுதுவதும், அவன் புத்தகங்களனுப்ப வாங்கிப் படிப்பதும், கணவனைக் கண்டால் பிறருக்குத் தெரியாமல் நெருங்கித் தாராளமாகப் பேசுவதும், சிரிப்பதும், அவனோடு சேர்ந்து உலாவுவதும், அப்பப்ப! படிப்பு பல விதமும் செய்து வைக்கிறது. பெரியவாள் காலத்திலுண்டா இந்த விந்தை யெல்லாம்?

மீனாக்ஷி:—அம்மா! நிறுத்துங்கள். நீங்கள் கூறியவை யாவுமுணர்ந்தேன். இதைப் பற்றி என் மனதிற் படும் விஷயங்களைக் கூறுகிறேன். சற்று பொறுமையாய்க் கேளுங்கள். கேட்டு முடிந்தபின் உங்கள் கருத்தைச் சொல்லுங்கள். அபிப்பிராயபேதத்திற்குக்கோபியாதீர்கள். சாந்தத்தோடு தர்க்கித்தாலன்றி உண்மை யறிய முடியாது. எவரும் பிறக்கும் போதே யாவுமுணர்ந்தவராய்ப் பிறப்பதில்லை. அவ்வப்போது பலரிடம் கேட்டும், கற்றும், அனுபவித்துமே அறிவு முதிர்ச்சி பெறவேண்டும். இதனால் ஒருவர் கூறும் விஷயம் மற்றொருவருக்கு விரோதமாய்த்தோன்றும்; அவரும் உண்மையை யுணர்ந்தால் அதை ஒப்புக்கொள்ளுவார். அதிருக்கட்டும். முதலில் ‘பெண்கல்வி’ அவசியந்தானா என்பதைச் சிறிது விசாரிப்போம்.

உலகில் பொதுவாக மக்கள் அடையவேண்டிய புருஷார்த்தங்களை யடைவதற்குச் சாதகமாயிருப்பது கல்வியேயாகும்.

கல்விகற்றவரேகண்களுடையவர்களென்றும், கல்லாதவர்கள் குருடர்களே யென்றும், கல்லாதாரது முகத்திலுள்ள கண்கள் புண்களெனவும், கற்றவர்களே மக்களெனவும், கல்லாதவர்கள் விலங்குகளுக்குச் சமானமானவர்களென்றும் பலவகைகளில் மக்களுக்குக் கல்வியின் அவசியத்தைப் பெரியோர்கள் கூறிச் சென்றுள்ளார்கள். கல்வி கற்றால் அறிவு விரிவடையும். அதனால் உயரிய நன்மைகளைப் பெறச் சாதகமுண்டாகிறது. கல்வி கற்பது உத்தியோ

கத்திற்காகவன்று. அறிவு வளர்ச்சிக்கேயாம். இவ்வளவு கூறியதிலிருந்தே கல்வி அவசியமென்றறியலாம்.

இதில், கல்வி ஆடவர்களுக்குத்தான் அவசியமென்று எங்கும் பிரித்துக் கூறப்படவில்லை; இரு பாலாருக்கும் பொதுவாகவே கூறப்பட்டுள்ளது. மேலும்,

குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்ச ளழகும் அழகல்ல—நெஞ்சத்து
நல்லம் யாமென்னும் நடுவு நிலைமையாற்
கல்வி யழகே யழகு"

என்ற நாலடியார் வசனத்தில் குஞ்சியழகு, மஞ்சளழகு என்று குறிப்பிட்டுள்ளவற்றால், அவ்வழகுகள் பிரத்தியேகமாகப் பெண்களுக்கே உரித்தானதால், பெண்களுக்கும் அக்காலத்தில் கல்வி யவசியமெனப் பாராட்டப்பட்டுவந்திருப்பதாயறியலாம். மேலும் கார்க்கி, மைத்திரேயி, விசுவவரை என்ற மாதர் சிரோமணிகள் ருக்வேத காலத்திலேயே மகா பண்டிதைகளாய் விளங்கிச் சில வேத மந்திரங்களையும் இயற்றியிருக்கக் காண்கிறோம். புராண காலத்திலும், அதற்குப் பிற்பட்டகாலத்திலும் கற்று வல்ல பெண்பாலார் அநேகரிருந்ததாகவும், அநேகப் பெண்மணிகள் யுத்தப் பயிற்சி முதலாய்ப் பெற்று அரசையும் ஆண்டு வந்திருக்கிறார்களென்றும் நாமறிந்து வருகிறோம். ஏதோ சில காரணங்களால் இடையிற் சில நூற்றாண்டுகளாக நம் பெண்மணிகளிடத்தில் அதிகம் கல்வி பரவாதிருந்ததைக் குறித்தே, பெண்கள் படிப்பது புதிய வழக்கமெனச் சிலர் அறியாமையால் தீர்மானிக்கின்றனர். தமிழ் நாட்டுக் கவிஞர்களுள் சிறந்து விளங்கிப் பல நீதி நூல்களை யியற்றி, அழியாப் புகழ் படைத்துள்ள ஔவைப் பிராட்டியார் நம்மைப்போல் பெண்பாலல்லவா? ஆண்டாள், காரைக்காலம்மை போன்றவர்கள் கற்றவர்களல்லவா? இவ்விதமிருக்க ஒரே போக்காய்ப் பெண்களுக்குப் படிப்பு கூடாதென்று பேசுபவர் வார்த்தை எவ்விதம் மதிக்கத்தக்கதாகும்?

பெண்கள் படித்தால் கணவன்மாரை மதிப்பதில்லை யென்கிறார் சிலர். இது முற்றுந் தவறும். படிக்காத ஒரு பெண்ணும், தன் கணவன் தன்னிலும் பேதையாயிருப்பானேல், அவனை மதிப்பதில்லை. அவ்விதமே படித்தவர்களிலும் சில பெண்கள் தங்கணவரது அறியாமையைக் கண்டு அவரை அவமதிக்கக் கூடும். அதனாலேயே படித்த பெண்கள் அனைவரும் கணவன்மாரை அவமதிப்பார்களென்று எப்படிச் சொல்லலாம்? அதற்காகவே படித்த பெண்ணுக்கு அதற்குத் தகுந்தபடி படித்தவனைத்தேடி மணம் முடிக்க வேண்டுமென்பது. கிற்க.

படித்த பெண்கள் கள்ளக் கடிதங்களெழுதுவார்களென்று சொல்லுகிறீர்கள். இதைவிடப் பரிகாசமான வார்த்தைவேறொன்றில்லை. நன்கு படித்த பெண்கள் நல்ல நீதி நூல்களை வாசித்து ஞானமடைவார்களாதலால் அப்படிப்பட்டவர்கள் தீய நடத்தையைக் கனவிலும் கருதமாட்டார். ஆதலால், கல்வியின்மீது குறை கூறுதல் பொருத்தமானதல்ல.

ஜானகியம்மாள் அவர்கள் சுந்தரியின்மீதொரு குறை கூறுகிறார்கள். ஒரு பெண் அந்நிய புருஷனோடு பேசுவதுதான் தவறெனப்படும், அவ்



விதமின்றித் தன் கணவனோடு பேசவும், கடிதமெழுதவும், நெருங்கிப் பழகவுமிருந்தால் அஃது குற்றமாகுமா? கலியாணம் செய்வது கணவனும் மனைவியும் சேர்ந்து சந்தோஷமாயும், சுகமாயும் ஒற்றுமையுடன் வாழ்வதற்குத்தானே. அப்படிக்கின்றி நாயும் பேயுமாய்ப் பிரிந்து வாழ்வதற்காகவா? அநேகப் பெண்கள் தங்கணவரோடு நெருங்கிப் பழகாது மூடத்தனமான மரியாதையால் விலகி நடந்து வருவதாலேயே, அப்புருஷர்கள் சம்சாரத்தினிடத்திற் சலிப்படைந்து, தம்முடன் கொஞ்சிக் குலாவி நடிப்புக் காட்டும் வேசிகளின் வலையில் விழுகின்றனர். வேசிகள் சங்கீதம் முதலியவற்றையறிந்திருப்பதால் அதன் வசப்படுவோர் பலர் அவர்களை யடைகிறார்கள். ஆகையால், மனைவிகளாகிய பெண்கள் படித்தும், சங்கீதம் முதலிய வறிந்தும் நாயகன்மாரை நெருங்கி, அவரது பிரியத்திற்கும் பாத்திராய் நடந்தால் முற்கூறியபடி கணவன்மார்கள் இவர்களை வெறுத்து வேசிகளை நாடக் கனவிலுங் கருதார்.

கல்வி கற்றிருப்பதால் பெண்கள் வைத்திய சாஸ்திரங்களை யுணரவும், தம் குழந்தைகளை நல்ல முறையில் வளர்க்கவும், குடும்பச் செலவுகளை நேர்மையாய் நிர்வகிக்கவும், தைரியமுடையவர்களாய் வாழவும், கணவன்மாரது கருத்துக்கிசைந்து நடந்து வேண்டிய சமயத்தில் தக்க யோசனைகளை எடுத்துக் கூறவும், காலத்தை வீண் வம்பு வார்த்தைகளிற் செலவிடாது பயன் தரத்தக்க நல்ல நூல்களை மென்மேலும் படித்து அறிவை விசாலித்துக் கொள்ளவும், இன்னும் பல நன்மைகளை யடையவும் சாதகமுண்டாகிறது.

ஜானகி:—அம்மா மீனாக்ஷி! நீ சொல்லுவதெல்லாம் உண்மையே உன் வார்த்தைகள் கிரமமா யிருக்கின்றன. வீணாய் உங்கள் மீது கோபித்தேன். படிப்பு வேண்டியதுதான். ஆனால், அதிக கர்வங்கொண்டு அதனால் நடக்கக்கூடா தென்பதுதான் என் கொள்கை. இன்னுஞ் சொல், கேட்போம்.

மீனாக்ஷி:—சரி, என் பர்த்தா வரும் நேரமாயிற்று. மற்ற விஷயங்கள் நாளைக்குப் பேசிக் கொள்ளுவோம்.

கமலம்:—ஆனால் சரி போய் வாருங்கள். வந்தனம்.

---

தென் காசியிலிருந்து ஸ்ரீமதி கிருஷ்ணம்மா எழுதுகிறார்:—

20—1—1926.

சகோதரி, வி. பாலம்மாளுக்கு.

தாங்கள் எழுதிவரும் 'சிந்தாமணி' படிக்கப்படிக்க வெகு ஆனந்தத்தையும், உற்சாகத்தையும் தந்து மனதிற்கு சதாகாலமும் சந்தோஷத்தைக் கொடுக்கிறதென்பதில் ஆக்ஷேபணையுண்டோ! இன்னும் அதில் ஸாக்ஷாத் ரகுவீரனுடைய மகிமையை "ஸுபோதராம சரிதம்" என்னும் ராமாயண கதாரூபமாக ஸம்ஸ்க்ருத ஸ்லோகமும் தமிழ் உரையுமாகத் தாங்களியற்றி 'சிந்தாமணியில்' வெளியிடுவதானது சிந்தாமணி அபிமானிகளும், மற்றுள்ளவர்களும் புகழத்தக்கதென்பதற்கு என் ஐயன் ராமச்சந்திரமூர்த்தியே சாக்ஷி: மேலும் சிந்தாமணியை உலகமெங்கும் பரவச்செய்து ஸ்வயப்பிரகாசமாய் விளங்கச் செய்கிறீனென்பதில் எனக்கு எல்லையிலா ஆனந்தமுண்டாகிறது.

190374



# சிந்தாமணியைப் பற்றிய சில அபிப்பிராயங்கள்.

I.

அன்பார்ந்த அம்மா!

சிந்தாமணியில் தாங்கள் எழுதிவரும் தலையங்கங்களையும் சிறு கதைகளையும் படிக்குங்கால் மனதிற்குண்டாகும் சந்தோஷம் எழுதிமுடியாது. தமிழ்நாட்டுப் பெண்மணிகளின் முன்னேற்றங் கருதி தாங்கள் தற்சமயம் உழைக்க முன்வந்ததற்கு என் போன்றோர் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றனர்.

II.

சகோதரியே!

தற்காலம் உபயோகமற்ற பல புத்தகங்களைப் படித்து மனஞ்சலித்திருந்த சமயம் தங்கள் சிந்தாமணியைக் கண்டதிலிருந்து மனதிற்குப் புதிய உற்சாகமும் உணர்ச்சியும் உண்டாகின்றது. தங்களால் எழுதப்படும் கதைகளைப் படிப்பதிலிருந்து நமது சமூகத்தின் நிலைமையானது எதிர்காலத்தில் மேன்மை யுற்றிருக்குமென்ற நம்பிக்கையுண்டாகின்றது

III

அன்பார்ந்த அம்மணி!

சிந்தாமணி கைக்குக் கிடைத்ததும் வீட்டிலுள்ள அனைவரும் ஏககாலத்தில் படிக்க விரும்புகின்றனர். சிந்தாமணியைத் தபால்காரனிடமிருந்து வாங்கிக்கொள்வதில் ஏற்படும் போட்டியைக் கண்டு நான் சந்தோஷிப்பது வழக்கம்.

IV

அம்மையே!

சிந்தாமணியை நான் தொடர்ச்சியாகப் படித்துவருவதுடன் என் வீட்டிலுள்ள பெரியோர்களுக்கும் படித்துக் காட்டுவது வழக்கம். "புருஷோத்தமன் அல்லது புன் சிரிப்பு" என்ற கதையைப்படிக்கும்போது கதையின் முடிவு யாதாயிருக்குமென்று மனமடைந்த தவிப்பை என்னென்று எழுதுவேன்! ஜனசமூக முன்னேற்றத்திற்கான வழியை யமைத்த அழகிய கட்டுரைகளைச் சிந்தாமணியில் வெளியிடுதல் போற்றத்தக்கது. சிந்தாமணி நீடூழி வாழ்வதாக!

V

பத்திராதிபரே!

சிந்தாமணியைக் கையிலெடுத்தால் முழுதும் படிக்கும் வரை கீழேவைக்க மனம் வருவதில்லை. அடுத்த சஞ்சிகைவரும் தினத்தை எதிர்பார்த்துத் தேதிகளை கவனிப்பதே எனக்கு வேலையாகவிருக்கிறது.